கல்கி

KALKI 24.12.2000
ரூ. 5.00



மம்மூட்டியின்
'அம்பேத்கர்'
அனுபவங்கள்

பா(ப)டம்: என் சகியே



கோடிட்ட இடங்களை நிரப்புக:–

1) அதிர்ஷ்டவசமாக தமிழ் சினிமா மறந்து போய்விட்ட லெமூரியா காலத்து பழிவாங்கும் கதையை தூசி தட்டி படமாக்கியிருப்பது.....................!

2) பழிவாங்கும் கதையில் வித்தியாசம் வேண்டும் என்று ஹீரோயின் கையில் கத்தி, கபடா, துப்பாக்கி கொடுத்து சகட்டுமேனிக்குக் கொலை செய்ய விட்டிருக்கும் ஐடியா.....................! (உபயம்: ஹிந்தி படம் ஃபாசிகர்)

3) பால்வடியும் முகத்தோடு ஹைஸ்கூல் மாணவி கணக்காக இருக்கும் திவ்யாஸ்ரீயை ஒரு ப்ரீ-பிளான்டு மர்டரராக நம்மைக் கற்பனை செய்யச் சொல்வது.....................!

4) ஒரு கம்பெனியின் உதவிமேனேஜராக சேரும் கதாநாயகி ஷார்ட்ஸுடனும் ஸ்லீவ்லெஸ்ஸுடனுமாக ஆபீஸிற்கு வருவது.....................!

5) தொழிலதிபர் ராஜனின் மூத்த மகன், மது-மாதுவிற்கு அடிமை என்பதைச் சொல்ல பல ரீல்களைச் செலவு செய்துவிட்டுத் திரும்பத் திரும்ப அவன் மோசம், குடிகாரன் தறுதலை என்று பல கேரக்டர்களைப் புலம்ப விட்டிருப்பது.....................!

6) அடிக்கடி நடக்கிற கொலைகள் தொடர்பாக போலீஸ் மருந்துக்குக் கூட யாரையும் கைது செய்யாமல் இருப்பது.....................!

7) முன்னுக்குப்பின் முரணாக எடிட் செய்திருக்கிறார்களா அல்லது 'சீக்வென்ஸ்'ஸே இப்படித்தானா என்று காட்சிகளைப் பார்க்கும்போது நமக்கு வருவது ....!

8) படத்தயாரிப்பாளர் ராஜன் நடிப்பில் தன் கைவண்ணத்தை பரீட்சித்துப் பார்க்க நினைத்திருப்பது நமது...........!

விடைகள்:

1) வயிற்றெரிச்சல் 2) இரவல் 3) டூமச்
4) அபத்தம் 5) மண்டையிடி 6) விந்தை
7) மண்டைக்குடைச்சல் 8) தலையெழுத்து

— விஷ்வல்தாசன்

கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com   ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

மேடையில் முறைச்சா

கச்சேரி மேடையில் வயலின்–மிருதங்கக்காரர்கள் ஒருவருக்கொருவர் முறைத்துக் கொண்டு பிரதான கலைஞரைத் திண்டாட விடுவதுண்டு. அவர்கள் கணவன்–மனைவியாக வேறு இருந்துவிட்டால் கச்சேரியின் கதி என்னாவது...? சில மேடை ஜோடிகளிடம் உரையாடிப் பார்த்தோம்.

“நீங்க நினைக்கற மாதிரி வம்பு வழக்கு வரும்னா எங்களைச் சேர்த்து சேர்த்துக் கூப்பிடவே மாட்டார்களே!” என்கின்றனர் நீலா–ஜெயகுமார் தம்பதி. சேர்ந்து வாசிக்கும் வாய்ப்பு திரும்பத் திரும்ப அமைந்து அதுவே நடைமுறையாக ஆகிவிட்டது என்கின்றனர்.

ஹேமமாலினி–எஸ். ரங்கநாதன் மற்றொரு வயலின்–மிருதங்க ஜோடி.

‘‘நீங்கள் வாசிக்கும்போது பார்க்கவே நன்றாக இருக்கு என்று கருணா புருஷோத்தமன் மாதிரி சீனியர் வித்வான்கள் கூட சந்தோஷமாச் சொல்றாங்க...’’ என்பது இந்த தம்பதியின் பெருமிதம்.

‘வீட்டுச் சண்டைகள் மேடைக்கும் மேடை மனஸ்தாபங்கள் வீட்டுக்கும் மாறி மாறி வந்து கொண்டேயிருக்காதா...?’ என்று கேட்டால்,

‘‘இல்லை! மேடையில் ஏறிட்டா இரண்டு பேருமே ப்ரொஃபெஷனல் கலைஞர்கள் ஆயிடுவோம். அதிலும் நான் ரொம்ப சீரியஸா ஆயிடுவேன். மத்ததெல்லாம் ஞாபகமே வராது” என்பது நீலாவின் விளக்கம்.

“அதுக்காக ஒருத்தரையொருத்தர் விமர்சிச்சுக்காம இருக்க மாட்டோம்” என்று இடை மறிக்கிறார் ஜெயகுமார்.

“ஐ அட்மையர் ஹிம்! அவர் வாசிப்பு எனக்கு அவ்வளவு பிடிக்கும்போது சேர்ந்து மேடை ஏறுறது எவ்வளவு மகிழ்ச்சியான விஷயம்”



• நீலா-ஜெயகுமார்

• ஹேமமாலினி-ரங்கநாதன், வேங்கட சேகர்

உருகிவிடத் தயாராயிருக்கிறார் ஹேமமாலினி.


“கணக்கெல்லாம் முன்னாடியே சொல்லிக் கொடுத்துத் தயார் பண்ணிக்க வசதிதானே”– பல வருடங்களாக பூர்ணா சிவா(வயலின்)வுடன்

சாப்பாடு கோவிந்தா!

அப்புறம் வீட்டுக்குப் போனா சாப்பாடு கிடைக் காதே.. ஐ'ம் வெரி வொரீட். ஜாக்கிரதையா இருக்கிறதுன்னு தீர்மானம் பண்ணிட்டேன்" முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டு ஜே. வைத்தியநாதன் தமாஷ் பண்ண, "அதெல்லாம் ஒண்ணும் ஆகாது. எந்த மனஸ்தாபமும் வராது" என்று அவசரமாக மறுக்கிறார் பூர்ணா சிவா.

அழுத்தமாக வாசிக்கவேண்டும், சில இடங் களில் வேகம் அதிகப்படுத்த வேண்டும் என் றெல்லாம் ஏற்கெனவே நிறைய அறிவுரை வைத்தியநாதன் கொடுத்திருக்கிறாராம்.

"இனிமேல் இன்னும் கவனமா இருக் கணும். ஜே. வைத்தியநாதன் வைஃப் இப்படியா வாசிக்கிறது என்று கேட்டுவிடக் கூடாது பாருங்கள்.. இதற்கு பூர்ணா இன்னும் கடுமையா உழைக்கணும்... தயாரா?" என்று சவாலாகக் கேட்க பூர்ணா 'டபுள் ஓகே' என்கிறார்!



• வைத்தியநாதன்-பூர்ணா



வயலின் நீலாவை மிரு தங்கம் ஜெயகுமாருக்குத் திருமணம் செய்து வைத் தால் நல்ல அண்டர்ஸ் டாண்டிங்குடன் வாழ்க்கை நடத்துவார் கள் என்பது பெற்றோர் எடுத்த முடிவாம்.

"அந்த ஒத்துழைப்பு பரஸ்பரம் இருப்பதால் தான் கிட்டத்தட்ட இயந்திர கச்சிதத்துடன் வாழ்க்கையை அமைத் துக் கொண்டு குழந் தைக்கும் நேரம் ஒதுக்க முடிகிறது'' என்கின் றனர்.

கணவன் மனைவி இருவருமே வருமானத்துக் குக் கச்சேரிகளை நம்பியிருப் பது..?

''எங்கள் இரண்டு பேர் குடும்பங்களிலும் நிறைய இசைக் கலைஞர்கள். அதனால் வருமானம் எப்போதும் ஒரே சீராக இருக்காது என்பது தெரியும். அதனாலேயே பழகி யும் போய்விட்டது. மகிழ்ச்சியாய் இருக்க முடிகிறது. கலைஞர்களுக்குக் கிடைக்கும் மதிப்பும் மரியாதையும் ஒரே சீராக இருக் கிறதே!" என்கிறார் ரங்கநாதன்.

சேர்ந்து வாசித்து வரும் ஜே. வைத்யநாதன் (மிருதங்கம்) சொல்கிறார். இந்த ஜோடிக்கு விரைவில் திருமணம் நடக்க விருக்கிறது.

திருமணத்துக்குப் பிறகும் இந்த இணக்கம் மேடையில் தொடருமா? என்றால் "பின்னே..?

— சித்தார்த்

படங்கள்: ஸ்ரீஹரி



நூற்றுக்கணக்கான வருஷங்களாக நமது வீடுகளின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்து கொண்டிருப்பவர்கள் நமது தெரு ஓரத்தில் இருக்கும் சின்னஞ்சிறு மளிகைக்கடைக்காரர்கள். இந்த மரபை உடைத்தெறிந்து சாதனை படைத்திருப்பவர்கள் 'புட் வர்ல்ட்' கடை உரிமையாளர்கள். அதன் தலைவர் மொஹபாத்ரா, கல்கி வாசகர்களிடம் வெற்றிக்கதையைப் புட்டு புட்டு வைக்கிறார், வியாபார ரகசியம் என்று எதையும் மறைக்காமல்!

அமோகமான வெற்றியை அடைந்திருக்கும் 'செயின் ஸ்டோர்' இன் தலைவர் என்கிற ரீதியில் உங்கள் மனநிலை எப்படி இருக்கிறது?

4½ வருடங்கள் முன்பு சி.பி. ராமசாமி சாலையில் எங்கள் முதல் கிளையைத் தொடங்கினோம், இன்று ஐம்பதாவது கிளையைத் துவங்க இருக்கிறோம். நிச்சயம் பெருமையாக இருக்கிறது. இதில் என்ன சந்தேகம் இருக்க முடியும்? நாங்கள் ஸ்பென்ஸர் கம்பெனியை விலைக்கு வாங்கியபோது, அவர்கள் ஒரு வருடத்தில் செய்த விற்பனையை நாங்கள் இப்போது மூன்றே நாட்களில் செய்து விடுகிறோம். இது பெரிய விஷயம் அல்லவா?

ஆனால் ஒன்று சொல்ல வேண்டும் 1947ல் ஸ்பென்ஸர் கம்பெனி 50 கிளைகளை நடத்தி கொடி கட்டிப் பறந்து கொண்டு தான் இருந்தது. சுதந்தரம் வந்தவுடன்தான் வியாபாரம் படுத்துவிட்டது. அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று, அந்தக் கம்பெனியின் அனைத்து வாடிக்கையாளர்களும் ஐரோப்பியர்கள். சுதந்தரம் வந்தவுடன் எல்லோரும் ஒட்டுமொத்தமாக

வாழ்க வாழ்க, குடும்பத் தலைவிகள் வாழ்க!



வெளியேறி விட்டார்கள். இரண்டு, ஸ்பென்ஸர் கம்பெனி விற்ற பொருட்கள் அத்தனையும் இறக்குமதி செய்யப்பட்டவை. சுதந்தரம் வந்தவுடன் அரசாங்கம் இறக்குமதிகளை அறவே ஒழித்தது. பலன், கம்பெனி நொடிந்துவிட்டது.

தெருவிற்கு ஒரு மளிகைக்கடை; அந்தத் தெருவில் உள்ள அனைத்து குடும்பங்களையும் மூன்று தலைமுறைகளாகத் தெரிந்து வைத்திருக்கும் உரிமையாளர்; வாங்கிய சாமான்களுக்கு மாதக் கடைசியில் பணம் கொடுத்தால் போதும் என்ற சலுகை வாடிக்கையாளர்களுக்கு; இந்தச் சூழ்நிலையில்தான் நீங்கள் வியாபாரத்தைத் தொடங்கினீர்கள். ஆனால் இன்று, உங்கள் கிளையைச் சுற்றி இருக்கும் அனைத்து மளிகைக்கடைக்காரர்களும் 40 சதவீதம் வியாபாரம் குறைந்து விட்டது என்று புலம்புகிறார்கள். இது எப்படிச் சாத்தியமானது?

(பலமாகச் சிரிக்கிறார்) 'ஃபுட் வர்ல்டு' ஐத் திறக்க முடிவு செய்யும் முன்பு நீங்கள் சொன்ன அனைத்து விஷயங்களைப் பற்றியும் நாங்கள் இரண்டு வருடத்திற்கு ஆராய்ச்சி செய்தோம். அதன் முக்கியமான கண்டுபிடிப்பு - ஒரு குடும்பத் தலைவிக்கு மளிகைக் கடைகளைப் பொறுத்த வரை மூன்று குறைபாடுகள் இருந்தன என்பது.

ஒன்று, டி.வி.யில் ஒரு விளம்பரத்தைப் பார்த்துவிட்டு அடுத்த நாள் மளிகைக் கடையில் போய் அது வேண்டும் என்று கேட்டால் அந்தச் சாமான் அவளுக்குக் கிடைக்கவில்லை. கிடைக்காத காரணம் நியாயமானதுதான் - ஒரு சிறிய மளிகைக் கடை எப்படி 2000 விதமான பொருட்களை வைத்துக் கொள்ள முடியும்? இருப்பினும் அவளுக்கு அது பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது.

இரண்டு, கடைக்காரப் பையனிடம் 'அதை எடுத்துக் காட்டு இதை எடுத்துக் காட்டு என்று சொல்வதைப் பெரிய சங்கடமாக நினைத்தாள். அதிகபட்சம் மூன்று அல்லது நான்கு வகைகளை எடுத்துக்காட்டச் சொல்லலாம். அதற்குப் பிறகு ஏதாவது ஒன்றை வாங்கியே ஆக வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகிறதல்லவா? இது அவளுக்குச் சுதந்திரமாக ஷாப்பிங் செய்ய முடியவில்லையே என்ற ஏக்கத்தைக் கொடுத்தது.

மூன்று, ஒரு கிலோ பருப்பு வாங்கினாள் என்று வைத்துக் கொள்வோம். அது 900-

950 கிராம் எடைதான் இருக்கும் என்று அவன் உள்ளுணர்வு சொல்லியது. அதை அவன் பொறுத்துக் கொண்டாள் என்றாலும் ஒரு சிறிய அளவில் ஏமாற்றப்படுகிறோம் என்கிற உறுத்தல் அவளுக்கு இருந்துகொண்டே இருந்தது.

இந்த மூன்று குறைபாடுகளும் அவன் 'ஃபுட் - வர்ல்டு' போன்ற ஒரு கடைக்கு தயாராகி விட்டாள் என்று உணர்த்தின. மூன்று குறைபாடுகளையும் அறவே ஒழித்தவுடன் வெற்றி தானாக வந்து சேர்ந்தது.

மாதத்திற்கு ஒருமுறை பணத்தைச் செட்டில் பண்ணுவதைப் பற்றிச் சொன்னீர்கள். ஒரு விஷயம் தெரியுமா? குடும்பத் தலைவிகளில் 10 சதவீதத்தினர்தான் இந்த வசதியைப் பெரிதாக நினைக்கிறார்கள். 90 சதவீதத்தினர் அப்போதைக்கு அப்போது பணம் கொடுத்து வாங்குபவர்களே!

'புட் வர்ல்டு' தொடங்கப்படுவதற்கு முன் இரண்டு, மூன்று

> **'செயின்' ஸ்டோர்கள் திறக்கும்போது மத்தியவர்க்கத்தில் இருப்பவர்களை வாடிக்கையாளர்களாக ஆக்க வேண்டும். அதுதான் முக்கியம்.**

பேர் ஏற்கனவே 'செயின் ஸ்டோர்'களைத் திறந்து தோல்வி அடைந்துவிட்டார்கள். அவர்களின் தோல்விக்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?

அவர்கள் எல்லோரும் ஒரே விஷயத்தில் தவறு செய்துவிட்டார்கள். அது, பொருட்களின் விலையில். ஒரு பெரிய இடத்தை வாடகைக்கு எடுத்து, தடபுடலாக லைட்டிங் செய்து, குளிர்ச்சாதன வசதி பொருத்தி, பொருட்களைப் பிரமாதமாக டிஸ்ப்ளே செய்துவிட்டால் போதும், 5 சதவீத விலை ஏற்றத்தை வாடிக்கையாளர்கள் பெரிதுபடுத்த மாட்டார்கள் என்று தப்புக் கணக்கு போட்டுவிட்டார்கள். 2000 ரூபாய்க்குச் சாமான் வாங்கினால் 5 சதவீதம் என்பது வெறும் 100 ரூபாய்தானே இது என்ன பிரமாதம் என்று எண்ணி விட்டார்கள். 'நில்கிரீஸ்' இல் எல்லாப் பொருட்களுமே விலை அதிகம்தான், அவர்கள் வெற்றி பெறவில்லையா என்று வாதம் செய்தார்கள். ஆனால் 'நில்கிரீஸ்' விஷயத்தில் லாஜிக்கே வேறு. அதன் வாடிக்கையாளர்கள் அனைவருமே உயர்மட்டத்தைச் சேர்ந்தவர்கள். கண்ணை மூடிக்கொண்டு விலை கொடுத்து வாங்கும் சக்தி உடையவர்கள். ஒரே ஒரு கடை நடத்தினால் போதும் என்கிற பட்சத்தில் உயர்மட்ட வாடிக்கையாளர்களை மட்டுமே நம்பி கடை ஆரம்பிக்கலாம். ஆனால் ஒரு 10 கடைகள் திறக்க நினைக்கும்போது மத்திய வர்க்கத்தில் உள்ளவர்களை வாடிக்கையாளர்கள் ஆக்க வேண்டும். இந்த வர்க்கத்தில் இருப்பவர்களுக்குத் தரத்தை மட்டுமே சிந்தித்தால் கட்டுப்படி ஆகாது, விலையும் முக்கியம். 5% சதவீத விலை ஏற்றம் என்பது அவர்களுக்குப் பெரிய விஷயம்தான்.

மற்ற 'செயின் ஸ்டோர்'களுடைய தோல்வியை ஆராய்ந்தோம். அதை எங்களுடைய வெற்றியாக மாற்றிக் கொண்டோம். கோயமுத்தூரில் ஏற்கனவே இரண்டு கடைகள் இருக்கின்றன. கூடிய சீக்கிரம் இன்னும் இரண்டு கடைகள் திறக்கப் போகிறோம். தவிர திருப்பூரிலும் ஒன்று வரப் போகிறது. கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு மாவட்டத்தையும் ஊடுருவப் போகிறோம்.

ஒரு மளிகைக் கடையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் 'ஃபுட் வர்ல்ட்' போன்ற கடையை நடத்த பன்மடங்கு செலவாகும். விலையை உயர்த்தாமல் எப்படிச் சமாளிக்கிறீர்கள்?

1000 ரூபாய் சம்பளத்தில் ஒரு உதவியாளரை வைத்துக்கொண்டு ஒரு மளிகைக் கடைக்காரர் கடையை நடத்தி விடுவார். ஆனால் விற்பனையில் இருக்கும் ஒவ்வொரு ஊழியருக்கும் நாங்கள் தரும் குறைந்தபட்ச சம்பளம் 4000 ரூபாய். நீங்கள் சொல்வது போல எங்கள் செலவுகள் அதிகம்தான்.

விலையை ஏற்றக் கூடாது என்று முடிவு செய்தாயிற்று. பின், கூடுதலான செலவுகளைச் சமாளிப்பது எப்படி?

முதலில் எவ்வளவு நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்று விலையை ஏற்றாமல் பொருட்களை விற்பனை செய்தோம். கூடுதல் வசதி, ஆனால் விலையில் வித்தியாசம் இல்லை என்றதும் மளிகைக்கடைகளின் வாடிக்கையாளர்கள் கொஞ்சம் கொஞ்சமாக எங்களிடம் வர ஆரம்பித்தார்கள். அவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்தவுடன் இடையிலுள்ள வியாபாரிகளை 'பை-பாஸ்' செய்துவிட்டு நேரே

உற்பத்தியாளர்களிடம் போனோம். டஜன் கணக்கில் வாங்க வேண்டிய இடத்தில் ஒரு லாரி லோடு வாங்குகிறோம், எங்களுக்கு விலையைக் குறைத்துத் தாருங்கள் என்று பேரம் செய்தோம். விலை குறைந்தது. கூடுதல் செலவுகளைச் சுலபமாக சமாளிக்க வழியும் பிறந்தது.

நீங்கள் விற்கும் பொருட்களின் தரத்தை நேரடியாகச் சோதிப்பதுண்டா?

நிச்சயமாக. அரிசியை எடுத்துக்கொள் ளுங்கள். ஒரு பருக்கையின் அளவு, உடைந்த பருக்கைகளின் சதவீதம், உமிகளின் சதவீதம் போன்ற அளவுகோல்களை வைத்து தரத்தை அடிக்கடி சோதிப்பதுண்டு.

ஆயிரம் ரூபாய் அந்தச் சரக்கில் முதலீடு செய்திருந்தாலும் கவலைப்பட மாட்டோம். இப்படிச் செய்து கொண்டே வந்ததன் பலன் என்ன தெரியுமா? எங்களுடைய 80 சதவீத சரக்கு ஒரே வாரத்தில் விற்பனை யாகிவிடும் நிலைமையை அடைந்து விட்டோம். மீதி 20 சதவீதம் பொருட்களை விற்க எங்களுக்கு ஒரு வாரத்திற்கு மேல் ஆகின் றது என்றாலும் அவை எல் லாம் பவுடர் போன்ற பொருட்கள், அதா



வது, மாதக்கணக்கில் தரத்தைத் தக்க வைத்துக் கொள்ளக்கூடிய பொருட்கள். எங்கள் ஸ்டாக் எப்போதும் புதிதாக இருப்பதன் ரகசியம் இதுதான்.

வெவ்வேறு பொருட்களுக்கு வெவ் வேறு அளவுகோல்கள் வைத்திருக்கிறோம்.

'பழைய - ஸ்டாக்' என்பது 'ஃபுட் வர்ல்ட'இல் அறவே இல்லை! - இந்த நல்ல பெயரை எப்படிச் சம்பாதித்தீர்கள்?

இங்குதான் இன்ஃபர்மேஷன் டெக்னா லஜியின் பங்கு முக்கியமாகி விடுகிறது. 4000 விதமான பொருட்கள் இருந்தாலும் ஒவ் வொன்றும் என்ன வேகத்தில் விற்பனை ஆகின்றன என்று துல்லியமாகச் சொல்லி விடுகிறது கம்ப்யூட்டர். ஒரு பொருள் 3 மாதத்திற்கு மேல் 'ஷெல்ஃப்'இல் இருக்கிறது என்று கம்ப்யூட்டர் சொல்லிவிட்டால் அதை ஒட்டுமொத்தமாக உடனே ஷெல்ஃபி லிருந்து அகற்றி விடுவோம். எத்தனை

இதையும் மீறி ஒரு வாடிக்கையாள ருக்கு ஒரு பொருளைப் பற்றி அதிருப்தி ஏற்பட்டால் மறுக்காமல் மாற்றித் தரு வீர்களா?

யார் என்ன பொருளை மாற்றித் தரச் சொன்னாலும் புன்முறுவலுடன் வாங்கிக் கொள்ள வேண்டும், பொருளைத் திருப்பிக் கொடுக்க வந்திருக்கிறோமே என்ற குற்ற உணர்வுகூட அவர்களுக்கு ஏற்பட்டு விடக் கூடாது என்பது நாங்கள் எங்கள் ஊழியர் களுக்குக் கண்டிப்பாக இட்டிருக்கும் கட்டளை. இது, ஒரு வாடிக்கையாளரைப் பொறுத்தவரை ஒரு முக்கியமான சலுகை! ஏன் என்றால் ஒரு பொருளை தவறாகத் தேர்வு செய்துவிட்டால்கூட அவர்கள்

நஷ்டம் அடையாமல் அதை மாற்றிக் கொள்ள முடிகிறது. ஆனால் இதில் அடங்கியுள்ள ரகசியம் என்னவென்றால் இப்படி மாற்றித் தரச் சொல்லுபவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு!

உங்களைப் போன்று செல்ஃப் - சர்வீஸ் வசதி கொண்ட கடைகளில் பொருட்கள் திருடு போகும் அபாயம் இருக்குமே, எப்படி சமாளிக்கிறீர்கள்?

'ஃபுட் வர்ல்ட்'ஐத் தொடங்கியபோது, மேற்கு நாடுகளில் திருடு போகும் அளவிற்கு நம் ஊரில் போகாது, நமது மக்கள் மனசாட்சிக்குப் பயப்படுபவர்கள், கட்டுப்பாடான சூழலில் வளர்க்கப் பட்டவர்கள் என்று மெத்தனமாக இருந்துவிட்டோம். ஆனால் வருத்தமான விஷயம் என்னவென்றால் எங்களது அனுமானம் தவறாகிவிட்டது தான். மற்ற நாடுகளில் திருடு போகும் அதே அளவு இங்கும் சாமான்கள் திருடு போயின. ஆனால் அதற்காக போலீஸ்காரர்களையா நிறுத்தி வைக்க முடியும்? அப்படிச் செய்தால் குற்றமற்ற வாடிக்கையாளர்களைப் புண்படுத்துவதுபோல் ஆகிவிடாதா? அதனால் ஒரு வழி செய்தோம். அதாவது தவறான எண்ணத்தோடு வரும் வாடிக்கையாளர்களுக்கு தாங்கள் உன்னிப்பாக கவனிக்கப்படுகிறார்கள் என்ற ஒரு பிரமையை சூபர்வைஸர்கள், காமிராக்கள், க்ளோஸ் சர்க்யூட் டீ.வி.க்கள் மூலம் ஏற்படுத்தினோம். திருடுபோவது கணிசமாக குறைந்திருக்கிறது.

உங்கள் வருங்கால திட்டம் என்ன?

சென்னையில், 1.5 கிலோமீட்டருக்கு ஒரு கடை திறப்பது!

மற்ற சிறிய நகரங்களில்...

தொலைக்காட்சி வந்தபின் சிறிய நகரம் பெரிய நகரம் என்ற வித்தியாசமெல்லாம் மறைந்துவிட்டது. எந்த மூலையில் இருந்தாலும் எல்லோரும் எல்லா விஷயங்களையும் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடைசியாக ஒரு கேள்வி. தென் மாநிலங்களில்தான் உங்கள் அனைத்து கடைகளும் இருக்கின்றன, ஏன்?



இதைச் சொன்னால் மற்ற மாநிலக்காரர்கள் சண்டைக்கு வந்து விடுவார்கள், அவசியம் சொல்ல வேண்டுமா? (சிரிக்கிறார்)

கண்டிப்பாக. 'சஸ்பென்ஸ்' உடன் பேட்டியைத் தயவு செய்து முடிக்காதீர்கள்!

சொல்லுகிறேன். எங்களைப் பொறுத்த வரை, ஒரு பொருளின் மதிப்பை நன்றாக எடை போடத் தெரிந்தவள் தென்னிந்தியாவின் குடும்பத் தலைவிதான். அதாவது ஒரு பொருள் குறைவான விலைக்கு கிடைக்கிறதே என்று வாங்கவும் மாட்டாள், விலை அதிகமாக இருக்கிறதே என்று ஒரு தரமான பொருளை ஒதுக்கவும் மாட்டாள். இன்னொரு முக்கியமான காரணம் உண்டு. அவள் தான் ஒரு 'இவால்வ்டு கஸ்டமர்', அதாவது தன்னுடைய பரிணாமத்தை விருத்தி செய்து கொண்டே போகிறவள். அவளைப் போன்ற வாடிக்கையாளர்கள் தான் எங்களுக்கு முக்கியம்!

கிருஷ்ணா சிதம்பரம்

படங்கள் : **ஸ்ரீஹரி**

தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்

பவர்ஃபைனான்ஸ்

நடத்தும்

டெபாசிட் திரட்டும் முகாம்

உள்ளூர் காசோலை ஏற்றுக்கொள்ளப்படும்

கோயம்புத்தூர்	பொள்ளாச்சி
நாள் : 21 & 22 டிசம்பர், 2000.	நாள் : 23 டிசம்பர், 2000.
ஸ்ரீ எத்திராஜுலு ஜானகி அம்மாள் திருமண மண்டபம், 77, வைசியாள் தெரு, கோயம்புத்தூர் - 641 001.	ஹோட்டல் சக்தி கான்ஃபரன்ஸ் ஹால் (முதல் தளம்), 144, கோவை ரோடு (துரை திரையரங்கம் எதிரில்), பொள்ளாச்சி - 642 002.
✆ : 392469.	✆ : 23050 / 23060 / 23080

நேரம் : காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை

எங்களின் அடுத்த டெபாசிட் திரட்டும் முகாம்கள்

காரைக்குடி	: சேம்பர் ஆப் காமர்ஸ் & இண்டஸ்ட்ரீஸ்.	தேதி : 3 ஜனவரி, 2001.
சிவகங்கை	: சிவகாமி முத்துகாமாட்சி திருமண மண்டபம்.	தேதி : 4 ஜனவரி, 2001.
மதுரை	: YMCA மெயின்கார்டு சதுக்கம்.	தேதி : 5 & 6 ஜனவரி, 2001.

12.12%	**16.34%**
12 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 10.59%. 24 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 11.10% 36, 48, 60 மாதங்களுக்கு மாதத்திற்கு வட்டி 12.00%, காலாண்டிற்கு வட்டி 12.12%.	60 மாதங்களுக்கு (மாதாந்திர கூட்டுவட்டி ஆண்டிற்கு 12.00%)

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)

பதிவு அலுவலகம் : எண் 84, டிடிகே சாலை, ஆழ்வார்பேட்டை சென்னை - 600 018.

தொலைபேசி : 4997689, 4995648, ஃபேக்ஸ் : 044-4982894.

30-9-2000 தேதியிட்ட ... முந்தைய விளம்பரத்தின் தொடர்ச்சியாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது

Visit us at : www.tn.gov.in / www.chennaionline.com / www.aarasanthinai.com / www.southindia.com / www.webulagam.com

விரலுக்கு ✓ குரலுக்கு ✗



குரல்களை நம்புகிற இன்சூரன்ஸ் நிறுவனம் குரல்களை நம்பவில்லை என்று வருத்தப் பட்டார் ஒரு வாய்ப்பாட்டுக் கலைஞர்.

விஷயம் வேறொன்றுமில்லை. வாத்திய கலைஞர்களுக்காக 'நாதலஹரி' என்ற காப்பீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ள யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் பாடகர்கள் இந்தப் பாலிஸியைப் பயன்படுத்திக் கொள்ள முடியாது என்று அறிவித்து விட்டது. ஏன் என்ற கேள்வியோடு, யுனைடெட் இந்தியா தலைமை அலுவலகத்தை அணுகினோம்.

ஒரு பாடகரின் வெற்றியில் வாத்தியக் கலைஞர்களின் பங்கு கணிசமானது. என்னதான் ஒருவர் சிறப்பாகப் பாடினாலும் பக்க வாத்தியங்கள் சரியில்லை என்றால் கச்சேரி சோபிக்காது. இருப்பினும் பாடகர்கள் எளிதில் புகழ்பெற்று விடுகிறார்கள். ஆனால் வாத்தியக் கலைஞர்களைப் பொறுத்தவரை, குன்னக்குடி, வீணை காயத்ரி போன்ற ஒன்றிரண்டு பேரைத் தவிர பெரும்பாலானவர்கள் பக்க வாத்தியக்காரர்களாகத்தான் இருக்கிறார்கள். மேலும், அவர்களின் எண்ணிக்கை பத்துக்கு ஒன்று என்ற விகிதத்தில் அதிகமாய் இருப்பதால் அவர்களுக்கு வாய்ப்புகள் குறைந்து விடுகின்றன. வாய்ப்புகள் கிடைத்தாலும் போதிய ஊதியம் கிடைப்பதில்லை.

இந்த நிலைமையில் உடல்நலக்குறைவு காரணமாகவோ விபத்தில் ஒரு வாத்தியக் கலைஞர் கைகளை இழந்துவிட்டாலோ, அவருடைய சகாப்தமே முடிந்துவிடும். உடைந்த பொம்மை மாதிரி ஒதுக்கப்பட்டு விடுவார். இதையே பிழைப்பாக வைத்துக் கொண்டிருப்பவர் என்றால் அவரது குடும்பம் என்னாவது?

இதை எல்லாம் மனத்தில் எண்ணித்தான் 'நாதலஹரி' என்ற பாலிஸியை அறிமுகப்படுத்தினோம். இதில் ரூபாய் ஐந்து லட்சம் முதல் இருபத்தைந்து லட்சம் வரை இன்சூர் செய்யலாம். ஆண்டு ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் ப்ரீமியமாகச் செலுத்தப்பட வேண்டும். விபத்தாலோ உடல் நலக் குறைவாலோ இசைக்கருவியை வாசிக்க முடியாத நிலை ஏற்பட்டால் காப்பீட்டுத் தொகையை உடனே வழங்கிவிடுவோம். இதுவும் விபத்து காப்பீடு பாலிஸி போன்றதுதான்.

கடந்த மூன்றாண்டு காலத்தில், வயலின், தபேலா, புல்லாங்குழல், கடம், வீணை, நாதஸ்வரம், தவில் போன்ற வாத்தியங்களை வாசிக்கும் பல கலைஞர்கள் பாலிஸியைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

இந்தக் காப்பீட்டு திட்டத்தை தொடங்கும் முன்பு மருத்துவர்களிடம் ஆலோசித்து விட்டுதான் பாடகர்களைச் சேர்க்க இயலாது என்று முடிவு செய்தோம். காரணம், குரலைச் செயற்கையாக கெடுத்துக் கொள்ள முடியும். உதாரணத்திற்கு மது அருந்துபவர்களின் சாரீரம் எளிதில் பாழாகிவிடும். அல்லது வயது முதிர்ச்சியைத் தொடர்ந்து குரல் தன் நாதத்தை இழந்து விடக்கூடும். இது போன்ற பல காரணங்களைச் சொல்லலாம்.

இப்போது, இந்தப் பாலிஸியில் பாடகர்களையும் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது. அது குறித்து ஆலோசனை நடத்தி வருகிறோம். கூடிய விரைவில் ஒரு முடிவுக்கு வருவோம்.

-ஜெ.

உ

கச்சி மூதூர் அர்ச்சகர்கள் க்ஷேமநல ட்ரஸ்ட்

பதிவு அலுவலகம் : ஸ்ரீ காமகோடி சங்கர மடம், காஞ்சிபுரம்.

நிர்வாக அலுவலகம் : 16, இரண்டாவது மெயின் ரோடு, கோட்டூர்புரம், சென்னை - 600 085.

போன் : 4471936/4472540 E.Mail: prb@vsnl.com Website : http://personal.vsnl.com/kmaw_trust



வேண்டுகோள்

நம் நாட்டில் பெரும்பாலான மக்கள் இன்றியமையாத தெய்வ அருளை நாடி மன அமைதி பெற விழைவதால், கோவில்கள் சரிவர பராமரிக்கப்பட்டு பூஜைகள் செவ்வனே நடைபெற ஏற்பாடு செய்வதே தலைசிறந்த சமூகத்தொண்டு என்று **காஞ்சி மாமுனிவர் ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் கூறுவார்கள்.**

இந்த உன்னத நோக்குடன், பல்வேறு காரணங்களால் தற்சமயம் தமிழ் நாட்டில் நலிவுற்றிருக்கும் கிராமியக்கோவில்களில் வறுமை நிலையிலும் பூஜை செய்து கொண்டிருக்கும் தகுதி வாய்ந்த அர்ச்சகர்களை, ஆண்டுதோறும் வாய்மொழித்தேர்வுகளை நடத்தி, தேர்ந்து எடுத்து அவர்களுக்கு உதவி புரியுதற்காகவே, ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமிகள் மேற்படி டிரஸ்டை 1986வது ஆண்டு நிறுவினார். இதை பராமரிக்க வேண்டிய இருப்பு நிதியை ஈடுபாடுடைய அன்பர்கள் மனமுவந்து அளிக்கும் நன்கொடைகளால் மட்டுமே பெற வேண்டும் என்பது மஹாஸ்வாமிகள் இட்ட நிபந்தனை. மாதம் 4000 ரூபாயும் அதற்கு மேலும் வருமானம் பெறும் ஒவ்வொரு அன்பரும் தமது ஒருமாத வருமானத்தை தம் **வாழ்நாளில் ஒருமுறையாவது நன்கொடையாக அளிக்க முன் வர வேண்டும் என்பது பேருளாளரின் ஆக்ஞை.** மற்றவர்கள் தங்களால் இயன்ற அளவு கொடுக்கலாம். டிரஸ்டின் செலவினங்களில் 93% அர்ச்சகர்கள் நலனுக்காகவே உபயோகப்படுத்தப்படுகிறது.

1987வது ஆண்டில் 5 அர்ச்சகர்களுக்கு தலா மாதம் 100 ரூபாய் வீதம் உதவத் தொடங்கிய இந்த டிரஸ்ட், தற்சமயம் ஸ்ரீ காஞ்சி மஹானின் அருளாசியுடன் சேர்ந்துள்ள வைப்புத்தொகை ரூ.124.5 லட்சத்திலிருந்து கிடைக்கும் வட்டி வருமானத்தைக் கொண்டு, மொத்தம் 285 அர்ச்சகர்களுக்கு (63 பட்டாச்சாரியார்கள், 113 சிவாச்சாரியார்கள், 109 பரம்பரை பூஜாரிகள்) நபர் ஒருவருக்கு மாதம் ரூ. 350/- வீதம் உதவி வழங்கி வருகிறது. மேலும் தகுதியுடையவர்களுக்கு குழுக்காப்பீடும், விபத்துக் காப்பீடும் செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் தகுதி வாய்ந்த அர்ச்சகர்கள் எண்ணிக்கை கூடுவதாலும், மாத உதவித்தொகை உயர்த்தப்படுவதாலும், இருப்பு நிதியை அவ்வப்பொழுது நன்கொடைகளால் அதிகப்படுத்தப்பட வேண்டியிருக்கிறது.

நன்கொடைகளை **"KACHCHI MOODOOR ARCHAKAS WELFARE TRUST"** என்ற பெயரில் கிராஸ் செய்யப்பட்ட செக்/டிராஃப்ட் அல்லது மணியார்டர் மூலமாக மேற்படி நிர்வாக அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். காஞ்சிபுரம் ஸ்ரீ மடத்திலும் நன்கொடைகள் அளிக்கலாம். **நன்கொடைகளுக்கு வருமானவரி சட்டம் 80ஜி பிரிவின் கீழ் விலக்கு உண்டு.** வெளி நாடுகளிலிருந்தும் அன்பர்கள் நன்கொடை அனுப்புவதற்கு வசதியாக இந்த அறக்கட்டளை FCRA வின் கீழும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த டிரஸ்ட் வருமானவரி சட்டம் 10 (23C) (V) யின் கீழ் மத்திய அரசின் கெஜட்டில் வெளிவர உத்திரவு பெறப்பட்டுள்ளது.

என். கிருஷ்ணசாமி ரெட்டி
(ஓய்வுபெற்ற நீதிபதி, உயர்நீதி மன்றம், சென்னை.)
பொறுப்புக் குழுவின் சேர்மன்.

குசேலர் குடும்பத்துச் சத்துணவு

உளுந்து களி என்று ஒரு சத்துணவினைச் செய்து, அந்தக் காலத்தில் குழந்தைகள், பெரியவர்கள் என்று வயது வித்தியாசமின்றி அனைவரும் சாப்பிடுவார்கள். அதன் செய்முறையை உங்களுக்கும் சொல்லித் தருகிறேன். உங்கள் வீட்டில், டீன் ஏஜ் குழந்தைகள் இருந்தால், கண்டிப்பாக உளுந்து களி செய்து, சாப்பிடச் செய்யுங்கள்.

செய்முறை விளக்கம்: இருநூறு கிராம் உளுத்தம் பருப்பு, இருநூறு கிராம் பனங்கற்கண்டு, ஏலக்காய் பொடி சிறிதளவு, நல்லெண்ணெய் ஐம்பது மி.லி. பனங்கற்கண்டை நன்றாகத் தண்ணீரில் கரைத்து வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

வெறும் வாணலியில், உளுத்தம் பருப்பைப் போட்டு, பொன்னிறமாகும் வரை வறுத்து, அதைப் பொடி செய்து கொள்ளவும்.

வாணலியில் நல்லெண்ணெயை ஊற்றி அதனுடன் பனங்கற்கண்டு கரைத்த தண்ணீரை ஊற்றி, கொதிக்க விடவும்.

நன்றாகக் கொதிக்கிற நேரத்தில், வறுத்து, அரைத்து, தயாராக வைத்திருக்கும் உளுத்தம் பருப்பு மாவை அதில் போட்டுக் கிளற வேண்டும். மாவு போட்டுக் கிளறுகிறபோது, கட்டி தட்டாமல் சீராகக் கிளறவேண்டியது முக்கியம்.

அடுத்து, சிறிது நெய்விட்டு, பொடி செய்து வைத்திருக்கும் ஏலக்காய் போட்டு, இறக்கிவிடவும்.

பொதுவாக இந்த உளுத்தங்களி நல்ல டேஸ்ட்டுடன் இருக்கும் என்பதால், அனைவருக்கும் பிடிக்கும். நல்ல முறையில் உளுத்தங் களி சாப்பிட்டுவரும் டீன் ஏஜினரின் வளர்ச்சியை நீங்கள் கண்கூடாகக் காண முடியும்.

சிலர், உளுத்தங்களிக்குப் பதிலாக, உளுத்தம் மாவில், நெய்விட்டு, சர்க்கரை ஏலக்காய் பொடி கலந்து, சிறு சிறு உருண்டைகளாகப் பிடித்து வைத்துக் கொண்டு தினம் ஒரு உருண்டை கொடுப்பார்கள். சில குழந்தைகள் களியைவிட இந்த உருண்டையை விரும் பிச் சாப்பிடும். களி செய்கிற வேலையும் மிச்சம். உருண்டை உருட்டி எடுத்து, டப்பாவில் போட்டு நீண்ட நாள் வைத்துச் சாப்பிட சௌகரியமாக இருக்கும்.

பெண்களின் பிரசவத்துக்கும் அவர்களுடைய இடுப்புப் பகுதிக்கும் நேரடியான தொடர்பு உண்டு. கருவுற்றது தொடங்கி, பெண்களின் இடுப்புப் பகுதி, பிரசவத்துக்காக, தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்கிறது. எலும்புகள் வலுவடைந்து, அதே சமயம் நெகிழும்படியும் ஆகின்றன. இந்தக் கட்டத்தில் பெண்களுக்கு உளுந்து மிகச் சிறந்த சத்துணவு.

அந்தக் காலத்தில் நம் வீட்டுப் பெண்கள், ஐந்தாறு குழந்தைகளை அடுக்கடுக்காக பெற்று எடுத்தார்கள். அத்தனையும் நார்மல் டெலிவரிதான். சிசேரியன் என்பதே கேட்டிராத ஒரு விஷயம். அது



எப்படி சாத்தியமாயிற்று? எல்லாம் அவர்கள் சாப்பிட்ட உளுந்து செய்த மாயா ஜாலம்தான்.

அதேபோல, குழந்தை பிறந்த இருபது, முப்பது நாட்களுக்குப் பிறகு, தாய்மார்களுக்கு உளுந்து கஞ்சி கொடுப்பார்கள். அந்த சமயத்தில் நடகாய லேகியம் என்று ஒன்று கொடுப்பதும் வழக்கம். இந்த லேகியத்தில் இடம் பெறும் முக்கியமான ஐட்டங்கள் உளுந்தும், பெருங்காயமும்தான். இப்போதுகூட பிரசவ நடகாய லேகியம் தருகிற பழக்கம் கும்பகோணம், ஸ்ரீரங்கம் பகுதிகளில் கடைபிடிக்கப்படுகிறது. இந்த லேகியத்தில் முப்பது உருண்டைகள் செய்து வைத்துக் கொண்டு, தினம் ஒன்றாகக் கொடுப்பது வழக்கம்.



அண்மையில், ஒரு பெண்மணி, என்னிடம் வந்து இந்த லேகியத்தை வாங்கிக் கொண்டு போனார். யாருக்காக தெரியுமா? அமெரிக்காவில் வசிக்கும் தன் பெண்ணுக்காகத்தான். கடல் கடந்து போனது நடகாய லேகியம்!

இந்த லேகியத்தின் பலன் என்ன தெரியுமா? பெண்களின் கருப்பையில், பிரசவத்துக்குப் பின்னர் சிலவித கசடுகள் தங்கிவிடும். 'இது வெளியேறாவிட்டால், பின்னர் டி அண்டு சி செய்ய வேண்டி வரும். அதுபோலப் பிரச்னை ஏற்படாமல் பிரவசத்துக்குப் பின் உடனடியாக கருப்பையை சுத்தமாக்கும் பணியைத்தான் இந்த லேகியம் செய்கிறது. பிரசவத்தை யடுத்து, கருப்பையில் ஏற்படும் ஒரு வித ரணத்தையும் இது ஆற்றி விடும் தன்மை கொண்டது.

பிரசவத்துக்குப்பின், உடல்தேற ஏதேதோ டானிக் சாப்பிடச் சொல்லி, இன்றைய டாக்டர்கள் சிபாரிசு செய்கிறார்கள். இயற்கை என்னும் மருத்துவர் கொடுத்துள்ள ஊட்டச் சத்து டானிக்தான் உளுந்து.

பெண்களுக்கு மட்டும் தானா? என்று ஆண்கள் கோபப்பட வேண்டாம். ஆண்களுக்கும் ரொம்பவும் பயன்படும் இந்த உளுந்து.

விந்து எண்ணிக்கை குறைந்த பட்சத்துக்குக் குறைவாக இருக்கும் பிரச்னையுடையவர்களுக்கு உளுந்து ஒரு வரப்பிரசாதம். இது அந்த எண்ணிக்கையைக் கணிசமாக அதிகரிக்கும் என்பது மட்டுமில்லை. விந்து கருமுட்டையை அடைவதற்காக சில அங்குல தூரம் நீந்திச் செல்ல வேண்டும். அதற்குத் தேவையான நீந்தும் திறனை அதிகரித்து, கருவுறும் வாய்ப்பை அதிகரிக்கவும் செய்கிறது.

புராண கால குசேலர் தம்பதிகளையே உதாரணத்துக்குச் சொல்லலாம். அவர்களது பிரதான உணவே, குப்பையில் வளரும் கீரை வகைகள், உளுந்து, அவல் ஆகிய மூன்றும் தான். இந்த மூன்றும் சேர்ந்துதான் குசேலர் தம்பதிகளுக்கு இருபத்தேழு குழந்தைகளைக் கொடுத்தன என்றால் சும்மாவா! இருபத்தேழு குழந்தைகளைப் பெற்றெடுக்கும் சக்தியை திருமதி. குசேலருக்குக் கொடுத்தது உளுந்து உளுந்து உளுந்துதான்!

படங்கள் : **யோகா**

விஷமமே குழந்

ப்ருகாக்களைப் பொழியாமல் ஒரு கல்யாணி பாடுவதா? மேல் காந்தாரத்தைத் தொட்டு நின்று கதறு கதறு என்று கதறாமல் ஆலாபனையை முடிப்பதா...? 'முடியும்' என்ற கட்சி ரமா ரவியுடையது.

'இந்த ராகத்தின் ரக்தியும் நளினமும் கமகம் சார்ந்த பிடிகளால் மட்டுமே நிறைவாக வெளிப்பட்டு விட முடியும் பார்த்தீர்களா?' என்று கேட்பது போலிருந்தது அவரது கல்யாணி ஆலாபனை.



'வினயமா? விசை என்ன விலை அல்லது கிலோ என்ன விலை?' என்று பெரும்பாலான சங்கீத வித்வான்கள் கேட்கும் காலம் இது. விதிவிலக்கான இரண்டு கச்சேரிகளுடன் இந்த 'சீசன்' எனக்கு ஆரம்பித்தது.

முதலாவது கௌரவமான, சம்பிரதாய சுத்தமான இசைக்குப் பெயர்போன வீணை தனம்மாள் வழியில் பாடும் ரமா ரவி.

மற்றது நவீன மெருகுடன் இனிமைக்கு முக்கியத்துவம் அளித்து, பளபளப்பான 'பாக்கேஜிங்' செய்யும் லால்குடி பாணியில் வந்த பாம்பே ஜெய்ஸ்ரீ.

இரண்டு கச்சேரிகளும் எதிரெதிர் துருவங்கள்தான். ஆனால் இரண்டுக்கும் பொதுவான அம்சம் சங்கீதத்தைச் சொடுக்கு போட்டு ஆடவைக்காமல், கலைஞர்கள் கலையிடம் பணிந்தார்கள் என்பதுதான்.

நாத இன்பம் சபாவுக்காக ராக சுதா அரங்கில் பாடினார் ரமா ரவி. இந்த சீசனுக்கான ஒற்றைக் கச்சேரி அவருக்கு. தேதி டிசம்பர் 1. கச்சேரியும் முதல் தரம்தான்!

தஞ்சாவூர் பாசஞ்சர் போன்றதொரு காலப் பிரமாணம். சஹானா வர்ணத்தில் கூட முதல் காலத்துக்குப் பிறகு இரண்டாம் காலத்துக்குப் போகாமல் 1½ காலத்தோடு நின்றுவிட்ட நிதானம்!

வினதாசுதவாகன (ஜெயந்தஸேனா) துளஸி ஜகஜனனி (ஸாவேரி, ரூபக தாளம்) இரண்டும் கீர்த்தனையை எப்படி அழகாகப் பாட வேண்டும் என்பதற்கான பாடம் போல் இருந்தன. ஒரு இழை என்றால் ஒரு இழை கூட இடம் மாறாத பாடாந்திர சுத்தம்.

இளைஞரான வயலின் வரதராஜன் ரமா ரவியின் கல்யாணியை எப்படி வாங்கி வாசிக்கப் போகிறார் என்று ஆலாபனையினிடையிலேயே கவலை வந்து விட்டது. ஆனால் பாடகரின் மனோதர்மத்தை அடியொற்றியே தனது ஆலாபனையையும் அமைத்து ஆச்சர்யப்படுத்தி விட்டார்!

தான ஜாலங்கள் காட்டாத, துரித காலமே சுத்தமாக இல்லாத ஒரு கச்சேரியில் லயவித்வான் பாடுதான் திண்டாட்டம். மனோஜ் சிவா தேர்ந்த அனுபவஸ்தரைப் போல் சமாளித்தார். பாட்டுகளின் போது இருக்கிற இடம் தெரியாமல் இருந்துவிட்டு, இடைவெளிகளையும் கீர்த்தனை முடிவுகளையும் குஞ்சலம் கட்டுவது போன்ற அழகான கோர்வைகளால் முடிச்சுப் போட்டார்!

தர்பாரில் ஒரு குட்டி ஆலாபனை செய்தார் ரமா ரவி. 'ஆடிய பாத தரிசனம் கண்டால்...' கோபால கிருஷ்ண பாரதி பாடல். வித்வத்துக்கும் அழகுணர்ச்சிக்கும் ஒருங்கே சவால் விடக்கூடிய ராகமும் கீர்த்தனையும் ரமாவின் குரலில் கட்டுண்ட பாங்குடன் வெளிப்பட்டன. நெக்குருகி உனைப் பணியா (ஆபோகி) இன்னொரு தமிழ்ப் பாட்டு.

பிரதான ராகம் பேகடை - (நாதோபாஸன) மினரல் வாட்டரின் - அசல் மினரல் வாட்டர் - தெளிவும் தூய்மையுமாகப் பிரகாசித்தது. கற்பனைப் புதுமைகளில் விளையாடாத ஸ்வரப்ரஸ்தாரங்கள். ஈடுகட்டுவது போல் தனியாவர்த்தனத்தில் ரஸமான கணக்குகள் அளவாக இடம்பெற்றன.

துக்கடாக்களிலும் தன்யாஸி, நாட்டைக்குறிஞ்சி என்று கனத்த சுவை மாறாமல் முடிந்தது கச்சேரி.

மனம் நிறைந்த அளவுக்கு அரங்கம் நிறையாதது குறை.

தும்புரு

ரசிகர்களை ஈர்க்கும் அம்சங்களை, பாரம் பார்யத்துக்கு இழுக்கு வராமல் புகுத்த முடியும். புகுத்தியவர்கள் ஜெயித்திருக்கிறார்கள்.

பாம்பே ஜெய்ஸ்ரீயிடம் திரும்புவோம். விஷமமே பண்ணாத சமர்த்துக் குழந்தை மாதிரி அதிதமானதொரு கௌரவம், இனிமை; அமைதி! போதாக்குறைக்கு, காலப் பிரமாணத்திலும் மாற்றமேயில்லை என்னும் போது விரைவில் அலுப்புத் தட்டும் அபாயம் இவர் சங்கீதத்துக்கு ஏற்படுகிறது. இதை மீறி ரசிகர்களைக் கட்டிப் போடுவது பாம்பே ஜெய்ஸ்ரீயின் குரல்; பெருகிவரும் அவருடைய ஈடுபாடு.

முத்ராவுக்காக பாரதீய வித்யா பவனில் பாடினார் ஜெய்ஸ்ரீ. வளமான கற்பனை தெறிப்புகளுடன் ஆரம்பித்த ரீதிகௌளை ஆலாபனை, கார்வையில் நிற்காமல் நெளிந்து ஓடிக் கொண்டேயிருந்ததால் ஒரு கட்டத்தில் இரண்டு வயலின்கள் கேட்கிறோமோ என்கிற

...பண்ணாத ...தை!

பிரமை வந்து விட்டது. எம்பார் கண்ணனின் எதிரொலியில் இந்தப் பிரச்னை எழவில்லை. 'ஓராறு முகனே' என்ற தமிழ்க் கீர்த்தனையைத் தைரியமாக கச்சேரி மத்தியில் போட்டுக் கொண்டார் ஜெய்ஸ்ரீ!

முன்னதாக ஸாரங்கா 'மினி' ஆலாபனையிலும் அகாரம் கொடுக்காமல்தான் பாடினார். 'நீவாட னே காந' கீர்த்தனை. இதற்கும் நிரவல் ஸ்வரம்; ரீதிகௌளைக்கும் நிரவல் ஸ்வரம், அடுத்து வந்த கன்னடாவிலும் (கானடா அல்ல!) ஆலாபனை, கிருதி (கிதி சக்ர) நிரவல் ஸ்வரம்!

ஏதேனும் ஒரு நிரவல் ஸ்வரத்தைக் குறைத்திருந்தால் மற்ற இரண்டிலும் இரண்டு ஆவர்த்தனங்கள் கூட்டி நிறைவாய்ச் செய்தி



ருக்கலாம்.

மற்ற சமயங்களில் அளவாக ஒலித்த மிருதங்கம் தனியாவர்த்தனத்தில் பிய்த்துக் கொண்டு புறப்பட்டு விட்டது. கீர்த்தனை வாசிப்பில் காண்பித்த வல்லின - மெல்லினங்கள் இப்போது எதற்கு?' என்று முடிவு செய்து விட்டார் போலும் அனில்குமார். திருவனந்தபுரம் ராஜகோபால் கஞ்சிரா 'உள்ளேன் ஐயா!' என்று அட்டெண்டன்ஸ் மார்க் செய்ததோடு சரி.

வாசஸ்பதியும் பூர்விகல்யாணியும் மாற்றி மாற்றிப் பாடுவது போலிருந்தது முதலில்... மத்ய ஸ்தாயியை எட்டிய போது இகூரென்று ரமா மனோகரி ஸ்வரூபம் கொண்டு நம்ப முடியாத




• பாம்பே ஜெய்ஸ்ரீ

அழகுடன் ஜொலித்தது. தன்னை மறந்து வாய்விட்டுப் பாடிக் கொண்டிருந்தார் ஜெய்ஸ்ரீ! ஆனால் இந்த இன்பம் நீடிக்கவில்லை. சீக்கிரமே ஸ்வரப்ரஸ் தார மோஸ்தருக்குத் திரும்பி விட்டது ஆலாபனை.

மீண்டும் எம்பார் கண்ணன் அதிக மதிப்பெண் பெற்றார்.

தானம், பல்லவியிலும் சரி, கச்சேரி முழுதும் கவனமாகப் புகுத்தியிருந்த தாள வேறுபாடுகளிலும் சரி மிடுக்கு என்பது அடியோடு இல்லை. சாஹித்யங்கள் உச்சரிப்பினால் உண்டாக்கக்கூடிய உணர்ச்சி மாற்றங்கள் வயலின் பாணி குழைவுகளினால் மூழ்கடிக்கப்பட்டு விடுகின்றன. நிரவலில் முழுமை இல்லை. இத்தனைக்கும் இடையில் நேர்க்கோடு இழுத்தது போல் இனிமைப் பாதையில் போய்க் கொண்டேயிருந்தது கச்சேரி!

இந்தக் குறைகளிலிருந்து விடுபடும் சிறு முயற்சி ஜெய்ஸ்ரீயின் பாட்டில் இருந்தது என்பதுதான் ஆறுதல். விட்டு விடுதலையானால் சிகரங்கள் தொடலாம்.





2000 டிசம்பர் 24
விக்ரம மார்கழி 9
மலர் : 59
இதழ் : 21

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




சாலை மரணங்களுக்கு யார் பொறுப்பு?

திருமணத்துக்குச் செல்ல வேண்டிய பதினைந்து பேர் மரணத்தைத் தழுவிய கோர விபத்தொன்று தர்மபுரி மாவட்டத்தில் நடந்திருக்கிறது! கர்நாடக மாநிலம் தும்கூரிலிருந்து வந்த பேருந்து, லாரியில் மோதி ஏரிக்குள் விழுந்ததில் ஏற்பட்ட விபத்து இது என்பது மட்டுமே இப்போதைக்கு அறியப்படும் தகவல். உயிர் பிழைத்தவர்கள் 38 பேர். மூன்று பயணிகளின் கதி என்ன என்பது தெரியவில்லை. ஓட்டுனர் பேரில் தவறு உள்ளதா என்பது அவருக்கு மட்டுமே தெரியும்.

ஆனால், நம் நாட்டின் சாலை விபத்துகள் அனைத்துக்கும் ஓட்டுனர்கள் மட்டுமே காரணம் அல்ல என்பது யாவரும் அறிந்த உண்மை.

ஆண்டுதோறும் அதிகரித்து வரும் வாகன உற்பத்தி மற்றும் உபயோகத்துக்கு ஏற்ப சாலைகளின் விஸ்தீரணமும் பராமரிப்பும் மேம்பட்டு வருகின்றனவா என்று பார்த்தால் ஏமாற்றமளிக்கும் பதிலே கிடைக்கும். தர்மபுரி விபத்து நடந்த சிங்காரப்பேட்டையில்கூட, ஏரியையொட்டி போடப்பட்ட சாலைக்குப் பாதுகாப்புச் சுவர் இல்லை. சாலையில் வளைவுகள் அதிகம்!



சாலைப் பயணம் மேற்கொள்ளும்போது பஞ்சாயத்து தொடங்கி தேசிய நெடுஞ்சாலைத் துறை வரை பல்வேறு அமைப்புகளின் பொறுப்பில் வருகின்ற ரகம் ரகமான வீதிகளில் புகுந்து புறப்பட்டு வர வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

பல்வேறு ஊழல்கள் கொழிக்கும் இத் தேசத்தில் சாலை கான்டிராக்டுகளில் நடக்கும் ஊழல் பிரசித்தமானது. சிறு மழையில்கூட சிதைந்து போகும் சாலைகளைச் சகித்துக்கொண்டு வாழ்க்கை நடத்துவது நடைமுறையாகிவிட்டது.

போதாக் குறைக்கு பெருநகர்ப் பகுதிகளில் மின் வாரியம், தொலைபேசி இலாகா, குடிநீர்/கழிவுநீர் வாரியம் என்று தலைக்குத் தலை போட்டி போட்டுக்கொண்டு சாலைகளைக் குதறியெடுக்கும் கைங்கரியத்தைச் செய்து, தினசரி பயணத்தின் அபாயங்களை அதிகரித்து வருகின்றன. கேட்பாரற்று நடக்கும் இந்த அக்கிரமங்களோடு மக்கள் வாழப் பழகிக் கொண்டுவிட்டதால் அவற்றினால் ஏற்படும் அபாயங்கள் பொய்யாகிவிடாது.

ஓட்டுனர் உரிமம் வழங்குவதில் தாண்டவமாடும் லஞ்ச - ஊழல்;

அதன் விளைவாக சாலை விதிகளை அறியாத, அல்லது அறிந்தும் மதிக்காத நபர்கள் ஓட்டுனர்களாக அமைவது;

விதிகளை மீறுவோரைத் தண்டிக்காமல் வளைந்து கொடுத்து மாமூல் பெறும் காவல் துறை;

காவல் துறையின் இந்த பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு கூசாமல் தவறு செய்யும் மனசாட்சியற்றவர்கள்;



என்று விஷவட்டமாக விபத்துக்கான காரணங்களின் சுழற்சி தொடர்ந்துகொண்டேயிருக்கிறது.

அரசு வாகனங்கள் - குறிப்பாகப் பேருந்துகள் - வாங்குவதிலும் பராமரிப்பதிலும் தரக் கட்டுப்பாடு நிர்ணயங்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பது பெரிய கேள்விக் குறி. மாசுக்கட்டுப்பாடு விதிகளைக் கண்டு எள்ளி நகையாடுவதுபோல் புகை கக்கிச் செல்லும் மாநகரப் பேருந்துகள் சர்வசாதாரணமாகி விட்டன.

நீண்ட தூர பயணத்துக்கான ஓட்டுனர்களுக்குத் தனியே விதிகள் இருக்கின்றன. அவை கடைபிடிக்கப்படுகின்றனவா என்று தொடர்ந்து கண்காணிப்பது சாத்தியமில்லையெனினும் என்னேரமும் கண்காணிப்புக்கும், விதிகளை மீறினால் தண்டனைக்கும் உள்ளாகலாம் என்கிற நிலைமை இல்லை. குறிப்பாக, மதுச்சோதனை அவ்வப்போது நடத்தப்பட்டு, குடித்திருப்பதாகத் தெரிய வந்தால், தாட்சண்யமின்றி ஓட்டுனர் லைசென்ஸ் ரத்து செய்யப்பட வேண்டும்.

இத்தனை காரணங்களுள் ஏதோ ஒன்றினால் விபத்தும் உயிர்ச்சேதமும் நடந்துவிடுகிறது. ஆனால் ரயில் அல்லது விமான விபத்து எழுப்பும் பரபரப்போ கேள்விகளோ இன்றிப் பேருந்து விபத்தும் இதர சாலை விபத்துகளும் மறக்கப்பட்டு விடுகின்றன.

காரணங்கள் ஆராயப்பட்டு, நீக்கப்படவும் சாலைகள் விபத்துக்கு இடம் கொடா வண்ணம் பராமரிக்கப்படவும் அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டாக வேண்டும். வாகன உற்பத்தியாளர்கள், போலீஸ் உயர் அதிகாரிகள், சாலை பராமரிப்புப் பொறியாளர்கள் அடங்கிய ஒரு குழுவை அமைத்துச் செயல்படலாம்.

முகத்தில் முகம்

வேதாரண்யம் சண்முகம் தூக்குப் போட்டு இறந்த பிறகு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியின் தடய மருத்துவப் பிரிவைச் சேர்ந்த பேராசிரியர்கள் மூவர் அவர் உடலைப் பரிசோதனை செய்து அது தற்கொலைதான் என்று கூறினார்கள். அதன் பிறகு சி.பி.ஐ. கேட்டுக் கொண்டதன் பேரில் சென்னை மருத்துவக் கல்லூரியின் தடய மருத்துவ அறிவியல் நிபுணர்களும் அதை உறுதிப்படுத்தினார்கள். இந்த நிலையில்தான் ஜெயலலிதா சி.பி.ஐ. அமைப்பைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார். இது தவிர பாராளுமன்றத்தில் பிரச்னை கிளப்பப்பட்டது. உடனே மத்திய அரசு என்னை அனுகி மறுபரிசீலனை செய்யச் சொன்னது. இறந்துபோன சண்முகத்தின் உமிழ்நீர் தூக்குக் கயிற்றில் இருந்ததை வைத்து அவர் தற்கொலைதான் செய்து கொண்டார் என்று அடித்துக் கூறினேன். என்னுடைய ரிப்போர்ட்டை குறிப்பிட்டு சண்முகம் தற்கொலைதான் செய்து கொண்டார் என்று பிரதமராக இருந்த நரசிம்மராவும் பாராளுமன்றத்தில் பதில் சொன்னார். பிரச்னை அத்துடன் முடிந்தது.

ஒரு வங்கியின் உட்புறம். சுறுசுறுப்பான காலை வேளை. டெண்டர் கவுண்டரின் முன் சிறிய வரிசை. திடீரென்று காதைப் பிளக்கும் சப்தம். ஒரு பெண்மணி வயிற்றைப் பிடித்துக் கொண்டு சரிகிறாள். கையில் துப்பாக்கியோடு ஒருவன் வாசல் பக்கம் ஓடுகிறான். காவலாளி அவனை மடக்கப் பார்க்கிறான். அவனையும் சுட்டுவிட்டு மக்கள் கடலில் மறைந்து போகிறான் அவன். போலீஸ் வருகிறது. வங்கி ஊழியர்கள், அப்போது வங்கியில் இருந்த பொதுமக்கள் ஆகியோரை விசாரிக்கிறது "கொலைகாரன் எப்படி இருந்தான்?" - இதுதான் போலீஸ் பெரும்பாலோரைக் கேட்ட கேள்வி. அவர்கள் சொன்ன பதில், "நான் சரியா கவனிக்கவில்லை" என்பது. "நல்ல உயரம், ரொம்ப குண்டு என்று சொல்ல முடியாது. ஒரு முப்பது வயது இருக்கலாம். முகத்தில் கரு, கருவென்று மீசை" என்று சிலர் சொன்னார்கள். போலீஸ் குழம்பிப் போயிற்று.

இன்று உலகம் முழுவதும் இருக்கும் புலனாய்வாளர்கள் சந்திக்கும் பிரச்னை, குற்றம் செய்துவிட்டு ஓடும் நபரின் முக அடையாளங்களைத் தெளிவாகச் சொல்ல முடியாத நிலையில் இருப்பதுதான். ஏற்கனவே சந்தித்த ஒரு நபரை அடையாளம் கண்டு கொள்வது சுலபம். ஆனால் எதிர்பாராத சூழ்நிலையில் குற்றம் நடக்கும்போது குற்றவாளியை அடையாளம் கொள்வது

தடய அறிவியல் நிபுணர்
டாக்டர் டி. சந்திரசேகரன்





பார்க்கலாம்!

என்பது பல்வேறு காரணங்களையொட்டி அமைகிறது.

வீட்டிலிருந்து இறங்கி வெளியில் நடந்து சென்றதும் நாம் சந்திப்பது முகங்கள், முகங்கள்... முகங்கள்... எல்லோரையும் கண்களால் படம் பிடித்து மூளைக்குள் ஸ்டோர் செய்ய வேண்டிய அவசியமில்லை. இருந்தாலும் குற்றங்கள் பெருகிவிட்ட இந்நாட்களில் ஒரு நொடி, இரண்டு நொடி மட்டுமே பார்க்க வாய்ப்பு கிடைக்கும் ஒரு முகத்தை மனத்திற்குள் போட்டோ பிடிப்பது எப்படி? முகத்தில் "முகம்" பார்க்க முடியுமா? முயன்றால் முடியும். அதற்குச் சில வழிமுறைகளைக் கையாள வேண்டும். அவ்வளவுதான்.

முகலட்சணங்களைக் கவனித்து மனத்தில் பதிய வைத்துக் கொண்டால், மனிதர்களை அடையாளம் காண, மீண்டும் ரீகால் பண்ண மிகவும் உதவியாக இருக்கும். முன்பெல்லாம் சாட்சிகள் குற்றவாளிகளைப் பற்றிய முக அடையாளங்களைச் சொன்னால் போலீஸ் போட்டிருக்கும் ஸ்கெட்சுக்கும், தேடப்படும் நபருக்கும் சற்றும் சம்பந்தம் இல்லாமல் போய்விடும். ஏற்கெனவே போலீஸ் ரிகார்டில் இருக்கும் குற்றவாளிகள் என்றால், போலீஸ் கைவசம் படம் இருக்கும். புதிய குற்றவாளிகள் என்றால் சாட்சிகளின் வர்ணனைகளை வைத்து உருவாக்க வேண்டும். சில குற்றவாளிகளின் பழைய படங்கள்தான் போலீஸ் கைவசம் இருக்கும் உதாரணமாகப் பார்த்தால் தற்போது வீரப்பனுடன் காட்டில் இருப்பதாகச் சொல்லப்படும் தமிழ்த் தேசிய விடுதலைப் படை போராளி மாறனின் பழைய படம்தான் போலீஸ் வசம் இருக்கிறது.


இப்போது எப்படி இருப்பார் என்பதை அந்தப்படம் எடுக்கப்பட்ட வருடத்தைக் கணக்கு வைத்து வளர்ச்சியைக் கணித்துக் கம்ப்யூட்டரில் முகத்தைக் கொண்டு வர வேண்டும்.

ஜான்பென்ஸ் என்பவர் Photo fit system என்ற ஒன்றை அறிமுகப்படுத்தினார். 164 விதமான நெற்றிகள், 81 ஜோடி கண்கள், 70 விதமான மூக்குகள், 86 விதமான உதட்டமைப்புகள் 64 வகையான கன்னங்கள் என்று உண்மையான புகைப்படங்களில் இருந்து சேகரித்தார். சாட்சிகள் குற்றவாளிகளின் உருவத்தைப் பற்றிச் சொன்னவுடன் அவர்கள் சொன்னதின் அடிப்படையில் கண், காது, மூக்கு, நெற்றி என்று சேர்த்து ஒன்றுபடுத்தி ஒரு முகத்தை உருவாக்குவார். உலகின் பல நாடுகளில் கம்ப்யூட்டர் விஞ்ஞானம் வியக்கத்தக்க அளவு உயர்ந்துவிட்ட நிலையில், இந்த புகைப்படங்கள் டிஜிட்டலில் மாற்றப்பட்டு, கோடிக் கணக்கான முகங்களை உருவாக்குவதற்குப் பயன்பட்டு வருகின்றன. இருந்தாலும் குற்றவாளி தலையில் தொப்பி போட்டுக் கொண்டு முக மூடி அணிந்து வந்தால் எப்படி அடையாளம் சொல்வது?

(தொடரும்)



நகர்வலம்



சக்கரம் நாடகம் போலாம் னதும் நான் கிரேஸி இல்லாட்டி சேகர் டிராமாவாங்காட்டியும்னு பார்த்தேன்...

மியூசிக் அகாடமிக்குப் போய் இறங்கினா பூறாவும் ஜோல் னாபை, ஜிப்பா, வெளுத்த ஜீன்ஸ், கதர் குர்த்தா கும்பல்.

'நீ பாரு சக்கரம்- நான் பொடி நடையா மெரினா போய் ஒரு பேல்பூரி அட்சுட்டு வரேன்'னு வெட்டிக்கப் பார்த்தா சக்கரம் வுடறதா யில்லை. 'எப்பத்தான் நல்லது பார்க்க கத்துக்குவே?'ன்னு காதப்புடிச்சு இஸ்துகி னேபோய் பால்கனியில உட்கார வைச் சுடுச்சி. 'டெம்பஸ்ட்' டிராமா ஆரம்பிக் கறதுங்காட்டியும் அத்த எழுதின ஷேக்ஸ்பியரு கதையைச் சொல்லிகினே இருந்துச்சு.

சினிமா மாதிரி சப்-டைடிலுங்க ஸ்க்ரீன்ல ஓடவிட்டு நட்சாங்க பாரு ஒரு நாடகம்! இன்னா பேசறாங்கன்னு சுத்தமா புரியாக்காட்டியும் கதை அப்படியே பச்சக்குனு மனசுல ஒட்டிக்கிச்சு.

இரண்டு ராஜா கிறாங்க. அவங்களுக் குள்ளே செம சண்டை. ஒரு குட்டிப் பிசாசை ஏவிவிட்டு சில்மிஷமெல்லாம் பண்ணவுட றாரு ஒரு ராஜா. அந்தப் பிசாசு எதிரியோட ஒரு கப்பலை இஸ்துகினு வரத்துக்காவேண்டி ஒரு புயல் அடிக்கச் செய்யுது! எதிரி ராஜாக்களோட பொண் ணையும் பையனையும் சொக்குப் பொடி தூவி காதலிக்க வைக்குது! கட்சில இன்னா.... கண்ணாலம் தான்!

ஆனா, ங்கொப்புரான் சத்யமாச் சொல்றேன்- ஸ்டேஜு மேல ஒரு ஜோடனைகூட கிடையாது. கப்பலு, செடி, கொடி, ஊஹூம். சைஃபர். சும்மா சவுண்டு மட்டும் குடுத்து, கைய, காலை, கண்ணை, மூக்கை ஆட்டி அப்பப்போ கொஞ்சம் டைலாக் அடிச்சு மொத்த கதையும் புரியவச்சுட்டாங்க!

இதுல பாதி டைலாக் சும்மா மூக்கு நிறஞ்ச மலையாளம்; இன்னொரு பாதி டர் புர்ருன்னு புரியாத மொழி... சக்கரம் சொல் லிச்சு ஜெர்மன் லாங்குவேஜ்னு. சடனா கண்டு கொண்டேன் படத்துல வருமே கதகளி டான்சு... அந்த மாதிரி கண்ணையும் கையையும் பெரிசாக்கி, அசைச்சு அசைச்சு கதை சொன்னாங்க!

என்னை மாதிரி கதை காவியம்லாம் வாசனை புடிக்காத ஆளுக்கே செம இன்ட்ரஸ்டா இருந்துச்சன்னா இந்த டிராமா ஜோல்னா பைக்காரங்களுக்கு எவ்ளோ புடிச்சிருக்கும்னு நீங்களே கணக்கு போட்டுக்குங்க!

— மீண்டும் சந்திக்கும்வரை
மீட்டருக்குமேல் கேட்காத ஆட்டோ
செல்வம்

• நாடகத்தில்...



பச்சக்குன்னு மனசுல ஒட்டிக்கிச்சு!





▲ ''ஏஸி'க்காக மஃப்லர் சுத்திண்டா சாஹித்யம் காதில் விழமாட்டேங்கறது...''

''கச்சேரியை முழுசா கேட்டுட்டு வந்திருக்கே, மீட்டருக்கு மேலே தரமாட்டேன்னு லொள்ளு பண்ணா எப்படி?'' ▶



படங்கள்: கண்ணன்
குறும்பு: கி.கு.





▲ ''அடுத்த வருஷம் ஸ்பான்ஸர் கலா சிகாமணின்னு ஒரு பட்டம்...''



▲ மங்களத்துக்கு எழுப்பிடுங்க...!





▲ ''ஆத்தில் சாதகம் பண்ணுறதா நினைச்சிக்கிறேன், என்ன இப்ப?''

▼ ''எந்தா உன்னி.... நீயும் என்டே ரேட் வாங்ஙான் துடங்ஙி அல்லே...?''



▲ ''மெள்ள ஆகட்டும் – இப்பத்தான் எட்டாவது ஸ்பீக்கர் பேசிக்கிட்டிருக்கார்...''



கச்சேரி ஃபோட்டோ தவிச்சுப் போச்சு!

பிரியா விடைகேட்ட

என் தாயார் எஸ். நாகம்மாள், வயது சுமார் எண்பதுக்கு மேல். ஒரு மாதகாலமாக உடல் நலக்குறைவு. என் தாயின் உடல் எலும்புகள் கறையத் தொடங்கிவிட்டதாகவும் மருத்துவ பயன்கள் இனி இல்லை என்றும் மருத்துவர்கள் கூறிவிட்டனர்.

என் தாய்க்கு மூத்த மகன் ஒருவர், அவருக்கு அடுத்தடுத்து மகள்கள் மூவர். கடைசியாக மகன் ஒருவர்.



மருமகன்கள் மருமகள்கள் பேரன், பேத்திகள் கொள்ளுப் பேரன்-பேத்திகள் என சுற்றம் சூழ ஏராளமானோர் என் தாயின் உடல் நலனை விசாரித்துச் சென்றனர்.

கடந்த வாரம் உடல் நிலை மோசமடைய ஆரம்பித்தது. ஏராளமானோர் படுக்கையைச் சுற்றி அமர்ந்திருந்தனர்.

மூன்று மகள்களாகிய நானும் மூத்த சகோதரிகள் இருவரும் தலையை வருடிக் கொண்டும் கையைப் பிடித்துக் கொண்டும் கால்களைப் பிடித்துவிட்டுக் கொண்டும் கடைசி வரையிருந்தோம்.

அழைத்த குரல்களுக்கு தலையாட்டினார். பழைய சம்பவங்களை கேட்டு நகைத்தார். வாயில் ஊற்றியபால் போதுமென்றால் கையசைத்தார். மின்னலைப் போல சமயத்தில் கண்களைத் திறந்து மூடினார்.

சனிக்கிழமை 11.11.2000

மூத்த மகன் வயிற்று பேத்தி பச்சை உடம்புடன் கொள்ளுப் பேரக் கைக்குழந்தையுடன் பாட்டிக்கு பாலூற்றி சென்றாள்.

வெளி நாட்டிலுள்ள பேரன் பேத்திகளின் பேரைச் சொல்லி பாலூரட்டினார்கள்.

'வேதாந்த ரகசியங்கள்' என்ற நூலில் கண்டுள்ளபடி அன்று என் தாயின் **ஜீவ சுவாசம்** நாபியில் நிலைத்து விட்டதாக என் கணவர் கூறினார்.

ஒரு தாயின் ஜீவன்

இடுப்புக்கு கீழே சலனமற்ற நிலை. ஆனால் கபால மண்டலத்தில் ஐம்புலன்களின் ஆதிக்கம் ஜீவ சுவாசத்தை வெளியே அனுப்பவிடாமல் தடைசெய்தன என கணவர் கூறினார்.

ஞாயிறு 12.11.2000

மாலை மறையத் தொடங்கிய நேரம் ஜீவ போராட்டம் வெளிப்பட்டது.

மணி 6

பேரன், பேத்திகள் என நாற்பதின்மருக்கும் மேல் சுற்றியிருந்து என் தாய்க்குப் பிரியமான கந்தசஷ்டி கவசம், முருகன், அம்மன் பேரில் ஆத்மார்த்தமான அமைதியான பஜனைப் பாடல்கள் பாடப்பட்டன.

ஐம்புலன்களின் வேகம் அடங்கத் தொடங்கியதை என் கணவர் கண்டு அனைவருக்கும் தெரிவித்தார்.

"அம்மா நீங்கள் சம்பாதித்துக் கொண்ட புண்ணியங்களை பரந் தாமனின் பாதார விந்தங்களில் சமர்ப்பித்து விடுங்கள்" என என் கணவர் கண்ணீர் மல்க பிராத்தித்தார்.

ஞாயிறு இரவு மணி 9-15

நாபியில் நின்ற ஜீவ சுவாசம் நகர்ந்து தொண்டை குழிக்குள் வந்து சேர்ந்ததை உணர்ந்த என் கணவர் அனைவரையும் என் தாயாரைச் சுற்றி வந்து பாதங்களை சேவித்துக் கொள்ளும்படி கூறினார் அனைவரும் என் தாயின் பாதங்களை கண்ணீரால் அபிஷேகம் செய்தனர்.

இரவு மணி 9.30

என் தாயின் ஜீவ சுவாசம் பிரிந்து செல்ல விடை கேட்பதுபோல் தொண்டைக் குழியிலிருந்து பிரிந்து சென்றதை மகன்கள், மகள்கள், மருமகன், மருமகள்கள், பேரன், பேத்திகள், கொள்ளுப்பேரன், பேத்திகள் உற்றார் உறவினர் அண்டை அயலார் என ஐம்பதுக்கும் மேலானவர்கள் கண் கூடாகப் பார்த்து அதிசயித்தனர்.

இங்கு அணைந்த ஜீவ ஜோதி வேறு எங்கோ ஒளிர்ந்துக் கொண்டிருப்ப தாக நான் உணர்கிறேன்.

என் தாயின் மரணம் –

ஒரு வேதாந்த ரகசியம்!

அதிசயம் ஆனால் உண்மை

தாயைப் பிரிந்து வாடும் மகள்.
கமலா.

திருமதி கமலா,
13/1-B, வெங்கடாசலபதி 3ஆம்
தெரு, செனாய் நகர்,
சென்னை – 30

இனிமேல் 9

அனுராதா ரமணன்



கோவில் பிராகாரத்தில் ஈஸ்வரனும் அம்பாளும் உல்லாசமாய் பவனி வந்து கொண்டிருக்க, கேதாரி கைகூப்பி மெய்மறந்து நின்றார்.

'கடவுளே, சாதாரணமா உனக்கு இந்த உலகத்துல இருக்கிற எல்லா ஜீவராசிகளையும் கவனிச்சுக்கற வேலை தலைக்கு மேல இருக்கு. உனக்கு ஏது ரெஸ்ட்? ஆனா ஒவ்வொரு ப்ரதோஷத்தின் போதும் சாயந்திரம் உன் சகதர்மிணியோட விச்ராந்தியா கோவில் பிராகாரத்துல 'வாக்' வர்ற சமயத்துல உன் பக்தர்கள், சமயம் பார்த்து, உன் 'மூட்' பார்த்து தங்களுடைய கோரிக்கைகளை வைக்கிறதும், நீ அதை கவனிக்கலைன்னாலும் - உன் பக்கத்துல வர்ற அம்பாள், லோகமாதா, 'பாவம் குழந்தை... என்னமோ சொல்றானே, கொஞ்சம் கவனிக்கக் கூடாதா'ன்னு சிபாரிசு செய்வான்னு ஐதிகம். இப்போக்கூட நீ சந்தோஷமா இருக்கற நேரத்துல என்னுடைய கோரிக்கையையும் உன் காதுலே போட்டு வைக்கறேன். என் குழந்தை ப்ரீதியும், அந்த அஜய்யும்...

அவர் தனது ப்ரார்த்தனையை முடிக்கவில்லை. கபாலீஸ்வரருக்கும், அவருக்கும் நடுவே நந்தி மாதிரி ஒருவர் வந்து நின்றார். காது வரையில் புன்னகையை அகலமாய் விரித்தபடி, பவ்யமாய், உடம்பை சற்றே வளைத்து, இரு கரங்களாலும் செவிகளைப் பொத்தியபடி கூறினார்.

"அபிவாதயே ஆங்கிரஸ கௌதம ஔசித்ய
.... பாரத்வாஜ கோத்ரஹ...
ஸ்ரீ ஸ்ரீநிவாசராகவ சர்மா, நாமாஹம் அஸ்மிபோஹ..."

கேதாரி ஒன்றும் புரியாமல் அவரையே பார்த்தார்.

"சார்... யாருன்னு தெரியலையே?"

"அடியேன் பெயர் சீனுவாசராகவன். அதுதான் அபிவாதயேல்ல சொன்னேனே. நான் எப்பவுமே நம்ம சம்பிரதாயங்களை விடற தில்லே... என் சம்சாரம் அலமேலுவும் அப்படித்தான். பெரியவாளைப் பார்த்தா விழுந்து நமஸ்காரம் பண்ணிட்டுத்தான் மறு வேலைப் பார்ப்பா."

கேதாரிக்கு இப்பொழுது புரிந்துபோய்விட்டது.

"ஓ... அலுமேலு அகத்துக்காரர் சீனுவாசராகவனா? அப்படிச் சொல்லுங்கோ..."

அவர் உற்சாகமாக சீனுவாசராகவனின் முதுகில் தட்ட, இப்பொழுது சீனுவாசராகவன் பேய் முழி விழித்தார்.

"என்னது, என் சம்சாரத்தை உங்களுக்குத் தெரியுமா?"

இதற்குக் கேதாரி தனக்கே உரிய மந்தஹாசப் புன்னகையுடன் பதிலளித்தார்.

"உங்க ஒய்ஃப் அலுமேலுதான் லோகப் பிரசித்தியாயிற்றே. என் டாட்டர் ப்ரீதி சொல்லியிருக்கா... நீங்க கூட அவ வேலை பார்க்கற ஆபீஸ்லதான் 'ஓர்க்' பண்றேள் போல..."

சீனுவாச ராகவன் அசட்டுச்



ஆரம்பம்

சிரிப்புடன் தலையசைத்தார்...

அவருக்கு வெகுநாட்களாகவே கேதாரியைச் சந்தித்துப் பேச வேண்டுமென்கிற தவிப்பு உண்டு. சாதாரணமாகவே மனிதர் பெருச்சாளி மாதிரி சின்ன சந்து கிடைத்தால்கூட கிலோமீட்டர் கணக்கில் குடைந்து, உள்ளே நுழைந்து, வெளியே வருகிற ரகம். எங்கே போனாலும் தனக்கு என்று ஒரு முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என எதிர்பார்ப்பவர். அலுவலகத்தில் வேலை செய்பவர்கள், வீடுகளில் மாதாந்திர மளிகை சாமான் வாங்குவதிலிருந்து கல்யாணத்துக்கு வரன் தேடுதல், காலேஜ் அட்மிஷன் இப்படி சகலத்துக்கும் தன்னைக் கலந்து தனது யோசனைப்படி செய்ய வேண்டுமென்பதில் மனிதருக்கு அநாவசிய 'ஈகோ' உண்டு.

"ஏம்பா, பச்சரிசி நம்பர் ஒன் குவாலிடி கிலோ பத்தொன்பது ரூபா அம்பது பைசாதான்... நான் வாங்கித் தரட்டுமா உனக்கு? இருபத்தி மூணு ரூபா கொடுத்து வாங்கினா, அதுவும் மாசத்துக்கு முப்பது கிலோ... எந்த குடி கெடும்?"

"பிரபா, உன் தம்பிக்கு சித்திரை நட்சத்திரம் இல்லையோ... ஃபர்ஸ்ட் கிளாஸ் வரன் ஒண்ணு கைவசம் இருக்கு... அம்பத்தியோரு பவுன்நகை போட்டு குசலாம்பாள் கல்யாண மண்டபத்துல கல்யாணம் செஞ்சு தர்றேன்னு சொல்றா... பொண்ணும் 'ஸாஃப்ட் வேர்'... நான் கம்ப்யூட்டர்ல மாத்திரம் சொல்லலை... அவ சுபாவத்துலயும் ஸாஃப்ட் வேர்தான்..."

"ஏன் துரை, அக்கா பையனை என்ஜினியரிங்ல சேர்க்கறதுக்கு ரெண்டரை லட்ச ரூபா கொடுத்தியாமே... எங்கிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருக்கக் கூடாதா... இது

மாதிரி சமயத்துல எல்லாம் என்னை மறந்தே போயிடுமே உங்களுக்கெல்லாம்... நான் ஒருத்தன் எதுக்காகப்பா இருக்கேன்..."

இப்படி தன்னைச் சுற்றி உள்ளவர்கள் எல்லோரும், 'ஸர்வம்' சீனுவாசராகவன் மயம் ஜகத்' என்று சுற்றி வந்து வணங்க வேண்டுமென்று நினைப்பவர்.

காலையில் தொலைக்காட்சிகளில் ராசி பலன்கள் சொல்கிறார்களோ இல்லையோ, சீனுவாசராகவன் ஆபீசுக்கு வந்ததுமே அவரவர்களுக்கான அன்றைய ராசி பலனைச் சொல்லிவிடுவார்.

"உன்னி மேரி, உன் ராசிப்படி நாளைக்கு மத்தியானம் வரைக்கும் சந்திராஷ்டமம்... யார்கிட்டயும் வாயைக் கொடுக்காதே..."

இப்படி எச்சரிப்பதில் ஆரம்பித்து அவரவர்களுடைய அன்றாட நடவடிக்கைகளையே தான்தான் ஏற்கனவே நிர்ணயித்திருப்பதுபோல சொல்லுவார்.

"நான் அப்பவே சொல்லலே, கனகராஜ் உனக்கு இப்ப அஷ்டமத்து சனி... சும்மா சொல்லக் கூடாது நீ இவ்வளவு தூரம் தெம்பாய் இருக்கறதே உன் பொண்டாட்டியோட ஜாதகத்துனாலதான்..."

இத்தனை தூரம் அலுவலகத்தோடு நகமும் சதையுமாக ஒன்றி இருப்பவருக்கு தன்னைக் கேட்காமல் யாராவது ஒரு காரியம் செய்தால்கூட ஆகாது... ஏகத்துக்கு 'ரேக்கி' கொள்வார். 'உன்னை விட்டேனா பார்' என்பார்.

தற்சமயம் இப்படிப்பட்ட கோபத்துக்கு ஆளாகி இருப்பது மாதுளம் பூப்போன்ற ப்ரீதியும், ஆணழகனான அஜய்யும்தான்...

ஏற்கனவே அஜய்யின் பெற்றோரைப் பார்த்துப் பேசியதில் ஒரு விஷயம் தெளிவாகி விட்டது.

அது - அஜய்க்கும், வேறு ஒரு பெண்ணுக்கும் ஏற்கனவே திருமணம் நிச்சயமாகிவிட்டது என்பதுதான்...

அந்தப் பெண், ப்ரீதிதான் என்பதில் அவருக்குச் சந்தேகமேயில்லை. இப்படி ஒரு காதல் வெல்வெட் துணியில் நடப்பதுபோல, 'மெத்துமெத்தென்று சுலபமாய் நடந்தேறி விட்டால்... அதில் என்ன சுவாரஸ்யம் இருக்கிறது.

"இந்த விஷயம் ப்ரீதியோட தகப்பனாருக்குத் தெரியுமோ... தெரிஞ்சா சம்மதிப்பாரோ..."

"ஏன் சம்மதிக்காம... ரஸகுல்லாவை விள்ளாம முழுங்கற மாதிரி கோடீஸ்வர மாப்பிள்ளை... கசக்கறதா என்ன?"


"கசக்காதுதான்... ஆனா கசக்கணுமே..."

"கசக்கணும். பதறணும், இப்ப என்ன சார் பண்றதுன்னு அந்தப் பொண்ணு ஓடி வந்து என் கையைப் பிடிச்சுட்டு கெஞ்சணும்... அடடா அப்படி ஒரு காட்சியை உருவாக்கி பார்க்கிறதுலதான் உண்மையான சந்தோஷம் இருக்கு."

இப்படிப்பட்ட உத்தமமான எண்ணம் தோன்றியபிறகு தனது நாற்காலியில் ஒரு நிமிடம்கூட உட்கார முடியவில்லை அவரால்... உன்னிமேரியின் மேஜைக்கும், இவருடைய மேஜைக்கும் இடைப்பட்ட 'கேபின்' ப்ரீதியுடையது. ஆனாலும் அனேகமாக அஜய்யின் அறையில்தான் இருப்பாளாதலால், இவர் போகும்பொழுதும், வரும்பொழுதும் இந்த கேபினை ஒரு நோட்டம் விட்டுக்கொண்டுதான் போவார்... சில சமயங்களில் வித்தியாசமான அழைப்பிதழ்கள், ஆங்கில மாத நாவல்கள் கண்களில் பட்டால் அவசரமாய் ஒரு புரட்டு புரட்டிவிட்டுப் போவார்... உன்னிமேரியிடம் சற்றே வயிற்றெரிச்சலுடன் சொல்வார்...

"இந்தக் குட்டி, என்ன பெர்ஃப்யூம் யூஸ் பண்றாள்னே தெரியலை... கேபினுக்குள்ள போனாலே ஏதோ சொப்பன லோகத்துக்குள்ள இருக்கா மாதிரி இருக்கு."

சில சமயங்களில் கேபினில் அமர்ந்து ப்ரீதி அவளது அப்பாவுக்கு ஃபோன் செய்து பேசுவதைப் பார்த்துவிட்டு சற்று ஒதுங்கினாற் போல நின்று ஒட்டுக் கேட்பார். இப்படிக் கேட்டு தெரிந்துகொண்டதுதான், கேதாரி, பிரதோஷம் தவறாமல் கபாலீசுவரர் கோவிலுக்குப் போவார் என்பது. இரண்டு முறை கேதாரி தனது பிரசித்தி பெற்ற டப்பா ஹெரால்டு காரில் மகளை அலுவலகத்தில் கொண்டுவிட்டபொழுது அவ



"உங்க சேவையைப் பாராட்டி லேடீஸ் கிளப்புல பேசினாங்களாமே, என்ன சேவை செய்தீங்க?"

"தேங்காய் சேவையும் எலுமிச்சை சேவையும்."

– கி. மஞ்சுளா

ரைப் பார்த்திருக்கிறார்.

எத்தனையோ கெட்ட குணங்கள் இருந்தாலும் தப்பித் தவறி சீனுவாச ராகவனிடம் ஒரு நல்ல குணம் இருந்தது.

அது – ஒருவரை ஒருமுறை பார்த்தால் மனசுக்குள் அப்படியே அவரை ஜெராக்ஸ் பிரிண்ட் போட்டு வைத்து விடுவார்... எத்தனை வருடங்களானாலும் மறக்க மாட்டார்...

அப்படிபட்டவருக்கு இன்றைக்கு நிஜமாகவே ஜெராக்ஸ் பதிப்பு எடுத்து வைத்துக் கொள்ள அட்டகாசமான ஒரு விஷயம் கிடைத்துவிட்டது.

அது – அஜய், அன்புள்ள கண்ணம்மாவுக்கு என்று ஆரம்பித்து, ஏகப்பட்ட அடித்தல் திருத்தலுடன் எழுதியிருந்த காதல் கடிதம்.

வருஷக்கணக்கில் 'டயட்'டில் இருந்த சர்க்கரை வியாதிக்காரருக்கு முழுசாய் ஒரு ஜாங்கிரி கிடைத்தாற் போல - பரவசமாகிவிட்டார் அவர்.

ப்ரீதி ஏதோ வேலையாய் அஜய்யின் அறைக்குள் போயிருந்த சமயம் பார்த்து இந்தக் கடிதத்தை லாவிக் கொண்டு வந்து அலுவலக உபயோகத்துக்காக இருந்த ஜெராக்ஸ் மிஷினின் வாயில் போட்டு பிரதி எடுத்து விட்டார். அசலை சமர்த்தாக இருந்த இடத்திலேயே வைத்துவிட்டு நகலுடன் பிரதோஷ புண்ணிய காலத்தில் கேதாரியைத் தரிசிக்கக் கோவிலுக்கு வந்துவிட்டார்.

"உங்க பொண்ணோட சமர்த்துக்குச் சும்மா சொல்லக் கூடாது... எங்கேயோ இருக்க வேண்டியவ... என்னோட 'ஷட்டகர்' பையன் ஒருத்தன் சென்ட்ரல் மினிஸ்டிரியில ஒரேடு ஒன் ஆபீசரா இருக்கான். குழந்தைய அவனுக்கு பார்க்கலாம்னு இருந்தேன். ஆனா உங்க பொண்ணு புளியங்கொம்பா பிடிச்சிருக்கா... என்ன பார்க்கறேள்? கோடீஸ்வரர் பையன் 'லவ்' லெட்டர் எழுதியிருக்கான். உங்க பெண்ணுக்கு... ஆனால் லட்சமும், கோடியும் உங்களுக்கு ஒண்ணும் பிரமாதம் இல்லைன்னு வச்சிக்கோங்கோ... யார்தான் கோடீஸ்வரன் ஆகலை இந்தக் காலத்துல... அதான் டீ.வி.யில தினமும், நான் ரெடி, நீங்க ரெடியான்னு பணத்தை வச்சுட்டுக் கூப்பிட்டுட்டே இருக்காங்களே... பணமா சார் முக்கியம்?"

கேதாரியே திகைத்துப் போய் நிற்க... சீனுவாசராகவன் தன் கையிலிருந்த ஜெராக்ஸ் நகலை அவர் கையில் திணித்து விட்டு மறுபடியும் காது வரையில் சிரிக்கிறார்.

"என் அனுபவப்படி ஒரு பொண்ணு மேல ஆசைப்படறவங்க எல்லாம் காதலிக்கறதில்லை... காதலிக்கறவங்க எல்லாம் தன் மனசுல இருக்கறதை லெட்டர் மூலமா வெளிப்படுத்தறதில்லை... அப்படி, உருகி உருகி காதல் கடுதாசி எழுதி பார்க்லேயும், பீச்சுலயும் கண்ணே, மணியேன்னு 'லவ்' பண்றவங்க கடைசியில கல்யாணமே பண்ணிக்கிறதில்லை. இதை உங்ககிட்டே எதுக்குச் சொல்ல வந்தேன்-னா, பையன் பெரிய இடம்... ஆபீஸ் வேலைக்கு நடுவுல ஒரு ரிலாக்சேஷனுக்காக லவ் பண்ணிட்டு, வேற இடம் தேடி ஓடப் போறான்... உங்களுக்கு ஏதாவது ஹெல்ப் வேணும்னா, என்னைக் கேளுங்கோ... தாஸன் காத்திண்டிருக்கேன்..."

கேதாரி, பதில் சொல்லும் முன்பே சீனுவாசராகவன் கிளம்பிவிட்டார்.

(தொடரும்)

ஹே....யா!

தமிழ் பாப் இசை மார்க்கெட் நொந்து போயிருக்கும் இந்நேரத்தில் 'ஹே யா' என்ற ஒரு தமிழ் ஆல்பம் வந்திருக்கிறது. இதிலிருக்கிற எட்டுப் பாடல்களையும் பாடியிருப்பவர் சூரஜ் எனும் இளைஞர். பார்ப்பதற்கு இந்திப்பட ஹீரோ மாதிரி இருக்கும் இவருக்குத் திருச்சூர் சொந்த ஊராம். பிறந்தது, வளர்ந்தது, படித்தது எல்லாம் மும்பை.

''எனக்குத் தமிழ் புரியும். பேச வராது. எல்லாப் பாடல்களையும் இந்தியில் எழுதி வைத்து தமிழில் பாடினேன்'' என்று சொல்லும் சூரஜ், மைல் ஸ்டோன் கேசட் நிறுவனத்தின் 'முசாபர்'என்றொரு இந்தி ஆல்பத்தில் பாடியிருக்கிறார். அது ஹிட்டானதும் இதே நிறுவனம் தமிழில் இவரை வைத்தே 'ஹே யா'வை வெளியிட்டிருக்கிறது. 'இனி தமிழில்தான் கலக்கப் போகிறேன்'' என்கிறார் சூரஜ் தலைமுடியை ஸ்டைலாகக் கோதி விட்டபடி!



ஒரு வாரத்தில் தயாரித்த பத்திரிகை!



மது விலக்குப் பிரசாரத்துக்காக ஒரு மாதப் பத்திரிகை தொடங்க வேண்டுமென்றும், அதற்கு 'விமோசனம்' என்று பெயர் வைக்கத் தீர்மானித்திருப்பதாகவும் ராஜாஜி கூறியபோது எனக்குப் பல சந்தேகங்கள் தோன்றின.

"மது விலக்கு என்கிற ஒரு விஷயத்துக்கு மட்டும் தனிப் பத்திரிகையா? அவ்விதம் நடத்த முடியுமா?" என்று கேட்டேன்.

"ஏன் நடத்த முடியாது? பேஷாக நடத்த முடியும்" என்றார் ராஜாஜி.

"பத்திரிகையின் பக்கங்கள் எத்தனை?"

"நாற்பது பக்கங்கள்."

"நாற்பது பக்கமும் மதுவிலக்கு விஷயமேயா?"

"ஆமாம்."

"நாற்பது பக்கத்துக்கு மது விலக்கு விஷயம் எப்படித் திரட்டுவது? அப்படித் திரட்டி பத்திரிகை கொண்டு வந்தாலும் ஜனங்கள் வாங்குவார்களா?"

"ஏன் வாங்க மாட்டார்கள்? வாங்காவிட்டால் வாங்கச் செய்ய வேண்டும்."

"எப்படி வாங்கச் செய்வது? அடிபிடி கட்டாயம் செய்ய முடியுமா? படிக்க சுவாரஸ்யமாயிருந்தால்தானே பத்திரிகையை வாங்குவார்கள்?"

"படிக்க சுவாரஸ்யமாயிருக்கும்படிச் செய்யலாம். நீ பார்த்துக் கொண்டேயிரு. முதல் இதழை நான் தனியாகவே தயாரித்துக் காட்டுகிறேன்!"

அவ்விதமே ராஜாஜி 'விமோசனம்' முதல் இதழைத் தயாரிக்க ஆரம்பித்தார். ஒரு வாரத்தில் தயாரித்தும் முடித்து விட்டார். அட்டைப் பக்கத்துக்கு மதுப் புட்டியாகிய அரக்கனை ஜனங்கள் விரட்டியடிப்பது போன்ற படம். உள்ளே முதல் பக்கத்துக்கு பாரதியாரின் "ஜய பேரிகை கொட்டடா!" என்ற பாட்டைத் தழுவி "மதுவெனும் பேய்தனை அடித்தோம்!" என்று ஒரு பாட்டும் படமும். மது விலக்கின் அத்தியாவசியத்தைப் பற்றிய தலையங்கம்.

குடியின் தீமையை விளக்கும் இரண்டு கதைகள். இன்னும் சில கட்டுரைகள். "கடற்கரைக் கிளிஞ்சல்" என்னும் தலைப்பில் அநேக சிறு குறிப்புகள். ஆங்காங்கே மதுவிலக்குப் பிரசாரப் படங்கள்.

"சந்தாதார் இருக்கும் இடமே தெரியவில்லையே? அவர்களை எப்படிப் பிடிப்பது?" என்று கேட்டேன். "பார்த்துக் கொண்டேயிரு; போட்டி போட்டுக் கொண்டு வாங்குவார்கள்!" என்று ராஜாஜி சொன்னார். அப்போது தமிழ் மக்களிடையே பத்திரிகை படிக்கும் வழக்கம் நன்கு பரவியிருக்கவில்லை.

குடிகாரர்கள் இந்தப் பத்திரிகையை ஒரு நாளும் படிக்கமாட்டார்கள். குடிப்பழக்கமில்லாதவர்களுக்கோ இப்பத்திரிகை தேவையேயில்லை. அப்படியிருக்கும்போது மதுவிலக்குப் பிரசாரத்துக்காக ஒரு தனிப் பத்திரிகை நடத்துவதில் என்ன பயன்? யார் வாங்கப் போகிறார்கள்? வீண் கஷ்டத்தோடு நஷ்டமும் ஏற்படுமே?

இப்படிப்பட்ட சந்தேகங்களும் குழப்பங்களும் மனத்தில் குடி கொண்டிருந்தன. ஆனால் 'விமோசனம்' முதல் இதழைப் பார்த்ததும் என் சந்தேகங்கள் எல்லாம் பறந்தன. ராஜாஜியே சென்னைக்குச் சென்றிருந்து ஹிந்தி பிரசார சபையில் முதல் இதழை அச்சடித்துக் கொண்டு வந்தார். அவர் கொண்டு வந்த விமோசனம் பத்திரிகைக் கட்டைப் பிரித்து ஆவலுடன் ஒரு பிரதியை எடுத்துப் பார்த்தேன். "நம்முடைய பயங்கள் எல்லாம் வீண்; இந்தப் பத்திரிகை வெற்றியடையப் போகிறது!" என்று எனக்குத் தைரியம் உண்டாகி விட்டது.

முதல் இதழ் ஆயிரம் பிரதிகள்தான் அச்சிட்டோம். அதுவரை சேர்ந்திருந்த சந்தாதாரர்களுக்கு அனுப்பிய பிறகு, தமிழ் நாட்டிலிருந்த கதர் வஸ்திராலயங்களுக்கெல்லாம் விற்பனைக்காக அனுப்பினோம். என்னுடைய சந்தேகங்கள் பறந்து போய், பத்திரிகைப் பிரதிகளும் பறந்து போய் விட்டன!

அமரர் கல்கி

– 'பாங்கர் வினாயகராவ்' நூல் முன்னுரையிலிருந்து...

கிறிஸ்மஸ்-2000

ஜெசி

சிதைந்து போன தேவாலயத்தின் முன் நின்று கொண்டிருந்தார் அருமைநாயகம்.

ஒரு வாரத்துக்கு முன் யாரோ தீயவர்களால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட தேவாலயத்தைப் பார்க்கும்போது அவர் கண்களிலிருந்து கண்ணீர் கரகரவென்று வழிந்து கொண்டிருந்தது.

ஒவ்வொரு அங்குலமாய்ப் பார்த்துப் பார்த்து எவ்வளவு கவனத்தோடு கட்டப்பட்ட தேவாலயம்? கட்டட காண்டிராக்டர் சமூகசேவைகளில் ஈடுபாடு உடையவர். அதனால் காசு பணத்தை லட்சியம் பண்ணாமல் இரவு பகல் பார்க்காமல் மாடாய் உழைத்து இதைக் கட்டி முடித்திருந்தார்.

எப்படி மனம் வந்தது அந்த துரோகிகளுக்கு?

எவ்வித குற்றம் செய்தவர்களையும் எளிதில் மன்னித்து விடுவார் அருமைநாயகம். ஆனால் தேவாலயம், மசூதி, கோவில் இவற்றை இடிப்பவர்களுக்கு அவருடைய நீதிமன்றத்தில் மன்னிப்பே கிடையாது. கடவுள் வாழும் இல்லங்கள் அல்லவா இவை? ஒரு பத்து நிமிடம் இங்கு வந்து கடவுளிடம் பேசும்போது ஒவ்வொரு மனிதனும் துன்பங்களை எதிர்த்துப் போராட மனவலிமை பெறுகிறான். ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாக தன் கெட்ட குணங்களை விட்டுவிட்டு நல்லவனாக மாறுகிறான். இது அருமைநாயகத்தின் அசைக்க முடியாத நம்பிக்கை.

''முன்னமே வந்து விட்டீர்களா அருமை?''

குரல் கேட்டுத் திரும்பினார்.

ஃபாதர் ஜேம்ஸ்.

"குட் மார்னிங் ஃபாதர்! என்னை அவசரமாக வரச் சொன்னீர்களாமே?"

"கிறிஸ்துமஸுக்கு இன்னும் ஒரு வாரம் தான் இருக்கிறது. தேவாலயம் இந்த நிலை



மையில் இருக்கும்போது கிறிஸ்மஸ் திருப்பலியை எங்கு நடத்துவது? உங்களை யோசனை கேட்கலாம் என்றுதான் வரச் சொன்னேன்!"

"2000 வருட கிறிஸ்மஸை எளிமையாக நாம் கொண்டாட வேண்டும் என்பது கடவுளின் விருப்பம் போல. ஏசு மாட்டுத் தொழுவத்தில் தானே எளிமையாகப் பிறந்தார்? நாமும் தேவாலயத்தின் அருகே உள்ள திடலில் சிற்றுக் கொட்டாய் போட்டு அதில் ஒரு மூலையில் பாலன் பிறந்த குடிலை அமைப்போம், மீதி இடத்தில் திருப்பலியையும் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களையும் வைத்துக் கொள்ளலாம்!"

"நல்ல யோசனை தான், ஆனால் சிற்றுக் கொட்டகை போடுவதற்கு நாளாகாதா?"

"இரண்டே நாட்களில் முடித்து விடலாம், நான் பார்த்துக் கொள்கிறேன், நீங்கள் கவலைப்படாமல் போங்கள் ஃபாதர்!"

மணி இரவு ஏழு. புதிதாய்ப் போடப்பட்ட கொட்டகையைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார் ஃபாதர் ஜேம்ஸ்.

"கொட்டகை நன்றாக வந்திருக்கிறது. சொன்னபடி சீக்கிரம் முடித்துவிட்டீர்களே!" நிறைவாய்ச் சொன்னார்.

"நன்றி ஃபாதர்! நான் கிளம்பட்டுமா?"

"மழை வரும் போல இருக்கிறதே, இரவு தங்கிவிட்டு காலையில் போங்களேன்!"

"இல்லை ஃபாதர், வீட்டில் மனைவியும் குழந்தைகளும் காத்திருப்பார்கள், தூறிக் கொண்டு தானே இருக்கிறது. நான் போய் விடுவேன்?"

பைக்கை கிளப்பினார் அருமைநாயகம். தேவாலயம் இருக்கும் சிறிய ரோட்டைத் தாண்டி மெயின் ரோட்டிற்கு வருவதற்குள் மழை பலமாகப் பிடித்துக் கொண்டு விட்டது. மின்சாரம் வேறு தடைப்பட்டுப் போய் எங்கும் ஒரே கும்மிருட்டு. வண்டியின் வெளிச்சத்தில் மெதுவாக ஓட்டிக் கொண்டுப் போனார்.

பாதி தூரம் தான் தாண்டியிருப்பார், சாலையின் இடது ஓரத்தில் யாரோ விழுந்து கிடப்பது தெரிந்தது. வண்டியை நிறுத்தி விட்டு அருகே சென்று பார்த்தார்.

நாற்பது அல்லது நாற்பத்தைந்து வயது இருக்கும் அவனுக்கு. உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தான். உடம்பு முழுக்க ரத்தக் காயங்கள். முனகல் சப்தம் மட்டும் கேட்டது.

என்ன செய்வது என்று புரியவில்லை. எங்கும் கும்மிருட்டு. இதில் பேயாய்ப் பிடித்துக் கொண்ட மழை வேறு. ஆனால்

"நம்ம ராமசாமி தாடி வளர்த்துக்கிட்டுத் திரியறானே! ஏதாவது சோகமா?"

"ஆமா! அவன் காதலிச்ச பெண்ணையே அவன் அப்பா அவனுக்குக் கட்டி வச்சிட்டார்!"

– உ. ராஜாஜி

அவனை விட்டுவிட்டு போகவும் மனம் வரவில்லை.

அந்தப்பக்கமாய் ஒரு ஆட்டோ ஊர்ந்து கொண்டு வர, அவசரமாய் நிறுத்தினார். நிலைமையை விளக்கி அந்த மனிதனை ஏற்றினார். நேரே டாக்டர் ரவியின் கிளினிக்கிற்கு விடச் சொன்னார்.

"நிறைய ரத்தம் சேதமாகி இருக்கிறது, பிழைப்பது கஷ்டம் தான், ஆனால் ரத்தம் ஏற்றினால் நிலைமை மாறலாம்.. இவனுடைய குருப் ரத்தம் இப்போது நம்மிடம் இல்லை.... என்ன பண்ணலாம் என்று யோசிக்கிறேன்..."

"என்ன குருப் டாக்டர்?"

"ஓ பாஸிடிவ்."

"மை காட்! என்னோடதும் ஓ பாஸிடிவ் தான், தேவைப்படும் அளவு எடுத்துக் கொள்ளுங்கள் டாக்டர்!"

ரத்த தானம் முடிந்தது.

"டாக்டர் நான் வீட்டிற்குப் போகிறேன், போகிற வழியில் போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுத்து விடுகிறேன்; என்ன உதவி என்றாலும் உடனே ஃபோன் செய்யுங்கள்" சொல்லிவிட்டு கிளம்பினார் அருமைநாயகம்.

வீட்டிற்குப் போய்ச் சேரும்போது மணி 11.00.

"என்னங்க, கிறிஸ்மஸிற்கு இன்னும் இரண்டு நாள் தானே இருக்கிறது, இன்னிக்குக் கூடவா லேட்டாக வரவேண்டும்? ஷாப்பிங் போகலாம் என்று சொன்னீர்களே என்று 7.00 மணிக்கே தயாராகி காத்துக் கிட்டு இருக்கிறேன்! இந்தக் கிறிஸ்மஸைக் கொண்டாடின மாதிரி தான். எல்லாம் என் தலையெழுத்து, யாரை என்ன சொல்வது?" என்னும் கொன்னுமாக வெடித்தாள் மனைவி ரோஸி.

"என்ன பண்ணுவது, என் வேலை அப்படி!" முணுமுணுத்தார் அருமைநாயகம்.

நடந்ததைச் சொல்ல முடியாது. சொன்னால் ரகளை அதிகமாகிவிடும். நாம் உண்டு நம் வேலை உண்டு என்று இருக்க முடியாதா என்று அதற்கு நாலு திட்டு திட்டுவாள்.



"ஆண்டவனே, நீ தான் அவனுக்குப் புரியவைக்கவேண்டும்!" வேண்டிக் கொண்டார்.

டிசம்பர் 25. விடியற்காலை 6.00 மணி. தொலைபேசி சிணுங்க, வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தார் அருமை.

"ஹலோ."

"ஹலோ, டாக்டர் ரவி பேசறேன்!"

"சொல்லுங்கள் டாக்டர்!" பரபரப்பானார்.

"நீங்க கொண்டு வந்த பேஷண்ட் இறந்து விட்டான், அது சம்பந்தமாக உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும், ஒரு பத்து நிமிஷம் வந்து விட்டுப் போகிறீர்களா?"

"இதோ வந்து விட்டேன்!"

ஷர்ட்டை எடுத்து மாட்டிக் கொண்டு வெளியே ஓடி வந்தார்.

பைக்கைக் காணவில்லை.

"ரோஸி..." கோபத்தில் கத்தினார்.

"ஏன் இப்படி கத்துகிறீர்கள்?" தூக்கம் முழுவதுமாய்க் கலைந்து ஓடிவந்தாள் ரோஸி.

"எங்கே இங்கு இருந்த பைக்கைக் காணோம்?"

"உங்க பையன் ஜோ தான் எடுத்துக் கொண்டு போயிருக்கிறான்! அவனோட ஃபிரெண்டு கார்த்திக்கோட அம்மாவுக்கு திடீர் என்று உடம்பு சரியில்லையாம், அவனுடைய அப்பாவும் ஊரில் இல்லாததால் ஜோவை வரச் சொல்லி கார்த்திக் ஃபோன் பண்ணினான்; நான் என்ன சொல்லியும் கேட்காமல் பைக்கை எடுத்துக் கொண்டு போய் விட்டான். அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறான்!"

'எனக்கு வாரிசு உருவாகிவிட்டது, நன்றி இறைவா!'– இந்த அவசரத்திலும் ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினார்.

"சரி, சரி, நான் ஆட்டோ பிடித்துக் கொள்கிறேன். வந்து விவரம் சொல்லுகிறேன்!"

"வேண்டாம், சொல்லவே வேண்டாம், எங்கே வேண்டுமானாலும் போங்கள். எப்ப வேண்டுமானாலும் வாருங்கள்... நான் யார் உங்களைக் கேட்க?"

"கோபித்துக் கொள்ளாதே ரோஸி, இதோ வந்து விடுகிறேன்!"

"வாங்க ஸார்!" எதையோ எழுதிக் கொண்டிருந்த டாக்டர் ரவி எழுந்து வந்தார்.

"அவன் யார் என்ற தகவல் தெரிந்ததா?"

"இறப்பதற்கு முன்னால் அவனுக்கு நினைவு வந்தது; அவன் பெயர் குணாவாம். எப்படி இங்கே வந்தேன் என்று கேட்டான். நீங்கள் கொண்டு வந்து சேர்த்தீர்கள், ரத்தம் வேறு கொடுத்தீர்கள் என்று சொன்னேன். அதிர்ச்சி ஆகிவிட்டான். உங்கள் தேவாலயத்தைக் குண்டு வைத்துத் தகர்த்ததில் அவனுக்கும் பங்கு உண்டாம், சொல்லி விட்டுத் தேம்பித் தேம்பி அழுதான்!"

அருமைநாயகம் எழுந்தேவிட்டார், 'எப்பேர்பட்ட துரோகிக்கு உதவி செய்திருக்கிறேன்...' அவரால் ஜீரணிக்கவே முடியவில்லை.

டாக்டர் தொடர்ந்தார், "நான் சாகப் போவது உறுதி; என் தவறுக்குப் பிராயச்சித்தமாக என் உடம்பிலிருந்து எந்தெந்த உறுப்புகள் தேவையோ அதை எல்லாம் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று இன்ஸ்பெக்டரிடம் கையெழுத்துபோட்டுக் கொடுத்து விட்டான்!

அமைதியானார் அருமைநாயகம். தன்னோடு சிலுவையில் அறையுண்ட நல்ல கள்வனை யேசு மன்னிக்கவில்லையா? அவரைப் பின்பற்றித்தானே நான் நடக்க வேண்டும்...

"குணாவை மனப்பூர்வமா மன்னித்து விட்டேன் டாக்டர்!" கண்களைத் துடைத்துக் கொண்டு கிளம்பினார் அருமைநாயகம்.

"பண்டிகை கொண்டாடும் உத்தேசம் உங்களுக்கும் உங்க பிள்ளைக்கும் உண்டா, இல்லையா சொல்லிவிடுங்கள்...?" கதவைக் கையால் மறித்துக் கொண்டு சீறினாள் ரோஸி.

அடுத்தவனுக்கு உதவி செய்து இன்பம் காண்பது தான் உண்மையான கிறிஸ்மஸ் கொண்டாட்டம்! இந்த கிறிஸ்துமஸ் 2000லாவது அதைப் புரிஞ்சுக்கிட்டாயானா நல்லது.

அவள் கையை மெதுவாக விலக்கிவிட்டு உள்ளே போனார் அருமைநாயகம்.

"உங்களைக் கொஞ்சம்...

மம்முட்டி நடித்த 'டாக்டர் பாபா சாஹேப் அம்பேத்கர்' படம் ஆங்கிலம், இந்தி, மராத்தி மொழிகளில் தயாரிக்கப்பட்டு இந்தியா முழுவதும் திரையிடப்பட்டிருக்கிறது. இன்னும் சில வாரங்களில் தமிழ் உட்பட எட்டு மாநில மொழிகளில் வெளிவர இருக்கிறது. மம்முட்டியின் அம்பேத்கர் அனுபவங்களைத் தெரிந்து கொள்ள அவரைச் சந்தித்தோம். கேரளா பாணியில் கட்டப்பட்டிருக்கும் அழகான வீட்டில், ஈஸிசேரில் சாய்ந்து கொண்டு 'அம்பேத்கர்'ஐப் பற்றி உற்சாகமாக பேசினார் மம்முட்டி.



• அம்பேத்கரைப் பற்றி முதலில் அதிகம் தெரியாது...



• அம்பேத்கராக வாழ்ந்திருக்கிறேன் என்று சொல்கிறார்கள்!



• மீசையை எடுத்துவிட்டப் போனது பொருத்தமாக இருந்தது!

அம்பேத்கரைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?

உண்மையைச் சொல்லப் போனால், அம்பேத்கரை நான் முழுமையாகத் தெரிந்து கொண்டது இந்தச் சினிமாவில் நடித்த பிறகு தான்.

நமது அரசியல் சட்டத்தை எழுதியவர்களுள் ஒருவர் அம்பேத்கர் என்ற அளவுக்கு பள்ளியில் படிக்கும்போது தெரிந்து வைத்திருந்தேன். அப்புறம் சட்டக் கல்லூரியில் அரசியல் சட்டம் ஒரு பாடமாகவே இருந்த போதும் அவரைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஏன் என்றால் அம்பேத்கர் என்ற தனிப்பட்ட நபரைவிட அரசியல் சட்ட பாடத்துக்குத்தான் அங்கு முக்கியத்துவம் அதிகம். அதனால் 'ஸ்க்ரிப்ட்'ஐக் கையில் வாங்கும்போது அம்பேத்கர் என்ற மனிதரைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது என்பதுதான் உண்மை.

இந்த வாய்ப்பு வந்தபோது உங்கள் ரியாக்ஷன் எப்படி இருந்தது?

இயக்குனர் ஜப்பார் பட்டேல் என்னைச் சந்தித்து அம்பேத்கராக நடிக்க வேண்டும் என்று சொன்னபோது என் முகத்தோற்றம் கொஞ்சம் கூட பொருந்தாது என்று சொல்லி மறுத்துவிட்டேன். "இல்லை, நீங்கள் நினைப்பது தவறு, நாங்கள் நிரூபித்துக் காட்டுகிறோம், பிறகு சொல்லுங்கள்" என்று கூறிச் சென்று விட்டார்கள்.

இரண்டு வாரங்கள் கழித்து திரும்ப வந்து சில புகைப்படங்களைக் காட்டினார்கள். மார்ஃபிங் டெக்னிக்கை உபயோகப்படுத்தி என் மீசையைக் கொஞ்சம் எடுத்துவிட்டு படங்களை உருவாக்கி இருந்தார்கள். அம்பேத்கர் முகத்துக்கும் என் முகத்துக்கும்

"...தொட்டுப் பார்க்கலாமா?"

உள்ள ஒற்றுமைகளைக் கண்டு அசந்து விட்டேன். சரி, 'ஸ்க்ரிப்ட்'ஐ கொடுத்துவிட்டு போங்கள் என்றேன்.

மகாபாரதமே தோற்றுவிடும் அளவிற்கு ஒரு நீளமான ஸ்க்ரிப்ட் அது. அடேங்கப்பா, இந்த 'ஸ்க்ரிப்ட்'ஐ படமாக எடுக்க வேண்டும் என்றால் படமே குறைந்தது நான்கு மணி நேரத்துக்கு ஓடும், அப்படி என்றால் எத்தனை வருஷம் ஷூட்டிங் நடக்குமோ? அது தவிர ஆங்கிலத்தில் வேறு பேசி நடிக்க வேண்டும், இதெல்லாம் நடக்கிற காரியமா? - என்னுடைய எண்ணங்களின் போக்கு இப்படித்தான் இருந்தது. ஆனால் டைரக்டர் என்னை விடுவதாகத் தெரியவில்லை. ''ராபர்ட் நீரோவிலிருந்து பல பெரிய நடிகர்கள் வரை யாரைப் போட்டால் நன்றாக இருக்கும் என்று அலசி ஆராய்ந்து விட்டோம். எல்லோரையும்விட நீங்கள் தான் நன்றாகப் பொருந்துவீர்கள் என்று எங்கள் தயாரிப்புக் குழுவில் எல்லோரும் அபிப்ராயப்படுகிறார்கள். இந்தப் படத்தில் நீங்கள் நடித்துவிட்டால், உங்கள் நடிப்புக்கு

மம்முட்டியின் 'அம்பேத்கர்' அனுபவங்கள்

ஒரு புது பரிமாணம் கிடைத்துவிடும், இது உறுதி'' என்று எடுத்துச் சொன்னார். சரி என்று ஒப்புக் கொண்டு விட்டேன்.

இந்த வேடத்தில் நடிப்பதற்கு, உங்கள் தோற்றத்தை மாற்றிக் கொள்ள வேண்டி யிருக்குமே...

அதிகப்படியான மாற்றம் ஒன்றுமில்லை. மீசையை எடுக்கச் சொன்னார்கள். கொஞ்சம் வெயிட் போடச் சொன்னார்கள். தலையில் முன்பக்க முடியைக் கொஞ்சம் எடுத்து விடச் சொன்னார்கள். அவ்வளவுதான். மீசை விஷயம்தான் கொஞ்சம் வருத்தமாக இருந்தது. மற்றபடி ஓ.கே! (சிரிக்கிறார்)

படத்தில் உங்கள் மனதைத் தொட்ட காட்சி...

படத்தில் என் மனதைத் தொட்ட காட்சியைப் பற்றி சொல்வது இருக்கட்டும், படப்பிடிப்பில் என் மனதை உலுக்கிவிட்ட இரண்டு சம்பவங்களைப் பற்றி அவசியம் சொல்ல வேண்டும்.

அம்பேத்கர் தலித் மக்களை புத்த மதத்துக்கு மாற்றும் காட்சி. இந்தக் காட்சியின் படப்பிடிப்பில் சுமார் இரண்டு லட்சம் பேர்





• தமிழில் நடித்து விருது வாங்க வேண்டும் என்று ஆசை!



• இந்த ஒரு அனுபவம் போதும் என்று தோன்றுகிறது!

கலந்து கொண்டார்கள். அத்தனை பேரும் தங்கள் சொந்தச் செலவில் சாப்பாடு முதற் கொண்டு கட்டிக் கொண்டு தொலை தூரத்திலிருந்து வந்தவர்கள்.

மேக்கப் போட்டுக் கொண்டு நான் மேடையின் மேல் போய் நின்றதுதான் தாமதம் அந்த மக்கள் வாய்விட்டு அழ ஆரம்பித்துவிட்டார்கள். "ஜெய்பீம் ஜெய்பீம்" என்று கோஷங்கள் வேறு. உறைந்து போய் விட்டேன். இறந்து போய் கிட்டத் தட்ட நாற்பத்தைந்து வருடங்கள் ஆகியும் அம்பேத்கர் அவர்கள் மக்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்ற பெரிய உண்மை புரிந்தது.





என்னை உலுக்கிவிட்ட இன்னொரு சம்பவம். உண்மையிலேயே அம்பேத்கர் தலைமையில் மதமாற்றம் நடந்தபோது அவருக்கு உதவியாக இருந்தவர் வாமன்ராவ் காட்போலே. அந்தப் பெரியவர் இன்னும் உயிரோடு இருக்கிறார். பல உபயோகமான தகவல்களைச் சொல்லி படப்பிடிப்பிற்கு ரொம்பவும் உதவியாக இருந்தார். ஷூட்டிங் தொடங்குவதற்கு முன் என்னிடம் சகஜமாக பேசிக் கொண்டிருந்த அவர், நான் மேக்கப் போட்டுக் கொண்டு வந்ததும், "ஸார் நான் உங்களைக் கொஞ்சம் தொட்டுப் பார்க்கலாமா?" என்று உணர்ச்சி கொந்தளிப்பில் கேட்டபோது கண்கலங்கி விட்டேன்.

அம்பேத்கராக நடித்தபோது உங்களை அதிகம் சிரமப்படுத்தியது...

ஒவ்வொரு காட்சியுமே என் நடிப்பிற்குச் சவாலாக இருந்தது என்பது வேறு விஷயம். ஆனால் வாயில் ஒரு 'பேடு' (pad) வைத்துவிட்டார்கள் பாருங்கள், அதை வைத்துக் கொண்டு வசனம் பேசுவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. வாயை அது நன்றாக அடைத்துக்கொண்டு விடுவதால், வார்த்தைகள் சாமான்யமாக வெளியே வராமல் திக்குமுக்காடிப் போய்விட்டேன். படம் பார்த்தவர்கள் எல்லோரும் நான் அம்பேத்கராகவே வாழ்ந்திருக்கிறேன் என்று சொல்கிறார்கள். ஆனால் நான் உண்மையில் செத்திருக்கிறேன். அதாவது உயிரைக் கொடுத்து நடித்திருக்கிறேன்!

உழைத்ததற்குப் பலன் கிடைத்து விட்டதே...

ஆமாம். தேசிய அளவில் 'சிறந்த நடிகர்' என்ற விருதை 'அம்பேத்கர்' பெற்றுத் தந்துள்ளது. தாய்மொழி அல்லாது வேறு மொழியில் நடித்து விருது வாங்க வேண்டும் என்பது எனது நீண்டநாள் ஆசை. ஆசை நிறைவேறிவிட்டது. ஆனால் அது தமிழ்ப் படமாக இருக்க வேண்டும் என்ற நப்பாசை இருந்தது. கடைசியில் ஆங்கிலப் படத்திற்குத் தான் கிடைத்திருக்கிறது. அதனால் என்ன?


அம்பேத்கரைப் பற்றி இப்போது முழுமையாகத் தெரிந்து கொண்டு விட்ட நீங்கள் அவரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

அம்பேத்கர், சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்காகப் போராடியவர். மக்களுக்காக வாழ்ந்த அந்த மனிதாபிமானியை நேசிக்கிறேன்.

அம்பேத்கர் காரெக்டர் உங்கள்

'அம்பேத்கர்' தயாரிப்பாளர்களில் என்.எஃப்.டி.சியும் ஒன்று. அதன் சென்னைக் கிளையின் துணைப் பொது மேலாளர் பரமேஷ்வரனிடம் படத்தின் வெற்றியைப் பற்றி தயாரிப்பு குழுவின் எதிர்பார்ப்பு என்ன என்று கேட்டோம்.

"காந்தி படம் அமோக வரவேற்பு பெற்றது: காரணம் மகாத்மாவின் வாழ்வில் துணிச்சலான போராட்டங்களும் திருப்பங்களும் நிறைந்திருந்தன; அவரைப் போலவே அம்பேத்கரும் வாழ்நாள் முழுவதும் போராளியாக விளங்கியவர்; அதனால் படம் நிச்சயம் நல்ல வரவேற்பைப் பெறும். எல்லா மாநில அரசுகளும் வரிவிலக்கு அளிக்கப்போவது உறுதி. இது ஒரு கூடுதலான உந்துதலாக இருக்கும்" என்று தன்னம்பிக்கையோடு சொல்கிறார்.



லைஃப்-டைம் காரெக்டர் என்று சொல்லலாமா?


லைஃப்-டைம் காரெக்டர் என்றால் ஒரு நடிகனின் வாழ்க்கையில் சிகரமாய் அமைந்த காரெக்டர் என்று பொருள். அதாவது அதற்குமேல் செய்வதற்கு அவனுக்கு ஒன்றுமே இல்லை என்று அர்த்தம். அம்பேத்கர் காரெக்டர் எனக்குக் கிடைத்த முக்கியமான, சிறப்பான காரெக்டர்களில் ஒன்று, அவ்வளவுதான். நான் சாதிக்க இன்னும் எவ்வளவோ இருக்கிறது. அப்படி இருக்கும்போது இதை லைஃப்-டைம் காரெக்டர் என்று சொல்லமாட்டேன்.

அம்பேத்கரைத் தொடர்ந்து வேறு ஏதாவது தேசியத் தலைவர் காரெக்டெரில் நடிப்பீர்களா?

வாழ்ந்து மறைந்த தலைவர்களைப் போல் நடிப்பது ரொம்ப கஷ்டமான காரியம். ஏன் சொல்கிறேன் என்றால், வேறு காரெக்டர்களில் நடிக்கும்போது நமக்கேற்றவாறு, சில மாறுதல்களைச் செய்து கொள்ளலாம். ஆனால் இந்த மாதிரி வேடங்களில், ஒரு வளையத்துக்குள் தான் நடிக்க வேண்டியிருக்கும். மம்முட்டி என்ற நடிகனுக்கு இங்கு வேலையும் இருக்காது. அவன் கற்பனைக்கோ உள்வாங்குதலுக்கோ இடமும் இருக்காது. அதனால் இந்த ஒரு அனுபவம் போதும் என்று தோன்றுகிறது.

'அம்பேத்கர்' தமிழிலும் வர இருக்கிறது. அதில் உங்களுக்காகக் குரல் கொடுக்கப்போவது யார்?







இதுவரை 12 தமிழ்ப் படங்களில் நடித்திருக்கிறேன். யாரும் டப்பிங் வாய்ஸ் கொடுத்ததில்லை. நானேதான் பேசி நடித்திருக்கிறேன். அது போல்தான் இதுவும். வேறு யாராவது டப்பிங் வாய்ஸ் கொடுக்க வேண்டும் என்றால் மம்முட்டி எதற்கு? அவர்களே நடித்து விட்டுப் போகலாமே!

தமிழ்நாட்டைச் சேர்ந்தவராகி விட்டீர்கள் என்று சொல்லுங்கள்...

சந்தேகமில்லை. கடந்த பத்து வருடங்களாகவே நான் தமிழ் நாட்டுக் குடிமகன்தான். படப்பிடிப்புக்காகக் கேரளா போய் வருவதோடு சரி. ஆனால் ஒன்று மட்டும் எனக்குப் புரியவில்லை. இன்றுகூட என்னைக் குறிப்பிடும்போது "கேரளா சூப்பர் ஸ்டார் மம்முட்டி" என்றுதான் சொல்கிறீர்கள். அது ஏன்? (சிரிக்கிறார்) தமிழ் நடிகர் என்று சொல்லாவிட்டாலும் 'நடிகர் மம்முட்டி' என்று பொதுவாகச் சொல்லக் கூடாதா?


இனிமேல் சொன்னால் போகிறது. சூப்பர் ஸ்டார் இமேஜை தக்க வைத்துக் கொள்ள என்ன செய்கிறீர்கள்?

அதை எல்லாம் தக்க வைத்துக் கொள்ளவும் முடியாது உயர்த்தவும் முடியாது. இது போன்ற பட்டங்கள் தானாக வரும், போகும். என்னைப் பொறுத்தவரை, உண்மையாக உழைத்தேன், உழைக்கிறேன், உழைப்பேன், அவ்வளவுதான்!

சந்திப்பு: **ஸ்ரீநிவாசன்**

அட்டை, படங்கள்: **ராஜன்**

பொன்னியின் செல்வன்



நாற்பத்து ஏழாம் அத்தியாயம்

நந்தினியின் மறைவு!

அமரர் கல்கி

ஓடி வந்த குதிரைகளைப் பார்த்து வியந்தவர்களில் முதலில் சுய உணர்வு பெற்றவன் ரவிதாஸன்தான்.

''தேவி! இந்தப் போலி வைஷ்ணவன் தன் வேலைத்தனத்தைக் காண்பித்துவிட்டான். 'இவன் ஒற்றன், இவனை நம்ப வேண்டாம்' என்று எத்தனையோ தடவை தங்களுக்கு நான் எச்சரித்திருக்கிறேன். நம்மைப் பிடிப்பதற்கு இவன்தான் ஆட்களைக் கொண்டு வந்திருக்கிறான். ஆனால் இவனால் நம்மைப் பிடிக்க முடியாது. இவனுடைய தெய்வமாகிய நாராயணனே வந்தாலும் முடியாது. வாருங்கள் போகலாம். குதிரைகள் வருவதற்குள் மலைமேல் ஏறி விடலாம்!'' என்றான் மந்திரவாதி.

ஆழ்வார்க்கடியான், ''நந்தினி! இந்தப் பாதகர்களுடன் நீ போகாதே! இவர்களுடன் நீ சேர்ந்ததினால் நேர்ந்த விபத்துக்கள் எல்லாம் போதும்!'' என்றான்.

நந்தினி ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, ''திருமலை! நான் வெகு நாளாக ஒன்று கேட்டுக்கொண்டிருந்தேன். அது நினைவு இருக்கிறதா? என் அன்னையிடம் அழைத்துப்

போகும்படி உன்னை வேண்டிக்கொண்டிருந்தேன். இப்போதாவது என்னை நீ என் தாயிடம் அழைத்துப் போவதாக வாக்களித்தால் உன்னுடன் வருகிறேன். இல்லாவிடில் இவர்களுடன் போகிறேன்'' என்றாள்.

''நந்தினி! இனி என்னால் அது இயலாத காரியம்...!'' என்று திருமலை சொல்வதற்குள், ரவிதாஸன் குறுக்கிட்டு, ''இவன் என்ன அழைத்துப் போவது? நான் அழைத்துப் போகிறேன், வாருங்கள்!'' என்றான்.

''ஆமாம், ஆமாம்; இவன் உன்னை உன் அன்னையிடம் யமலோகத்துக்கு அழைத்துப்போவான்! உன் அன்னையைக் கொன்றது போல் உன்னையும் கொன்று யம லோகத்துக்கு அனுப்பி வைப்பான்! நந்தினி! இந்தப் பாதகர்களுடைய சகவாசம் இனியும் உனக்கு வேண்டாம். இவர்களில் ஒருவன் உன் தாயைக் கொன்றவன்! மந்திரவாதியின் முகத்தைப் பார்! கொலைக்காரன் என்று எழுதியிருக்கிறது!'' என்று சொன்னான் ஆழ்வார்க்கடியான்.

ரவிதாஸன் முகத்தில் கொந்தளித்த கோபத்துடன் ''பொய்! பொய்!'' என்று கத்தினான்.

சற்று முன் சாந்தம் குடி கொண்டிருந்த நந்தினியின் கண்களில் வெறியின் அறிகுறி காணப்பட்டது.

''திருமலை! இது உண்மையா? என் அன்னை உண்மையிலேயே இறந்து விட்டாளா? அவளை இனி நான் பார்க்க முடியாதா?'' என்றாள்.

''சந்தேகமிருந்தால், இதோ இந்தப் பெண்ணைக் கேட்டுத் தெரிந்து கொள். இவர்களில் ஒருவனான சோமன் சாம்பவன்தான் வேல் எறிந்து உன் அன்னையைக் கொன்றவன். இவள் நேரில் பார்த்தாள். அத்தையைக் கொன்றவனைப் பின் தொடர்ந்து வந்தாள்! பூங்குழலி! சொல்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''ஆமாம்! நானே என் கண்ணால் பார்த்தேன்! என் அத்தையைக் கொன்றவனைப் பழி வாங்கவே இங்கு வந்தேன்!'' என்றாள் பூங்குழலி.

நந்தினி பைத்தியம் பிடித்தவள் போல் வெறி கொண்ட சிரிப்புச் சிரித்தாள். ''பழி வாங்க வந்தாயா? பழி! பழி! நான் ஒருத்தி பழி வாங்கிய இலட்சணம் போதாதா?'' என்று சொல்லிவிட்டு, ரவிதாஸனைப் பார்த்து, ''துரோகி! சண்டாளா! இப்படியா செய்தாய்?'' என்றாள்.

''ராணி! நீ நினைப்பது தவறு! நான் ஒரு துரோகமும் செய்யவில்லை. சோமன் சாம்பவன் சக்கரவர்த்தியின் மீது வேலை எறிந்தான். அந்த ஊமைப் பைத்தியக்காரி குறுக்கே விழுந்து செத்தாள்! அவள் தலைவிதி! இப்போது நீ என்ன சொல்கிறாய்? எங்களுடன் வரப் போகிறாயா, இல்லையா? அதோ, குதிரைகள் நெருங்கி வந்துவிட்டன!'' என்றான்.

அவனுடைய வார்த்தைகளை நந்தினி காதில் வாங்கிக் கொண்டதாகத் தோன்றவில்லை. திடீரென்று கீழே உட்கார்ந்துகொண்டாள். இரண்டு கண்களையும் இரண்டு கரங்களால் பொத்திக்கொண்டாள். அவள் உடம்பெல்லாம் குலுங்கும்படி விம்மி அழுதாள். அழுகையுடன் வெறிச் சிரிப்பும் கலந்து வந்தது.

ரவிதாஸன் தன் ஆட்களைப் பார்த்து, ''ஓடுங்கள்! ஓடிப் போய் மலையிலேறிக் கொள்ளுங்கள்! இனி, ராணியை நம்புவதில் பயனில்லை!'' என்றான்.

எல்லோரும் ஓடினார்கள்.

ரவிதாஸன், ''வைஷ்ணவனே! இந்தா, உன் விஷமத்துக்குக் கூலி!'' என்று சொல்லிக் கையிலிருந்த தடியினால் வைஷ்ணவனின் தலையில் ஒரு அடி போட்டு விட்டு ஓட்டம் எடுத்தான்.

ஆழ்வார்க்கடியான் ''நமோ நாரா

யணா!'' என்று சொல்லித் தலையை ஒருமுறை தடவிக்கொண்டான்.

ஓடியவர்கள் எல்லாரும் மலைக் குகைக்குள் நுழைந்தார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் குகைக்கு மேலே குன்றின் உச்சியில், கானாரி ஆறு அருவியாக மாறி விழும் இடத்தின் அருகே நின்றார்கள்.

அதே சமயத்தில் குதிரைகள் மலை அடிவாரத்துக்கு வந்து சேர்ந்தன. சரியான வழியில்லாமல் பெரிய பெரிய பாறைக் கற்கள் எங்கும் பரவிக் கிடந்த படியால் குதிரைகள் வந்து சேர்வதற்கு இத்தனை நேரம் பிடித்தது.

குதிரைகள் மீது வந்தவர்களில் முன்னால் வந்தவர்கள் சின்னப் பழுவேட்டரையரும் கந்தமாறனுந்தான் என்பதை ஆழ்வார்க்கடியான் பார்த்துக்கொண்டான். அவர்களுக்குப் பின்னால் சேந்தன் அமுதன் ஒரு குதிரையின் மீது கயிற்றினால் சேர்த்துக் கட்டப்பட்டு வருவதையும் பார்த்தான்.

''வாருங்கள்! வாருங்கள்! நல்ல சமயத்தில் வந்து சேர்ந்தீர்கள்!'' என்றான்.

சின்னப் பழுவேட்டரையரும் கந்தமாறனும் குதிரைகளின் மீதிருந்து கீழே குதித்தார்கள்.

கீழே உட்கார்ந்து விம்மிக் கொண்டிருந்த நந்தினியின் பேரில் முதலில் அவர்கள் கவனம் சென்றது.

கந்தமாறன் நந்தினியின் அருகில் சென்றான். ஏதோ சொல்லப் பிரயத்தனப் பட்டான். ஆனால் அவன் வாயிலிருந்து வார்த்தைகள் வரவில்லை.

சின்னப் பழுவேட்டரையர் ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, ''வைஷ்ணவனே! நீ எப்படி இங்கே வந்தாய்? எதற்காக வந்தாய்?'' என்று கேட்டார்.

''தளபதி! தாங்கள் யாரைத் தேடிக் கொண்டு வந்தீர்களோ, அவரைத் தேடிக் கொண்டுதான் நானும் வந்தேன். பெரிய பழுவேட்டரையர் அதோ அந்தக் குகைக்குள் இருக்கிறார்!'' என்றான்.

''நிஜமாகவா? உயிரோடு இருக்கிறாரா?'' என்று சின்னப் பழுவேட்டரையர் ஆவலோடு கேட்டார்.

''ஆமாம்; இன்னும் உயிரோடு இருக்கிறார். தங்கள் தமையனாரிடம் அணுகுவதற்கு யமனும் பயப்படுவான் அல்லவா? ஆகையால் அதோ அந்தக் கொலைகாரர்கள் செய்த முயற்சி தங்கள் தமையனார் விஷயத்தில் பலிக்கவில்லை!'' என்று சொல்லி விட்டு திருமலை குன்றின் உச்சியில் நின்ற ரவிதாஸன் முதலியவர்களைச் சுட்டிக் காட்டினான்.

''அவர்கள் யார்? ஏன் அவர்களைக் கொலைகாரர்கள் என்று சொல்லுகிறாய்?''

''அவர்கள்தான் மந்திரவாதி ரவிதாஸனும் அவனுடைய கூட்டத்தாரும். வீரபாண்டியனுடைய ஆபத்துதவிப் படையைச் சேர்ந்தவர்கள். சக்கரவர்த்தியைக் கொல்ல முயன்றவர்கள் அவர்கள்தான்: இளவரசர் ஆதித்த கரிகாலரைக் கொன்ற பாவிகளும் அவர்களேதான்!'' என்றான் திருமலை.

கந்தமாறன் குறுக்கிட்டு, ''பொய்! பொய்! இளவரசரைக் கொன்றவன் வந்தியத்தேவன்! உன் சிநேகிதன் செய்த குற்றத்தை மறைக்கப் பார்க்கிறாயா?'' என்றான்.

''முட்டாளே! சும்மா இரு!'' என்று சின்னப் பழுவேட்டரையர் அவனை அதட்டினார். பின்னர் வைஷ்ணவனைப் பார்த்து, ''தனாதிகாரியையும் அவர்கள் கொல்லப் பார்த்தார்களா? எப்படித் தப்பினார்?'' என்று கேட்டார்.

''இதோ உட்கார்ந்து விம்மிக் கொண்டிருக்கும் பழுவூர் இளைய ராணியின் உதவியினால்தான் தப்பினார்!''

''ஏன் இளையராணி அழுதுகொண்டிருக்கிறாள்?''

''அவருடைய அன்னை இறந்து

விட்டாள் என்று கேள்விப்பட்டார். அதனால் அழுகிறார்! இதெல்லாம் பிறகு விசாரித்துக் கொள்ளக்கூடாதா?''

''ஆம், ஆம்! பெரிய பழுவேட்டரையரை முதலில் பார்க்க வேண்டும். நீ போய் நான் வந்திருப்பதைச் சொல்லு!''

சின்னப் பழுவேட்டரையருக்குத் தம் தமையனாரிடம் உள்ள பயபக்தி அச்சமயம் கூடச் சிறிதும் குன்றவில்லை. ஆகையால் திடீரென்று தமையனாரைப் போய்ப் பார்க்க அவர் தயங்கினார்.

''ஐயா! தங்கள் தமையனார் இனி எங்கும் போய்விட மாட்டார். நான் போய்த் தாங்கள் வந்திருப்பதைச் சொல்லுகிறேன். அதோ அந்தக் கொலைகாரர்களைப் பிடிக்கத் தாங்கள் எதுவும் செய்யப் போவதில்லையா?''

சின்னப் பழுவேட்டரையர் தம் நெற்றியைக் கையினால் அழுத்திக் கொண்டு, ''ஆம், ஆம்! முன்னொரு சமயம் இப்படித்தான் என் புத்தி தவறி விட்டது! சக்கரவர்த்தியைக் கொல்ல முயன்றவனைத் தப்பி ஓடும்படி விட்டேன்!'' என்றார்.

''அவனும் தப்பிவிடவில்லை. அதோ அந்தக் குன்றின் மேலேதான் இருக்கிறான். உங்கள் ஆட்களுக்குச் சீக்கிரம் கட்டளையிடுங்கள்!''

உடனே தளபதி காலாந்தக கண்டர் தம்முடன் வந்த வீரர்களைப் பார்த்துக் கட்டளை பிறப்பித்தார். அவர்கள் குதிரைகள் மீதிருந்து இறங்கிக் கானாரி நதி குன்றின் மீதிருந்து அருவியாக விழும் இடத்துக்கு அருகாமையில் போய்ச்சேர்ந்தார்கள்.

அவர்கள் அங்கே சேர்ந்ததும் மேலேயிருந்து பெரிய பெரிய உருண்டைக் கற்கள் கீழே விழ ஆரம்பித்தன. வீரர்கள் அந்தக் கற்கள் தங்கள் தலையில் விழாமல் தப்புவதற்காக அங்குமிங்கும் அவசரமாக நகர்ந்தார்கள். இரண்டொருவர் அக்கற்களினால் தாக்குண்டு கீழே விழுந்தார்கள்

சின்னப் பழுவேட்டரையர், ''அவர்கள் எப்படி மேலே ஏறினார்கள்? தெரியுமா?'' என்று கேட்டார்.



“குகைக்குள் புகுந்து ஏறினார்கள். குகையில் இரகசிய வழி இருப்பதாகத் தோன்றுகிறது. வாருங்கள், போய்ப் பார்க்கலாம்!” என்று ஆழ்வான் முதலில் சென்றான். காலாந்தக கண்டரும் கந்தமாறனும் பின் தொடர்ந்தார்கள்.

குகைக்குள்ளேயிருந்து ஒரு நெடிய கம்பீரமான உருவம் தட்



டுத் தடுமாறித் தள்ளாடிக் கொண்டு வெளியில் வந்தது. குகை வாசலில் நின்று, நெருங்கி வருகிறவர்களை உற்றுப் பார்த்தது.

தமையனாரை அடையாளங் கண்டு கொள்ளத் தம்பிக்குச் சிறிது நேரம் பிடித்தது.

உடம்பெல்லாம் காயங்களுடன் முகம் வெளுத்துப் பிரேதக்களை பெற்று நின்ற பெரிய பழுவேட்டரையரை அடையாளம் தெரிந்ததும், சின்னப் பழுவேட்டரையர், "அண்ணா!" என்று அலறிக்கொண்டு போய்ப் பெரிய பழுவேட்டரையரைக் கட்டிக்கொண்டார்.

அண்ணனின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. அவருடைய வாய், "தம்பி! நீ பலமுறை எச்சரிக்கை செய்தாய்! அதைப் பொருட்படுத்தாமல் மோசம் போனேன்!" என்று தழுதழுத்த மெல்லிய குரலில் முணுமுணுத்தது.

அச்சமயம் ஆழ்வார்க்கடியானும் கந்தமாறனும் குகைக்குள் பிரவேசிக்க யத்தனித்தார்கள்.

பெரிய பழுவேட்டரையர் அவர்களைத் தடுத்து நிறுத்தி, "எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டார்.

"கொலைகாரர்கள் இந்தக் குகைக்குள்ளே புகுந்தார்கள்..."

"எந்தக் கொலைகாரர்கள்?"

"மந்திரவாதி ரவிதாஸனும் அவனுடைய கூட்டாளிகளும்."

"அவர்கள் கொலைகாரர்கள் அல்ல" என்றார் பெரிய பழுவேட்டரையர்.

"பார்த்தீர்களா? வந்தியத்தேவன் தான் கொலைகாரன் என்று நான் சொல்லவில்லையா?" என்றான் கந்தமாறன்.

பெரிய பழுவேட்டரையர் அவனை உற்றுப் பார்த்துவிட்டு, "இந்த முட்டாள் வாலிபன் எப்படி இங்கே வந்து சேர்ந்தான்?" என்றார்.

"கந்தமாறன்தான் கடம்பூரிலிருந்து செய்தி கொண்டு வந்தான்."

"என்ன செய்தி?"

"இளவரசர் கரிகாலர் இறந்துவிட்ட செய்தியைக் கொண்டு வந்தான். நம்முடைய பலத்தை உடனே திரட்டிச் சேர்த்து மதுராந்தகரைச் சிம்மாசனம் ஏற்ற ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சம்புவரையர் இவன் மூலமாகச் செய்தி அனுப்பி வைத்திருக்கிறார்!"

"ஆகா! அப்படியா?" என்று பெரிய பழுவேட்டரையர் சிறிதும் உற்சாகமின்றிக் கூறினார்.

பிறகு, "தஞ்சாவூரில் நிலைமை எப்படியிருக்கிறது?" என்று கேட்டார்.

"அண்ணா! விவரமாகக் கூற வேண்டும். தாங்கள் மிக்க பலவீனமாக இருக்கிறீர்கள். தயவு செய்து உட்கார்ந்து கொண்டு பேசலாமா!" என்றார் சின்னப் பழுவேட்டரையர்.

தனாதிகாரி குகையின் வாசலிலேயே உட்கார்ந்துகொண்டார்.

"ஐயா! சற்று இடங் கொடுத்தால், குகைக்குள்ளே போய்க் குன்றின் மேல் ஏற வழி இருக்கிறதா என்று பார்க்கலாம்" என்றான் வைஷ்ணவன்.

"எதற்காக?" என்றார் பெரிய பழுவேட்டரையர்.

"ரவிதாஸன் கூட்டத்தார் இந்தக் குகையில் புகுந்துதான் குன்றின் மேலே ஏறினார்கள்" என்றான் திருமலை.

பெரிய பழுவேட்டரையர் தலையை அசைத்துவிட்டு, "குகைக்குள் போவதில் உபயோகமில்லை, அப்பனே! அவர்கள் மேலேயிருந்து பாறையைப் புரட்டித் தள்ளிக் குகை வழியையும் அடைத்து விட்டார்கள். பாறை என் மேல் விழுவதற்கிருந்தது. என் உயிர் தப்பியதே தெய்வச்செயல்தான்! போங்கள்! நீங்கள் இருவரும் போங்கள்! மலை மேல் ஏறுவதற்கு வேறு வழி இருக்கிறதா, பாருங்கள்!" என்றார்.

ஆழ்வார்க்கடியானும் கந்தமாறனும் அப்பால் சென்றபோது பெரிய பழுவேட்டரையருடைய பார்வை சேந்தன் அமுதன் - பூங்குழலி இவர்கள் பேரில் விழுந்தது.

"அவர்கள் யார்? எங்கு வந்தார்கள்?" என்று கேட்டார்.

"அந்தப் பெண் கோடிக்கரைத் தியாகவிடங்கரின் மகள் பூங்குழலி. அவள் தன் அத்தையைக் கொன்றவனைத் தேடிக்கொண்டு வந்தாள். அவளைத் தேடிக்கொண்டு சேந்தன் அமுதன் வந்தான். சேந்தன் அமுதன் வழி காட்டித்தான் நாங்கள் இங்கு வந்து தங்களைக் கண்டுபிடித்தோம்!" என்றார் சின்னப்பழுவேட்டரையர்.


"தஞ்சாவூரில் நடந்ததையெல்லாம் விவரமாகச் சொல்!" என்றார் பெரிய பழுவேட்டரையர். சின்னப் பழுவேட்டரையர் அவ்வாறே சொல்லலுற்றார். மந்திரவாதிக் கூட்டத்தில் ஒருவன் பொக்கிஷ நிலவறையில் ஒளிந்திருந்து, சக்கரவர்த்தியைக் கொல்லுவதற்காகச் சமயம் பார்த்திருந்து வேலை எறிந்ததையும் சக்கரவர்த்தியைக் காப்பாற்றுவதற்காக மந்தாகினி தேவி இடையில் புகுந்து உயிரை விட்டதையும் சொன்னார். பிறகு அவர் தொடர்ந்து கூறியதாவது:-

"அண்ணா! இதற்கிடையில் கொடும்பாளூர் வேளான் பெரிய சைன்யத்துடன் திடீர் என்று வந்து தஞ்சாவூர்க் கோட்டையை முற்றுகையிடத் தொடங்கினான். தாங்கள் இல்லாதபடியால் வேளானுடன் போர் தொடங்குவதா, இல்லையா என்று என்னால் நிச்சயிக்க முடியவில்லை. சக்கரவர்த்தியை யோசனை கேட்கவும் முடியவில்லை. முதன்மந்திரி அநிருத்தர் கோட்டைக்குள்ளேதான் இருக்கிறார். அவர் தாங்கள் வந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்றும், அதுவரை கோட்டையைப் பாதுகாத்தால் போதும் என்றும் கூறினார். நல்லவேளையாக இச் சமயத்தில் இளவரசர் அருள்மொழிவர்மரும் கொடும்பாளூர் வேளானுடைய மகள் வானதியும் கோட்டைக்குள் வந்து சேர்ந்தார்கள். இளவரசர் யானைப் பாகன் வேடத்தில் வந்தார். வானதி பழையாறை இளையபிராட்டியிடமிருந்து அவசரச் செய்தி கொண்டு வந்திருப்பதாகக் கூறினாள். வேளானுடைய மகள் கோட்டைக்குள்ளே இருப்பது நமக்கு அநுகூலந்தானே என்று நினைத்து அவள் ஏறி வந்த யானையை உள்ளே விட்டேன். சக்கரவர்த்தியின் அரண்மனை வாயிலிலே யானைப் பாகன்தான் இளவரசர் அருள்மொழி வர்மர் என்று தெரிந்தது. நான் கொஞ்சம் மிரண்டுதான் போய்விட்டேன். அண்ணா! சின்ன இளவரசரிடம் ஏதோ அதிசய சக்தி இருக்கத்தான் செய்கிறது. அவர் திருமுகத்தைப் பார்த்ததும் எனக்கே கைகால் வெலவெலத்து விட்டது; நெஞ்சம் இளகிவிட்டது. என்னை அறியாமல் என் கைகள் கூப்பிக்கொண்டன. அவரை வணங்கி வரவேற்க வேண்டியதாகி விட்டது. சோழ நாட்டு மக்கள் இளவரசர் அருள்மொழி வர்மர் என்றால் தலைகால் தெரியாமல் கூத்தாடுவதில் வியப்பில்லைதானே...?"

"போதும்! போதும்! அதுதான் தெரிந்திருக்கிறதே! அருள்மொழிவர்மன் கடலில் முழுகி இறந்தான் என்பதெல்லாம் கட்டுக் கதை என்று நான் எண்ணியதும் சரியாய்ப் போய்விட்டது. அப்புறம் நடந்ததைச் சொல்லு! இளவரசர் எதற்காக யானைப் பாகன் போல் வேஷம் பூண்டு கோட்டைக்குள் வந்தார்?" என்று பழுவேட்டரையர் கேட்டார்.

"இளவரசர் என்று தெரிந்தால் கொடும்பாளூர் வேளான் அவரைத் தடுத்து நிறுத்திக்கொள்வான். கோட்டைக்குள் போக விட மாட்டான். வேளானுடைய படை வீரர்களும் பெரிய ஆர்ப்பாட்டம் செய்வார்கள் என்று எண்ணி அவ்வாறு மாறு வேடம் பூண்டு வந்தாராம். அந்த வரையில் இளவரசரைப் பாராட்டத்தான் வேண்டும். இளவரசர் சக்கரவர்த்தியைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்த சமயத்திலேதான் மேலேயிருந்து கொலைகாரன் வேல் எறிந்தான். தெய்வாதீனமாக அது அந்த ஊமைப் பைத்தியத்தின் பேரில் விழுந்து அவள் இறந்தாள். சக்கரவர்த்தியின் பேரில் விழுந்து அவர் இறந்திருந்தால், நம்முடைய குலத்துக்கு என்றும் அழியாத களங்கம் ஏற்பட்டிருக்கும்.





பெரிய பழுவேட்டரையர் தமது வாய்க்குள்ளே "இப்போது களங்கம் ஏற்படவில்லையா, என்ன? தீராத களங்கம் ஏற்பட்டுத்தான் விட்டது!" என்று முணுமுணுத்தார்.

"அண்ணா! என்ன சொன்னீர்கள்?" என்று காலந்தக கண்டர் கேட்டார்.

"ஒன்றுமில்லை; மேலே நடந்ததைச் சொல்லு!" என்றார் தனாதிகாரி.

"அப்புறம் ஒரு பெரிய அற்புதம் நடந்தது. வெகு காலமாக நடமாட முடியாமலிருந்த சக்கரவர்த்திக்குத் திடீரென்று கால்களில் சக்தி உண்டாகிவிட்டது. ஓடிப்போய் அந்த ஊமையை எடுத்து மடியில் போட்டுக்கொண்டு புலம்ப ஆரம்பித்தார். சிறிது நேரம் நாங்கள் எல்லாரும் அந்தக் காட்சியை கண்டு பிரமித்து நின்றுகொண்டிருந்தோம். பூங்குழலி என்னும் இந்த ஓடக்காரப் பெண்தான் 'கொலைகாரனைப் பிடிக்கப் போகிறேன்' என்று கூவிக் கொண்டு ஓடினாள். அவள் நன்றாயிருக்க வேண்டும். அவள் மூலமாகத்தான் இன்று தங்களை இந்தக் கோலத்திலாவது பார்க்கும் பாக்கியம் கிடைத்தது..."

பெரிய பழுவேட்டரையர் கண்களில் நீர் ததும்ப, "தம்பி! புராண இதிகாசங்களில் தமையனிடம் பக்தியுள்ள தம்பிகளைப் பற்றிக் கேட்டிருக்கிறேன். ஆனால் உன்னைப் போல் பக்தியுள்ள சகோதரன் அவர்களில் யாரும் இருக்க முடியாது. போகட்டும்; அப்புறம் நடந்ததைச் சொல்!" என்றார்.

"பூங்குழலியைப் பின்பற்றி நானும் பொக்கிஷ நிலவறையிலுள்ள சுரங்கப்பாதையில் சென்றேன். அங்கே இருட்டில் ஒருவனைக் கைப் பற்றினேன். அவன்தான் கொலைகாரனாயிருக்க வேண்டும் என்று நினைத்தேன். குரலைக் கேட்டதும், மதுராந்தகத் தேவன் என்று தெரிந்தது."

"அவன் எதற்காக நிலவறைப் பாதையில் வந்தானாம்?"

"அது எனக்கும் தெரியவில்லை. கேட்டதற்குச் சரியான மறுமொழியும் சொல்லவில்லை. கொலைகாரன் அவன்தான் என்ற சந்தேகம் யாருக்காவது உண்டாகி விடப் போகிறதே என்று எனக்குப் பயமாயிருந்தது..."

"ஒருவேளை உண்மை அதுதானோ, என்னமோ?"

"இல்லை, அண்ணா, இல்லை! அந்தச் சாதுப் பிள்ளை அவ்வளவு தூரத்துக்குப் போகக் கூடியவனல்ல. மேலும், வேலை எறிந்து விட்டு ஓடியவனை நானே கண்ணால் பார்த்திருந்தேன். மதுராந்தகன் பொக்கிஷ நிலவறையிலிருந்து வருவதற்கு இலேசில் சம்மதிக்கவில்லை. அவனை மெதுவாகச் சரிப்படுத்தி அரண்மனையில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டுக் காவலும் போட்டு விட்டு மறுபடியும் பொக்கிஷ நிலவறைக்குப் போக எண்ணினேன். அதற்குள் வேறு பெரிய சம்பவங்கள் நடந்துவிட்டன. 'சக்கரவர்த்தி இறந்து விட்டார்' என்றும், யாரோ அவரைக் கொன்று விட்டார்கள் என்றும் வெளியிலே வதந்தி பரவி விட்டது. உடனே கொடும்பாளூர் வேளார் அவருடைய படை வீரர்களைக் கோட்டையைத் தாக்கும்படி கட்டளையிட்டு விட்டாராம். வேளிர் படையுடன் கைக்கோளர் படையும் வந்து சேர்ந்துகொண்டிருந்தது.

நமது வீரர்கள் அச் சமயம் ஆயத்தமாக இல்லை. அவர்களுக்குக் கட்டளையிட நானும் கோட்டை வாசலில் இல்லை, ஆகையால் வேளிர் படை; கைக்கோளர் படை வீரர்கள், கோட்டைக் கதவுகளை உடைத்துக்கொண்டும் சுவர்களில் ஏறிக் குதித்தும் உள்ளே வரத் தொடங்கி விட்டனர். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு நான் கோட்டை வாசல் போய்ச் சேர்வதற்குள் பதினாயிரம் வீரர்கள் கோட்டைக்குள் நுழைந்து விட்டார்கள். நம்முடைய வீரர்களோ சுமார் இரண்டாயிரம் பேர் தான். அவர்கள் வெளியிலிருந்து வந்தவர்களோடு தீரத்தோடு போரிட்டார்கள். நான் போய்க் கட்டளையிட்டுச் சண்டையை நிறுத்தினேன். நமது வீரர்களையெல்லாம் ஒரே இடத்தில் சேர்த்துக்கொண்டேன். இனிக் கோட்டைக்குள் இருப்பதில் பயனில்லை என்று முடிவு செய்துகொண்டு நமது வீரர்களுடன் வெளிக் கிளம்பினேன். வேளிர் - கைக்கோளர் படைகள் எங்களைத் தடுத்து நிறுத்தப் பார்த்தன. தடுத்தவர்களையெல்லாம் வெட்டி வீழ்த்தி அதாஹதம் செய்துகொண்டு வெளியே வந்துவிட்டோம். 'பழுவூர்க் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்காவது மதுராந்தகத் தேவருக்காவது ஒரு சிறிய கெடுதல் நேர்ந்தாலும் கொடும்பாளூர் வம்சத்தைப் பூண்டோடு அழித்து விடுவேன்' என்று பூதிவிக்கிரமகேசரிக்குச் செய்தி அனுப்பினேன். பிறகு தாங்கள் கடம்பூரில் இருப்பீர்கள் என்று எண்ணிக்கொண்டு தங்களைச் சேர்வதற்காக விரைந்து வந்தேன். எதிரில் குடமுருட்டி ஆற்றின் கரையில் கந்தமாறன் குதிரை மேல் ஏறிப் பறந்து விழுந்துகொண்டு வந்தான். பழுவூர்ப் பனைக் கொடியைக் கண்டதும் நின்றான். அவன் கொண்டு வந்த செய்தி என்னை மேலும் திகைக்கும்படி செய்தது. தாங்கள் கடம்பூரிலிருந்து தஞ்சைக்குக் கிளம்பிச் சில நாட்கள் ஆயினவென்றும், தங்களுக்குப் பெரிய சம்புவரையர் செய்தி அனுப்பியிருப்பதாகவும் கூறினான். தாங்கள் தஞ்சைக்கு வந்து சேரவே இல்லையென்று தெரிந்ததும் அவனும் திகைத்துப் போய்விட்டான். பிறகு சம்புவரையர் என்னதான் செய்தி சொல்லி அனுப்பினார் என்று கேட்டேன். இளவரசர் கரிகாலர் இறந்து விட்டார் என்றும், அவரை வந்தியத்தேவன் கொன்றுவிட்டான் என்றும், ஆகையால் மதுராந்தகத் தேவரைச் சிம்மாசனத்தில் அமர்த்த இதுதான் தக்க சமயம் என்றும், அதற்கு வேண்டிய முயற்சிகளை உடனே செய்ய வேண்டும் என்றும், நம்மைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் ஓலை அனுப்பிப் படை திரட்ட வேண்டும் என்றும் பெரிய சம்புவரையர் சொல்லி அனுப்பினாராம். இது எனக்கும் சரியாகப்பட்டது. தாங்களும் நமது பலத்தைத் திரட்டும் வேலையில்தான் ஈடுபட்டிருப்பீர்களென்றும் சீக்கிரத்தில் வந்து விடுவீர்கள் என்றும் நம்பினேன். நமது பழுவூர்ப் படைகளை மண்ணியாற்றுக்கும் கொள்ளிடத்துக்கும் நடுவில் திருப்புறம்பயம் மேட்டில் கொண்டு போய் நிறுத்தினேன். உடனே ஓலைகள் எழுதச் சொல்லி, மழபாடித் தென்னவன் மழவராயர், குன்றத்தூர்க் கிழார், மும்முடிப் பல்லவராயர், தானதொங்கிக் கலிங்கராயர், வணங்காமுடி முனையதரையர், தேவசேநாதிபதிப் பூவரையர், அஞ்சாத சிங்க முத்தரையர், இரட்டைக் குடை இராஜாளியார் ஆகியவர்களுக்கெல்லாம் குதிரைத் தூதுவர்களை விரைந்து போகும்படி அனுப்பினேன். அவர்கள் எல்லாரையும் படைகளைத் திரட்டிக்கொண்டு திருப்புறம்பயத்துக்குக் கூடிய சீக்கிரம் வந்து சேரும்படி எழுதியிருக்கிறேன். அண்ணா! தங்களுக்குச் சிறிதும் கவலை வேண்டாம்! கொடும்பாளூர் வேளானையும், திருக்கோவலூர் மலையமானையும் மறுபடியும் தலை எடுக்க முடியாதபடி அழித்துப் போட்டு விடுவோம். தஞ்சாவூர்க்கோட்டையை மறுபடியும் பிடித்து விடுவோம். மதுராந்

தகத் தேவரையும் சிங்காதனத்தில் ஏற்றி விடுவோம்!'' என்று சின்னப் பழுவேட்டரையர் உற்சாகம் ததும்ப வீர கர்ஜனை புரிந்தார்.

ஆனால் அவருடைய வார்த்தைகள் பெரிய பழுவேட்டரையருக்குச் சிறிதும் உற்சாகம் அளித்ததாகத் தெரியவில்லை. அவருடைய கவனம் திடீரென்று வேறு பக்கம் திரும்பியது!

"தம்பி! அது யார்? முகத்தில் கையை வைத்துக்கொண்டு விம்மி அழுது கொண்டிருப்பது யார்?'' என்று கேட்டார்.

''அண்ணா! தெரியவில்லையா? அவர்தான் இளையராணி! பாவம்! தங்களைக் காப்பாற்ற முயன்றதில் ரொம்பக் கஷ்டப்பட்டுப் போயிருக்கிறார்



போலும்! அவரைப் பற்றி நான் குறை கூறியதையெல்லாம் மன்னித்து விடுங்கள் அண்ணா! மந்திரவாதி ரவிதாஸனும் அவனுடைய கூட்டாளிகளும் தங்களைச் சிறைப்பிடித்துக் கொண்டு வந்தார்கள் என்றும், இளையராணிதான் தங்களைத் தொடர்ந்து வந்து காப்பாற்றினார் என்றும் அறிகிறேன். அது உண்மைதானே?'' என்றார் காலாந்தகக்கண்டர்.

பெரிய பழுவேட்டரையர், "ஆம், ஆம்! இளையராணிதான் என் உயிரைக் காப்பாற்றினாள். நந்தினி பணிவிடை செய்திராவிட்டால் என்னை நீ உயிரோடு பார்த்திருக்க மாட்டாய். உலகத்துக்கு உண்மை தெரியாமலே போயிருக்கும்!'' என்று கூறினார்.

"இளையராணியின் ஒப்பற்ற பெருங்குணம் எனக்கே தெரியாமல் போய் விட்டதே! உலகத்துக்கு எப்படித் தெரியும்?'' என்றார் காலாந்தகக்கண்டர்.

பெரிய பழுவேட்டரையர் அதைக் கவனியாமல், "நந்தினி இன்னும் இங்கிருந்து போகவில்லையா? குகைப் படிகள் வழியாக ஏறிச் சென்றவர்களோடு அவளும் போயிருப்பாள் என்றல்லவா நினைத்தேன்?'' என்றார்.

"தங்களை விட்டு விட்டு இளையராணி எப்படிப் போவார், அண்ணா!'' என்றார் சின்னப் பழுவேட்டரையர்.

"அது போகட்டும்! நீங்கள் இந்த இடத்தில் நாங்கள் வந்திருப்பதை எப்படிக் கண்டுபிடித்து வந்தீர்கள்?'' என்று பெரியவர் கேட்டார்.

"திருப்புறம்பயம் பள்ளிப்படையருகில் நாங்கள் தங்கியிருந்தோம். கந்தமாறன் கொள்ளிடக்கரையோரமாகக் காவல் புரிந்து கொண்டிருந்தான். அங்கே சேந்தன் அமுதன் படகில் ஏற முயன்று கொண்டிருப்பதைப் பார்த்து அவனைப் பிடித்துக் கொண்டு வந்தான். சேந்தன் அமுதன் முன்னொரு தடவை வந்தியத்தேவனைத் தப்ப உதவி செய்ததற்காக அவனைச் சில காலம் நான் சிறையில் வைத்திருந்தது தங்களுக்கு நினைவிருக்கும். அவன் பேரில் கந்தமாறனுக்கு ஏற்கெனவே ரொம்பக் கோபம். இப்போதும் ஏதோ ஒற்றன் வேலை செய்கிறான் என்று சந்தேகித்துப் பிடித்துக் கொண்டு வந்தான். அவனிடம் விசாரித்தபோது தங்களைப் பற்றித் தெரிந்தது. அவனுடைய மாமன் மகள் பூங்குழலி யாரோ கொலைகாரனைத் தொடர்ந்து தனியே சென்றதைக் கேள்விப்பட்டு இவன் அவளைத் தேடிக் கொண்டு புறப்பட்டானாம். பூங்குழலி அவனைத் தன்னுடன் வரக் கூடாது



என்று சொல்லித் திருப்பி அனுப்பி விட்டாளாம். ஆயினும் இவன் அவனை அறியாமல் பின்னோடு தொடர்ந்து போனானாம். அப்போது திருப்புறம்பயம் பள்ளிப்படைக்கருகில் சதிகாரர்கள் சிலர் சேர்ந்து பேசுவதை அவன் அறிந்து ஒளிந்திருந்து கேட்டானாம். அப்போதுதான் தங்களை ரவிதாஸன் கூட்டம் சிறைப்பிடித்துப் பச்சைமலைப் பிராந்தியத்துக்குக் கொண்டு போயிருப்பதாகத் தெரிந்ததாம். பூங்குழலியும் வைஷ்ணவன் ஆழ்வார்க்கடியானும் பச்சை மலைக்குப் போவதை அறிந்து கொண்டு இவனும் அவர்களுக்குத் தெரியாமல் பின்தொடர முயற்சி செய்தானாம். இதையெல்லாம் கேட்டதும் நானும் கந்தமாறனும் ஐம்பது வீரர்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டோம். சேந்தன் அமுதன் தானும் வருவதாகப் பிடிவாதம் பிடித்தான். அதுவும் நல்லதுதான் என்று அவனை ஒரு குதிரை மேல் கட்டிப் போட்டு அழைத்து வந்தோம்! வந்தது நல்லதாய்ப் போயிற்று. தங்களைக் கண்டுபிடித்து விட்டோம்! இனி என்ன கவலை? அண்ணா! உடனே புறப்படுங்கள். தங்களுக்கு யாதொரு சிரமமும் ஏற்படாமல் ஆட்களைக் கொண்டு தூக்கிப் போக ஏற்பாடு செய்கிறேன். இதற்குள்ளே திரும்புறம்பயத்தில் பெரும் சைன்யம் சேர்ந்திருக்கும். தஞ்சாவூர்க் கோட்டையை ஒரு ஜாம நேரத்தில் திரும்பக் கைப்பற்றி விடலாம்!'' என்று கூறினார் சின்னப் பழுவேட்டரையர்.

''ஆமாம், தஞ்சாவூருக்கு உடனே போக வேண்டியதுதான்!'' என்று சொல்லிக்கொண்டே பெரிய பழுவேட்டரையர் எழுந்து நின்றார். நந்தினி தேவி உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கி மெல்ல மெல்ல நடந்தார்.

அத்தனை நேரமும் ஒரு பாறைக் கல்லின் மீது உட்கார்ந்து விம்மி அழுது கொண்டிருந்த நந்தினி பெரிய பழுவேட்டரையர் தொண்டையைக் கனைத்த கர்ஜனையைக் கேட்டுத் திடீரென்று எழுந்து நின்றாள். வெறி கொண்ட கண்களால் சுற்றுமுற்றும் பார்த்தாள்.



அவளுக்கு மிக்க அருகாமையில் நின்ற ஆழ்வார்க்கடியான் மெதுவான குரலில், "நந்தினி! இப்போதாவது உன் சம்மதத்தைச் சொல்! என்னுடன் வருகிறேன் என்று ஒரு வார்த்தைக் கூறு! இந்த நாட்டை விட்டு வட நாட்டுக்குப் போவோம். பிருந்தாவனம், வடமதுரை, அயோத்தி, காசி, ஹரித்வாரம், ரிஷிகேசம் முதலிய க்ஷேத்திரங்களுக்குப் பிரயாணம் செய்வோம். ஸ்ரீமந் நாராயணனுடைய திருநாமத்தைச் சொல்லிக்கொண்டு, ஆழ்வார்களுடைய பாசுரங்களைப் பாடிக்கொண்டு, நம்முடைய வாழ்க்கையை ஆனந்தமாகக் கழிப்போம். நான் என் அரசாங்க அலுவலை விட்டு விட்டு உன்னுடன் வருவதற்கு ஆயத்தமாயிருக்கிறேன்" என்றான்.

நந்தினி கண்களில் நீர் ததும்ப அவனை நோக்கி, "திருமலை! உனக்கு நான் இத்தனை துரோகம் செய்தும் நீ என்னிடம் வைத்த அபிமானம் மாறவில்லை. உனக்கு நீ வணங்கும் நாராயணன் அருள்புரிவார்!" என்றாள்.

அதேசமயத்தில் பூங்குழலி சேந்தன் அமுதனிடம் "அதோ! பழுவூர் இளைய ராணியைப் பார்! என் அத்தையைப் போலவே தோன்றுகிறாள் அல்லவா?" என்று கேட்டாள்.

"ஆம்; தலையை விரித்துப் போட்டுக்கொண்டால், தத்தரூபமாக உன் அத்தை மாதிரியே இருக்கிறது!" என்றான் சேந்தன் அமுதன்.

"இனிமேல் என் அத்தை இவள்தான். அத்தையிடம் இத்தனை நாள் வைத்திருந்த அன்பை இனிப் பழுவூர் இளைய ராணியிடம் வைப்பேன்!" என்றாள்.

"என்னையும் சேர்த்துக்கொள், பூங்குழலி!" என்றான் அமுதன்.

பெரிய பழுவேட்டரையர் இதற்குள் நந்தினி நின்ற இடத்துக்குச் சமீபமாக வந்துவிட்டார்.

அதைக் கண்ட நந்தினி அவருக்கு முன்னால் பூமியில் விழுந்து வணங்கினாள். அவருடைய பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒத்திக் கொண்டாள்.

பூமியிலிருந்து எழுந்ததும், நந்தினி பெரிய பழுவேட்டரையரை ஒருமுறை பார்த்தாள். சட்டென்று திரும்பினாள். சற்றுத் தூரத்தில் சின்னப் பழுவேட்டரையர் முதலியோர் கொண்டு வந்து நிறுத்தியிருந்த குதிரைகள் மீது அவள் பார்வை விழுந்தது. அவை நின்ற இடத்தை நோக்கி மிக விரைவாக ஓடினாள். எல்லாவற்றுக்கும் முன்னால் நின்ற குதிரையின் மீது தாவி ஏறிக் கொண்டாள். குதிரையின் முகக் கயிற்றைக் கையில் பிடித்துக்கொண்டு ஒரு குலுக்குக் குலுக்கித் தட்டிவிட்டாள். குதிரை பாய்ந்து ஓடத் தொடங்கியது.

அதுவரைக்கும் நந்தினியின் நோக்கம் இன்னதென்று அறியாமல் செயலற்று நின்றவர்கள் இப்போது அவளைத் தொடர யத்தனித்தார்கள். சின்னப் பழுவேட்டரையர், ஆழ்வாக்கடியான், சேந்தன் அமுதன், பூங்குழலி எல்லாருமே ஓர் அடி முன்னால் எடுத்து வைத்தார்கள்.

'"பெரிய பழுவேட்டரையர் "நில்லுங்கள்!" என்று ஒரு கர்ஜனை செய்தார்.

எல்லாரும் மறுபடியும் செயலிழந்து நின்றார்கள். பெரிய பழுவேட்டரையரையே பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

பெரிய பழுவேட்டரையர் குதிரை மேல் சென்ற நந்தினியின் உருவத்தைப் பார்த்துக்கொண்டே நின்றார்.

அதி வேகமாகக் காற்றைப் போல் பறந்து சென்ற அந்தக் குதிரை வெகு விரைவில் மலை அடிவாரத்தின் திருப்பம் ஒன்றில் திரும்பியது.

அவர்களுடைய பார்வையிலிருந்து குதிரை மறைந்தது.

ஆம்; பழுவூர் இளையராணி நந்தினி தேவியும் மறைந்து விட்டாள். இனி அவளை இக் கதையிலே நாம் காண மாட்டோம்.

ஒருவேளை, பல ஆண்டுகளுக்குப் பின்னால், வேறு இடத்தில், வேறு சூழ்நிலையில், காணும்படி நேரலாம். யார் சொல்ல முடியும்?

(தொடரும்)

என் பிள்ளையின் சித்தப்பா...!

"... ரத்மலானை விமான நிலையத்தில் நின்றுகொண்டிருந்தேன். சட்டென்று கிளம்பிய விமானத்தில் இருந்த இருவர் என் இருதயத்தை அப்படியே பறித்துக்கொண்டு சென்றனர். அவர்கள் தங்கள் இருதய கமலங்களிலிருந்து ஒரு சில இதழ்களை என்னகத்தே விட்டு விட்டுப் போகாதிருந்தால், அங்கிருந்து வீடு வந்து சேர்ந்திருக்க மாட்டேன்..."

– அறுபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பேராசிரியர் கல்கியும், மாலியும் இலங்கைப் பயணத்தை நிறைவு செய்துகொண்டு தமிழகம் திரும்பியபோது, 'ஈழ கேசரி' இதழில் உணர்ச்சிமயமான தமிழில் எழுதினார் அண்மையில் லண்டனில் காலமான அறிஞர் சோ. சிவபாத சுந்தரம்.

பன்னிரண்டு ஆண்டுகளாக, மனநல மருத்துவராகப் பணியாற்றுகிற தமது மகள் மஞ்சு பாஷிணி, மகன் ரவிலோசனன் இவர்களோடு அமைதியாக வாழ்ந்து, சமீபத்தில் தம்முடைய எண்பத்து எட்டாம் வயதில் மறைந்தார் சிவபாதசுந்தரம். அவர் லண்டன் செல்கிற வரை சுமார் முப்பதாண்டு காலம் போல், 'இலக்கிய இரட்டையர்கள்' என்கிற பெயரில் சிட்டியுடன் இணைந்து எழுதினார். தமிழ் நாவல் நூறாண்டு வளர்ச்சியும், வரலாறும், தமிழ் சிறுகதைகளின் வரலாறும் வளர்ச்சியும் போன்றவை இந்த இரட்டை முயற்சியில் வெளியாயின.

"என்னைவிட இரண்டு வயசு சின்னவர் சிவபாதசுந்தரம். கம்பீரமாகக் காரை விட்டு அவர் இறங்கி வருகிறபோது, என் பையனிடம் 'உன்னோட சித்தப்பா வரார்' என்று பக்கத்து வீட்டுக்காரர்கள் சொல்கிற அளவு குடும்பத்தோடு ஒன்றிப் பழகினார்" – என்று தங்கள் நட்பின் ஆழத்தை நினைவு கூர்கிறார் சிட்டி.

"எதிலும் பர்பெக்ஷன் அவரிடம். நானெல்லாம் ஈஸிசேரில் சாய்ந்து கொண்டு படிப்பேன். ஆனால் அவர் நன்கு நிமிர்ந்து இருக்கையில் அமர்ந்தே எழுதுவார், படிப்பார். தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் தட்டச்சு செய்வார். எங்களிடையே ஒத்த கருத்து நிலவியது. நான் எழுத மாட்டேன். நான் சொல்லச் சொல்ல அவர் தம்முடைய கருத்தையும் சேர்த்துக்கொண்டு அழகாகப் பதிவு பண்ணுவார்" என்று அந்த இலக்கிய இரட்டையர் நிலை பற்றிச் சொல்கிறார் சிட்டி.


இலங்கையில் பிறந்து, படித்து வானொலியில் பணியாற்றி, பிபிசியிலும் இருந்த சிவபாதசுந்தரத்துக்கு, சமஸ்கிருதம் பிரியமான மொழி. கொஞ்ச காலம் லத்தீன் மொழி கூடக் கற்றுக்கொண்டார். நல்ல புகைப்படக் கலைஞரும்கூட.

நவீன இலக்கியங்களைப் பல்கலைக் கழக அளவில் எடுத்துச் செல்கிற பணியில் இந்த இரட்டையர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது.

நடமாடுகிற நூலகமாக இயங்கிய சிவபாதசுந்தரம், சிட்டியோடு இணைந்து, பல்கலைக் கழக ஆய்வு மாணவர்களுக்குப் பயன்படுகிற மாதிரி 'அரங்கம்' என்கிற பெயரில் ஒரு வழிகாட்டும் அமைப்பை உருவாக்கினார். "இதற்கு மத்திய அரசின் கல்வித்துறைகூட ஆய்வு நிறுவனம் என்று அங்கீகாரம் தந்தது. ஆனால் அவருடைய லண்டன் பயணத்தோடு அதைத் தொடர முடியாமல் போனது" என்கிறார் சிட்டி.

சிவபாதசுந்தரம் மறைந்துவிட்டார் என்பதை பலருக்கு நம்பமுடியவில்லை. இன்னும் அவர் லண்டனில் இருக்கிறார் என்கிற பிரமையே மேலோங்கியுள்ளது.

— சுப்ர. பாலன்



• சிட்டி - சிவபாதசுந்தரம்

'கோடி ரூபாய் வெல்லுங்கள்' என்ற குவிஸ் போட்டிக்காக தன்னெதிரில் அமர்ந்திருந்த போட்டியாளரை அலட்சியமாகப் பார்த்தார் விநீத்குமார்.

விநீத்குமார்?

அந்த நிகழ்ச்சியைத் தூள் பறக்கும் பந்தாவுடன் நடத்தும் பிரபல சினிமா நடிகர்.

போட்டியாளரைப் பார்த்து முகம் சுளித்தார். சாதாரண வேஷ்டி, பழுப்பேறிய சட்டை, ஹவாய் செருப்பு, இடது கையில் ஹைதர் காலத்து வாட்ச் என்று அணிந்திருந்த அந்த கன்னங்கரேல் ஆசாமி, விநீத்குமாரைப் பார்த்துக் கும்பிட்டான், வாயெல்லாம் பல்லாக!

"உங்க பேரு?"

"கதிர்வேலுங்க..."

"எங்கிருந்து வர்றீங்க?"

"புதுக்கோட்டை பக்கத்துல கிராமம்... அன்னவாசல்!"

"இந்தப் போட்டிக்கு நீங்க தேர்வானது எப்படி?"


'உன்னையெல்லாம் எவன்யா செலக்ட் பண்ணினான்' என்ற அர்த்தம் தொனித்தது கேள்வியில்.

"திருவிழா வெயில்ல நானும் பையனும் தாகத்துக்குக் 'கலர்' சாப்பிட்டோமுங்க. அந்த பாட்டில் மூடியின் உள்பக்கம் ஏதோ 'லக்கி' நம்பராம், அது இருந்திச்சுங்க. அதைக் காமிச்சா நேரடியாகப் போட்டியில சேர்த்துக்குவாங்கன்னு கடைக்காரர் தகவல் சொன்னாருங்க!"

'அதுதானே பார்த்தேன்' என்று நினைத்த நடிகர், 'சரி...கோடி ரூபா ஜெயிச்சுடுவீங்களா?' என்றார் சற்றுக் கிண்டலாக, "ஜெயிச்சா என்ன செய்வீங்க?"

"உங்க கையால எவ்வளவு கிடைச்சாலும் சந்தோசமுங்க. பாதிப்பணத்தை நான் எடுத்துக்குவேன்.. மீதியை... அட... அதை அப்புறம் சொல்றேனுங்க!"

"சரி சரி...போட்டியை ஆரம்பிக்கலாம்."



விதிமுறைகளைக் 'கடனே' என்று ஒப்பித்துவிட்டுக் கேள்விகளை கேட்க ஆரம்பித்தார் விநீத்குமார்.

பொதுவாக அந்தப் போட்டிக்குத் தேர்வு செய்யப்படுவதுதான் மிகவும் கஷ்டமான சமாசாரம். கேள்விகள் சுலபமாகத்தான் இருக்கும். போதாததற்கு இரண்டு லைஃப்-லைன்கள் வேறு!

'அப்படி இப்படி' என்று ஒருவழியாக கதிர் ஐந்து லட்சத்தை எட்டிவிட்டான். ஆனால் அடுத்த கேள்விக்கு விடை தெரியாததால் போட்டியிலிருந்து விலகினான், ஐந்து லட்சத்துடன்.

"இப்ப சொல்லுங்க, இந்தப் பணத்தை என்ன செய்யப் போறீங்க?"

"எனக்கு இரண்டரை லட்சம் எடுத்துகிட்டு பாக்கி பணத்தை உங்களுக்குக் கொடுத்திடுவேங்க!"

"வாட்... எனக்கு நீங்க கொடுப்பீங்களா, என்ன உளர்றீங்க?"

ஞா

ஆர். ரகோத்தமன்

"சார்... எங்க குடும்பத்துல எல்லாரும் உங்க ரசிகருங்க. உங்க படம் ஒண்ணு விடாம பார்ப்போம். உங்களுக்கு ஒண்ணுன்னா உயிரையும் கொடுப்போம். நீங்க இருவத்தஞ்சு லட்ச ரூபாய் வருமானவரி பாக்கி வச்சிருக்கறதா, பேப்பர்ல போன மாசம் நியூஸ் வந்ததைப் படிச்சோம். மனசு ரொம்ப வருத்தமாயிடுச்சுங்க. பாவம், உங்களுக்கு என்ன கஷ்டமோ, நஷ்டமோ, தெரியலைங்க. ஏதோ என்னால முடிஞ்ச இந்தத் தொகையைக் கொடுக்கறதா முடிவு பண்ணியிருக்கேனுங்க! உங்க வரி கணக்குல கட்டிடுங்க. என் பொண்ணுங்களுக்குக் கல்யாணம், கார்த்தி பண்ணணும், அதுக்காகத்தான் இரண்டரை லட்சம் எடுத்துக்கறேன். இல்லாங்காட்டி அதையும் கொடுத்திருப்பேன்... அப்ப நான் வர்றட்டுங்களா?"

கும்பிட்டுவிட்டுப் போனான் கதிர்வேல்.


விநீத் அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தார்.



"என்ன தலைவரே! நம்ம கட்சியில கோஷ்டி பூசல் இருக்குதுனு சொன்னா வருத்தப்படாம சந்தோஷப்படறீங்க?"

"கோஷ்டி சேர்ற அளவுக்கு நம்ம கட்சியில ஆள் இருக்கிறத நினைச்சா ரொம்ப சந்தோஷமா இருக்கு!"

– எஸ். சரவணன்



"அந்த பைலட், விமானத்தை ஸ்கூட்டர் மாதிரி நினைக்கிறாரா... எப்படி?"

"விமானத்தை லேசா சாய்ச்சுட்டு டேக்-ஆஃப் பண்றாரே!"

– தஞ்சை தாமு

மாக்ஸ் முல்லர் என்றொரு பாப் பாடகர்..?



• 'உஷஸ்' - மகாலட்சுமி நரேந்திரன்

"**மா**க்ஸ் முல்லர் என்ற பெயரைக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?"

"இல்லையே."

"மாக்ஸ் முல்லர் யார் தெரியுமா?"

"அவர் ஒரு காமெடியன்."

"மாக்ஸ் முல்லர் என்பவர் என்ன செய்தார் என்று சொல்ல முடியுமா?"

"ஓ! அவர் ஒரு 'பாப்' பாடகர்."

இப்படியாகத்தானே ஐரோப்பாவில் ஜெர்மனி, முதலிய நாடுகளில் மாக்ஸ்முல்லர் என்பவரைப் பற்றிக் கேட்டபோது பதில் சொன்னார்கள். மாக்ஸ் முல்லரைப் பற்றிய ஒரு சிறிய டாகுமெண்டரி படம். அதில்தான் இப்படிச் சொன்னதைக் காட்டினார்கள், டீவி பாணியில்!

ஆனால் இந்தியாவில் சிலர் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தார்கள் என்று அறிந்து சிறிது ஆறுதலடைந்தோம். ஒருவர், "மாக்ஸ் முல்லர் ரிக் வேதத்தை மொழிபெயர்த்தவர்" என்று சொன்னார். அதுவே பெரிய விஷயம்.

மாக்ஸ் முல்லர் என்று ஒரு பேராசிரியர், வடமொழியில் சிறந்த தேர்ச்சி பெற்றவர். ரிக் வேதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து நமது நாட்டு கல்விச் சிறப்பையும், கலாசார மேம்பாட்டையும் உலகமறியச் செய்தவர் என்பதை அநேகமாக எல்லாரும் மறந்து விட்டார்கள்.

அவர் மறைந்து நூறாண்டுகள் ஆகிவிட்டன. ஜெர்மானியரான அவர் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்தார். இந்தியாவைப் பற்றியும் பாரத நாட்டைப் பற்றியும், பாரத கலாசாரம் பற்றியும் இந்து மதத்தைப் பற்றியும் அவர் அறிந்திருந்த அளவு

அவருடைய சமகாலத்தில் யாருமே அறிந்திருக்கவில்லை. அடிமைப்பட்டுக் கிடந்த பாரத நாட்டின் பண்பாடுகளை ஆங்கிலேயர் எள்ளி நகையாடிய காலம் அது. நூறாண்டுகளுக்கும் முன்பாகவே இன பேதங்களையும் மத வெறியையும் எதிர்த்துப் பேசியும் எழுதியும் விழிப்புணர்வை ஊட்ட முயன்றவர் மாக்ஸ்முல்லர். ஸ்வாமி விவேகானந்தரைச் சந்தித்து உரையாடியவர். வேதாந்தம் கற்றார். ''ராமகிருஷ்ணா வாழ்க்கையும், மொழிகளும்'' (His life & sayings) என்று ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டார்.

இவருடைய நினைவைப் போற்றுவதற்காக 'மாக்ஸ் முல்லர் பவன்' சென்னை கேந்திரத்தில் மூன்று நாட்கள் விழா நடைபெற்றது. பலவிதமான சாஸ்திரங்களின் மணம் வீசும் மூன்று நாள் நிகழ்ச்சியாக அது அமைந்தது.

இசை மற்றும் நாட்டியக் கலையைப் பற்றி கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் காணப்படும் விஷயங்களைத் தொகுத்துக் கொடுத்த கே.வி. ரமேஷ் முதல் நந்தனார் சரித்திரம் ஹரிகதை செய்த கமலா மூர்த்தி வரை பல கலைஞர்கள் பங்கேற்றிருக்கிறார்கள். எனினும் அதிகமாக பேசப்பட்ட ரசிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் இரண்டு.

ஒன்று 'உஷஸ்' என்ற நாட்டிய நாடகம். 'மருதாணிச் செடிக்கு நிறம் கொடுக்கும் தன்மை எப்படி வந்தது?' என்ற நாட்டிய நாடகத்தின் கருவும் சரி, நாட்டிய அமைப்பு செய்திருக்கும் விதமும் சரி கவிநயத்துடன் பளிச்சிட்டன. தயாரித்த மஞ்சரியைப் பாராட்டுவோம்.

அடுத்து பிருஹத்வனியில் இசை பயிலும் இளம் மாணவிகளின் நாடகம். மாக்ஸ் முல்லர் இன்றைய தேதிக்கு உயிரோடு எழுந்து வந்தால் அவருடைய எண்ண ஓட்டங்கள் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து மாக்ஸ் முல்லரை பாரத நாட்டுக்கே அழைத்து வந்து விட்டார்கள் மாணவிகள்!

பங்கேற்றவர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் விருந்தளித்து உபசாரம் செய்தது மாக்ஸ் முல்லர் பவன். நிகழ்ச்சியைப் போலவே விருந்தும் கச்சிதம்!

- ஆனந்தி

படம் : **ஜெயன்**



''அங்கே என்னப்பா கஸ்டமரோட கலாட்டா?''

''பாருங்க முதலாளி இவரை... ஜிம்பாப்வே கிரிக்கெட் ப்ளேயர் ஒலங்கா மாதிரி ஹேர் ஸ்டைல் பண்ணச் சொல்றார்!

— புளியரை கணேசன்

பா. ராகவன்

அலை உறங்கும் கடல்

நம்ப முடியாத ஆச்சரியமாகத்தான் இருந்தது. ஆனால் நடக்க முடியாதது என்று சொல்வதற்கில்லையே? சங்குக்கடை ராஜு கட்சி மாறிவிட்டான். தேர்தலில் நிற்க, புதிய கட்சியின் மேலிடம் அவனுக்கு சீட் கொடுக்கவிருப்பதாக மேலத்தெரு முழுக்கப் பேசிக் கொண்டார்கள்.

வெளியூர் பஸ் ஸ்டாண்ட் எதிரே, அரசினர் உயர்நிலைப் பள்ளியிலிருந்து பெஞ்சுகள் எடுத்து வந்து சேர்த்துப் போட்டு மேடை கட்டி ஏறி முதல் முதலாக அவன் மைக் பிடித்துப் பேசியபோது ஊர் முழுக்கத் திரண்டு போய், இரவெல்லாம் உட்கார்ந்து கேட்டது.

"புண்ணிய பூமியாம் ராமேஸ்வரத்துக்குப் புதுப்பொலிவேற்பட இது ஒரு வாய்ப்பு. அற்புதங்கள் இங்கே நிகழ்ந்ததெல்லாம் புராணக் கதைகளுடன் சரி. ஜனநாயகம் வந்த காலந்தொட்டு இந்த ஊருக்குக் கிடைத்ததுதான் என்ன? ஒரு சாலை உண்டா? குடிநீர் உண்டா? மின்சாரம் ஒழுங்காக உண்டா? ஆட்சிகள் மாறி வந்த போதும் அவலங்கள் மாறியிருக்கிறதா?" என்று அவன் கேட்ட போது வேர்க்கோடு இளைஞர்கள் எழுந்து நின்று கை தட்டினார்கள்.

"பின்னி எடுக்கறானேடா இப்படி?" என்று ஆச்சர்யத்துடன் கேட்டார் நீலகண்ட சாஸ்திரிகள்.

எனக்கு அப்பவே தெரியும். இவன் ஒருநாள் எம்.எல்.ஏ. ஆகியே தீருவான்னு நினைச்சேன்" என்றார் அப்புசாமி.


"ராசாமவண்டா நீயி. மீனுக்காரப்பயவ வோட்டு முழுக்க ஒனக்குத்தாங்கேன். அதுக்குப் பொறுப்பு நானாச்சி" என்று அந்த இடத்திலேயே உரக்கச் சொன்னார் தானிவேல் நாடார்.


"மண்டபத்துக்காரன் வந்திருக்காவ. மாணா மதுரக்காரன் வந்திருக்காவ. ராம்நாடு ஊரான் நின்னிருக்காவ பார்த்துக்கிடுங்கவே. எல்லாருந்தான் ஜெயிச்சான், தோத்தான். ஆரு என்ன பண்ணிருக்கான் இந்த ஊருக்கு? ராஜு நின்னு, ஜெயிச்சித்தான் விளங்கணும்னு இருக்கு போல. இவன் நிக்கருமேல அண்ணாகயிரு இறுத்துப் போட்டு ஓலக் கொடாவுல சங்கு குளிச்ச எட்டு வயசு தொட்டுப் பாத்துட்டில்ல வாரேன். நம்ம கஸ்டந்தெரிஞ்ச பய. நிச்சயம் நல்லது செய்வான் பாருக" என்று சராங் முதலியார் சொன்னார்.

பலத்த கரகோஷங்கள் எழுந்து காற்றில் நிறைந்தன. முதல் முறையாக அரசியல் கூட்டத்துக்கு வந்திருந்த மாடவீதிப் பெண்கள் கூட ஜோராகக் கைதட்டினார்கள்.

தேர்தல் வேலைகளுக்கென, ராஜு பாம்பனில் ஆபீஸ் திறந்திருப்பதாகச் சொன்னார்கள். சென்னையிலிருந்து முதல் கட்டமாக மூன்று பெரிய சூட்கேஸ்கள் நிறையப் பணம் வந்து இறங்கி இருப்பதாகப் பேசிக் கொண்டார்கள். பணத்தை அவன் தன் வீட்டிலோ, கட்சி ஆபீசிலோ வங்கியிலோ பத்திரப்படுத்தி வைக்காமல், ஓடநாதபுரம் சவுக்குக் காட்டில் புதைத்து வைத்திருப்பதாக ஒரு வதந்தி எழுந்தது.

"இருக்கட்டும்டே, மண்ணுப்பாசம் நெரம்ப உண்டு அவனுக்குக் கேட்




21

டியா? அப்பிடித்தான் வெப்பான். பாலிதீன் கவருல போட்டு கடலுக்கடியில கொண்டு போயி வலம்புரிச் சங்குல ஒளிச்சி வெக் கான்னு சொல்லு? நம்புவான் ஊர்க்காரன். ஆனா, தனக்குன்னு ஏதும் செஞ்சிக்கிட மாட்டாம் பாரு. சரியான மனுசன்."

"ஏப்பா ராசு, ஒரு காலேச கொண்டுட்டு வாய்யா ஊருக்கு. ஆசுப்பத்திரி கட்டுவியாம். பிரசவ ஆசுப்பத்திரி ரொம்ப முக்கியம் பார்த்துக்கிடு. வலியெடுத்த பொண்ணுவள ஆட்டோவுல போட்டுக்கிட்டு அவவன் மைலு கணக்கால்ல ஓடுதான், பிரசவம் பாக்க? நீயி செய்யிறா மவனே. என் ஓட்டு உனக்குத்தான்..."

நடுத்தெருவில், டீக்கடையில், கோயில் பிராகாரங்களில், வேர்க்கோடு மார்க் கெட்டில், பாம்பன் காகக்கடைகளில், நட ராஜபுரம் குடிசைப் பகுதியில், மூணாஞ் சத்திர செக்போஸ்டில்-எங்கும் இதே பேச்சு தான்: "ராசு எலக்சன்ல நிக்கானாமில்ல? நம்ம ஊருக்காரன் நின்னாத்தான் நமக்கு விடியும்."

உமாதேவி பத்து நாட்கள் தீவிரமாக யோசித்தாள். வேறு யாரையும் விடத் தனக்கு உதவுவதற்கு இப்போது ராஜு தான் சரியான ஆளாக இருப்பான் என்று தீர்மான மாகத் தோன்றியது அவளுக்கு.

அப்பாவிடம் சொல்லவில்லை. பாட்டிக் கும் சொல்லவில்லை. தன் முடிவின் தீர்மா னம் தந்த நம்பிக்கையில், துணிந்து ராஜுவின் சங்குக் கடைக்குத் தனியாகவே போனாள்.

"ஆரு உமாவா? அதிசயந்தான்!" என்று வரவேற்றான் ராஜு.

"டெய்லி உங்கப்பாவுக்கு மட்டும் காப்பி கொண்டுட்டு வருவியே, அண்ணன் பாவம் கடையை விரிச்சிவெச்சிக்கிட்டு குந்திக் கெடக்கானேன்னு பாவம் பார்த்தாச்சும் ஒரு நாள் எனக்குத் தந்துகிறியா நீயி? இதெ கேக்கணும்னுட்டு எனக்கு ரொம்ப நாளா ஒரு இது..." என்று சிரித்துக் கொண்டே சொன்னான் ராஜு.

"நீ மொதல்ல எலக்ஷன்ல ஜெயிச்சி வா ராஜு. நம்மாத்துலதான் உனக்கு முதல் விருந்து."

எழுந்து நின்று கைகூப்பினான் ராஜு.

"கோயில் சாமியே சொல்றாப்பல நெனச்சிக்கறேன் உமா. சொல்லு, நா என்னா செய்யணும் உனக்கு? ஜெயிச்சி வந்ததும் இஸ்கூல் டீச்சராக்கிடட்டுமா?" என்றான் புன்னகையுடன்.

"அதொண்ணும் வேணாம் ராஜு. இப்ப, இந்த க்ஷணம் நீ எனக்கொரு ஹெல்ப் பண் ணணும். நீ அரசியல்வாதி ஆயிட்டேன்னு கேக்கலை. நான் பிறந்த நாளா தெரிஞ்சவன் கற முறைல கேக்கறேன்."

"அடறா சக்கைன்னானாம். அடுத்த எலக்சன்ல நீ நிக்கறதுன்னா, நா வாங்கித் தாரேன் சீட்டு. சொல்லு. என்னா செய்ய ணும் நானு?"

சற்று நேரம் அவள் யோசித்தாள். இது சரிப்பட்டு வருமா என்று முதல் முதலில் எழுந்த சந்தேகம் மறுபடியும் எழுந்தது. சரிவராவிட்டாலும் இதைச் செய்தே ஆக வேண்டும் என்று எழுந்த உறுதியை மீண்டு மொருதரம் நினைவு படுத்திக் கொண்டாள்.

திடப்படுத்திக் கொண்டு, "ஒரு ஆட்டோ என்ன விலை ராஜு?" என்று கேட்டாள்.

"ஏங்கேக்கே? பஜாஜுன்னா எழுவது எம்பது ரூவா ஆவும். பர்மிட்டு அது இதுன்னு மொத்தமா ஒர்ருவாத் தொட்டும்" என்றவன், "அய்யரு நெறய சேர்த்து வெச்சி ருக்காவளா? நெனச்சேன்" என்று கண் சிமிட்டினான்.

"அதெல்லாம் இல்ல ராஜு. நயா பைசா கிடையாது கேட்டுக்கோ. கடனுக்குத்தான் வாங்கலாம்னு இருக்கேன்" என்று உமா சொன்னாள்.

அவன் ஒரு கணம் அதிர்ந்தான். "நீயா? ஆட்டோ வாங்கப் போறியா? வாங்கிட்டு?"

அவனை முடிக்க விடவில்லை அவள். "இதுக்குப் பல காரணம் இருக்கு ராஜு. விரிவா அப்புறம் சொல்றேன்- ராமேஸ்வரத் துல ஆட்டோ ஓட்டறதுன்னா லாபந் தானே?"என்று கேட்டாள்.

"பின்ன? ஒன் அவருக்கு நூத்திருவத்தஞ்சு ரூபா ஸ்டேண்டர்டு ரேட்டு. ஒரு வண்டிக்கு, ஒரு நாளைக்கு, செலவு போக ரூவா ஏழுநூறு வருமானம் கேரண்டி. சங்கு குளிக் கறவங்களுக்கு, கெய்டுங்களுக்கு, அய்ய மாறுங்களுக்கு, டூரிஸ்டு போட்டோ புடிக்கற வங்களுக்குன்னு எப்பிடி சங்கம் இருக்கோ, அதேப்படி ஆட்டோ ஓட்டுறதுக்கும் சங்கம் வெச்சிருக்காவ. ஆயுள் சந்தா கட்டி சேர ணும் மொதல்ல. கார்டு வாங்கணும். பர்மிட்டு வாங்கணும். டீசலுன்னா ஒரு

"எப்படிச் சொல்றீங்க, குவைத்தில் நிச்சயம் எனக்கு வேலை கிடைக் கும்னு?"

"உன் நட்சத்திரம் 'ஆயில்'யமாச்சே?"

— உ. ராஜாஜி

ரேட்டு. பெட்ரோலுன்னா ஒரு ரேட்டு. ஒதுக்கற ஸ்டாண்டுல குந்திக்கிற வேண்டியது தான் பொறவு. லைனு மேல ஆளு உடு வாங்க. அதைவிடு, நம்பிக்கையான டிரைவரு தேடறதே பெரிய விசயம் தங்கச்சி. நீயே ஓட்டப் போறியா?" என்று ராஜு கேட்டான்.

''ஏன், எனக்கொரு டிரைவர் வேணும்னா, நீ ஏற்பாடு பண்ணித்தர மாட்டே?''

"என்ன கேள்வி கேக்க நீயி? நாம் பாத்து, பாண்டிக்கட்டம் தாண்டி ஆடினபுள்ள நீயி, பார்த்துக்கிடு. அப்பாரோட இருவத்தாறு வருசப் பளக்கம்."

"அதான் உங்கிட்ட வந்தேன். அதிக நாள் எடுத்துக்காத. ஒரு பத்துப் பதினஞ்சு நாள்ல எனக்கொரு ஆட்டோ வாங்கித் தருவியா? பர்மிட், மண்ணாங்கட்டியெல்லாம் உன் பொறுப்பு."

"செஞ்சா போச்சி. ரொக்கமா வெச்சிருக்கல்ல?"

"இருக்கு" என்றவள், "வட்டிக்குத்தான் வாங்கியிருக்கேன். இந்தியன் பாங்க், பாம்பன்ல அகவுண்ட்ல வெச்சிருக்கேன். நீ ரெடின்னு சொல்லு. பணத்தோட எங்க வரணும்?"

"ராமநாதபுரம் போனா போரும் உமா. மதுரைல கூட எடுக்கலாம். ஆனா தூரம் பாரு? இங்க டீலர்ட்ட சொல்லி வெச்சாப் போரும். நான் பார்த்துக்கிடுதேன். ஆமா, அய்யரு இது பத்தி மூச்சுவிட்டதில்லியே இது வரைக்கும்? மத்த அய்யமாருங்களுக்குக் கூடத் தெரியாதுன்னுதான் நெனக்கேன். தெரிஞ்சா, அக்னிதீர்த்தம் தீப்பிடிச்சிக்கும். பொறாமக்காரவ பார்த்துக்கிடு" என்றான் ராஜு.

"அப்பாவுக்கே இன்னும் சொல்லலை ராஜு. இது நானே எடுத்த முடிவு. புரோகிதம் பண்ணி வர்ற பணம் பத்தவே பத்தலை. தவிர அவரால இனிமேலும் கட்டு தூக்கிண்டு ஓட முடியாதுன்னு தோணறது..."

"அது இந்த ஊர் ராசி தாயி. நெறைய பணம் புரளும். பைசா தங்காது கையில, பார்த்துக்கிடு. லாஞ்சி வெச்சிருக்கற மொதலாளிங்களே ஒரு ஆத்தர அவசரம்னா, பாம்பன் காசுக்கடைங்களுக்குத்தான் ஓடுதாக. நாலு வட்டி, அஞ்சு வட்டின்னு அது ஒரு பொளப்பு வளர்ந்துட்டு வருது அங்கன. எப்படியாச்சும் பணம் பண்ணீரணும். அதுல ஆருக்கும் எந்த ரெண்டாங்கணக்கே இல்ல. ஆனா பண்ணுர பணம் மட்டும் தங்காது. அதான். ஏன்னு புரியலை..."



''என் பாட்டி கூட இதைத்தான் சொல்லுவா. ஊர் ராசி.''

"பேசாம நீயி மெட்ராசு போயிர வேண்டியதுதானே? அக்கா அங்கனதான் இருக்குது?"

"ஆமா. ஆனா மனசு கேக்கலை ராஜு. அப்பா, அம்மாவை விட்டுட்டு வேற வாங்க முடியுமா? ஊரும் அந்த மாதிரிதான்னு வெச்சிக்கயேன். கஷ்டமோ நஷ்டமோ, பழகிடுத்து. இந்த ஊர் முழுகிடும் முழுகிடும்னு எம்பாட்டி சொல்லிண்டே இருக்கா. நாமுந்தான் சேர்ந்து முழுகிப் பார்ப்பமேன்னு தோணுதே தவிர, ஓடிடணும்னு எனக்குத் தோணலை."

அட்டகாசமாகச் சிரித்த ராஜு, "பிரமாதம் போ. இந்த டயலாக்கை ஏன்ட்ட வுட்ரு. ஒரு மீட்டிங்குல எடுத்துவுடறேம்பாரு. கிளாப் பிச்சிக்கும். இந்த ஒரு வரிக்கே ஆயிரம் ஓட்டு சேரண்டி."

"சீ! நான் சீரியஸா சொல்றேன் ராஜு."

''நானும் சீரியஸாத்தாம் பேசுதேன் தங்கச்சி. சென்டிமெண்டு பாரு. மண்ணு சென்டிமெண்டு நல்லா ஓர்க்கவுட் ஆவும்.''

"நீ எக்கேடு கெடு. எனக்கு ஆட்டோ வாங்கித் தருவியா மாட்டியா?"

''வாங்கித் தருதேன். 'கண்டிசனா' வாங்கித் தருதேன். நானா பணம் போடுதேன்? உங்காசு. நீ வட்டி தரப் போற. மொனஞ்சி செய்யத்தானே நான் வேணும்? அதுக்குத் தானே நான் எலக்சன்லயே நிக்கேன்? ஏம்மொத சமூக சேவ உனக்கு ஆட்டோ வாங்கித் தரதுதாம்பா" என்றான் ராஜு.

''தேங்க்ஸ். நீ ஜெயிக்கறதுக்கு நான் வேண்டிக்கறேன்'' என்று சொல்லி விட்டுக் கிளம்பினாள்.

நீலுப்பாட்டி, வாழ்விலேயே முதல் முறையாக உடம்பு சரியில்லை என்று படுத்திருந்தாள், வீட்டில். உடல் தீயாகக் கொதித்தது. கண்கள் எப்போதும் மூடியே இருந்தன. அப்புசாமி கவலையுடன் தேர்முட்டி அருணாசலம் டாக்டரை அழைத்து வந்து காட்டி, "என்னாச்சு டாக்டர்?" என்று கேட்டார்.

''வேறென்ன? வயசாச்சு!'' என்று

காட்டுக்குப் போனதால் வீட்டுக்கு வந்த விருது!

இந்த வருடம் சிறந்த கன்னடப் படத்துக்கான சினிமா எக்ஸ்பிரஸ் விருது பெறும் படம் 'சப்த வேதி'. தயாரிப்பாளர் கன்னட நடிகர் ராஜ்குமார்.

நவம்பர் 18ஆம் தேதி சென்னையில் விருது வழங்கும் விழா. வீரப்பனின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு ராஜ்குமார் நேரில் வந்து விருதை வாங்கிக் கொள்வாரா என்று ஒரே சஸ்பென்ஸ்.

பதிமூன்றாம் தேதி விடுதலை ஆகிவிட்டார் ராஜ்குமார். ஆனால் விழாவில் கலந்துகொள்ள இயலவில்லை. ஆனால் அதற்காக விருது விஷயத்தை அப்படியே விட்டு விடவும் சினிமா எக்ஸ்பிரஸ் ஆசிரியர் வி. ராமமூர்த்தி விரும்பவில்லை.



ராஜ்குமாருடன் தொடர்பு கொண்டு பேசினார். பெங்களூருக்கு நேரில் சென்று விருதைக் கொடுத்து விட்டு வர தீர்மானித்தார்.

அதன்படி டிசம்பர் 6ஆம் தேதி காலை ராஜ்குமார் வீட்டில் மினி பரிசளிப்பு விழா.

"1987-ல் எனக்கு சினிமா எக்ஸ்பிரஸ் விருது கிடைத்தபோது விழாவின் காம்பியர் மேஜர் சுந்தர்ராஜன்; விருது பெற நான் மேடை ஏறியபோது, ஒரு பாட்டு பாடுங்களேன் என்று திடுதிப்பென்று சொல்லி விட்டார்; ராகவேந்திரர் மீது ஒரு பக்திப் பாடலைப் பாடிச் சமாளித்தேன்; நன்றாகப் பாடினேன் என்று எல்லோரும் பிறகு சொன்னார்கள்!" என்று சொல்லிச் சிரித்தாராம் ராஜ்குமார். "13 வருடங்கள் முன்னால் நடந்த எங்கள் விழாவை அவர் மறக்கவில்லை" என்று பெருமையாகச் சொல்கிறார் வி.ராமமூர்த்தி.

— எஸ். சந்திரமௌலி
படம் : யோகா

தோளைத்தட்டிச் சிரித்தவர், "என்ன வயசிருக்கும் பாட்டிக்கு?" என்று கேட்டார்.

அப்புசாமி ஒரு கணம் யோசித்தார். எண்பதிலிருந்து எண்பத்தைந்துக்குள் ஏதாவதொரு வயது இருக்கும் என்று தோன்றியது. இதுகாறும் பிறந்த நாள், கல்யாண நாள் என்று எதையுமே நினைவு கூர்ந்ததில்லை நீலுப்பாட்டி. அவரும் கேட்டதே இல்லை. வீட்டுப் பொருட்களில் ஒன்றென இருந்த கிழவி, தானும் ஓர் உயிர்தான் என்பதை நிரூபிப்பதற்காகவா இப்படிப் படுத்து விட்டாள்?

முதல் முறையாகப் பாசம் போலொரு உணர்ச்சித் தாக்க, அவள் அருகே அமர்ந்து ஆதரவாகத் தலையை வருடினார்.

இலேசாகக் கண்களைத் திறந்த நீலுப் பாட்டி, "என்ன சொல்றார் டாக்டர்? ரசஞ் சாதம் சாப்பிடலாமோல்லியோ? இந்தக் கஞ்சிச் சனியன் கசந்து தொலையறது" என்றுவிட்டு மீண்டும் கண்களை மூடிக் கொண்டாள்.

அவளுக்குப் போர்த்திவிட்டு விட்டு, வாசலுக்கு எழுந்து வந்தார் அப்புசாமி. தெரு முனையில் உமா வந்து கொண்டிருந்தது தெரிந்தது.

என்னவோ ஆகிவிட்டது இந்தப் பெண்ணுக்கு என்று அவர் நினைத்தார். அகிலாவுடன் சென்னை சென்று, தனியே திரும்பி வந்த நாள் முதலாக அவளது செய்கைகளைக் கொண்டு அவள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்பதை விளங்கிக் கொள்ள முடியவில்லை அவரால். மிக மெதுவாக, வீட்டின் அதிகார மையத்தைத் தன்னிடமிருந்து அவள் கைப்பற்றிக் கொண்டிருப்பது போன்றதொரு உணர்வும் ஏற்பட்டது.

ஆனால், அதிகாரஞ் செய்ய என்ன இருக்கிறது இங்கு? முட்டி முட்டிக் கொண்டாலும் மூன்றே பேர் ராஜ்ஜியம். அதிலொருத்தி படுத்துக் கொண்டிருக்கிறாள், வெகு அபூர்வமாக.

"வரமாசம் பத்து நாள் அகிலா இங்க வந்து தங்கறாப்பா. இதே ஊர்ல ஒரு பிசினஸ் ஆரம்பிக்கறா. நீ தான் ஒர்க்கிங் பார்ட்டனர்" என்று உமா சொன்னாள், திரும்பி வந்தவுடன்.

"பைத்தியமா நீ? என்ன பிசினஸ் பண்ண முடியும் இங்க? அதுவும் நாம போயி? பிராமணன்னா, பிசினஸுக்கு லாயக்கில்லாதவன்னு அர்த்தம். தெரிஞ்சுக்கோ."

இதற்கு அவள் சொன்ன பதில்தான் தூக்கிவாரிப் போடச் செய்தது.

"நீ பிராமணனே இல்லைன்னு நினைச்சிக்கோ. சம்பாதிக்கணும்னு ஆசை இருக்கோல்லியோ? எனக்கு நல்லபடியா கல்யாணம் பண்ணி வெப்பியா? மாட்டியா? சம்பாதிக்க நினைக்கறவாளுக்குள்ள ஜாதி வித்தியாசமே கிடையாது. பணக்காரா ஒரு ஜாதி. ஏழை மறுஜாதி. நீ ஜாதி மாறிட்டதா நினைச்சுக்கோ. தப்பே கிடையாது..."

அன்று குழப்பமும் பிரமிப்பும் பரபரப்புமாக ஏற்பட்ட உணர்வு இந்த விநாடிவரை அடங்கவேயில்லை அப்புசாமிக்கு.

(தொடரும்)

KALKI SHOPPING PAGE

நடக்குமென்பார், நடக்கும்!

அக்னிசர்மா பக்கம்

டிசம்பர் 20 முதல் 26 வரை




மேஷம் : (அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)

இந்த வாரம் உங்களோட மதிப்பும் அந்தஸ்தும் ஜில்லுனு உயரப் போகுது. கவலையை விடுங்க. வழக்கு விவகாரங்கள்ல உங்களுக்குச் சாதகமான திருப்பம் வரும். எல்லாரும் பாராட்டற மாதிரி சில சாதனைகளைப் பண்ண போறீங்க. திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளுக்கு சான்ஸ் இருக்கு. அரசியல்வாதிங்க அறிக்கை வெளியிடறது, பொதுக்கூட்டத்துல பேசறது மாதிரியான விஷயங்கள்ல அடக்கி வாசிங்க. இல்லைனா வசமா மாட்டிக்கிறதுக்கு வழி இருக்கு. உஷார்! பொருளாதார பிரச்னை வராது. செலவுதான் எகிறும். பார்த்து செலவழிங்க.




ரிஷபம் : (கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)

இந்த வாரம் உங்களோட முகத்துல புதுப் பொலிவு ஏற்படப் போகுது. ரொம்ப அழகா தெரிவீங்க. பார்க்கறவங்க, கூப்பிட்டு 'சலாம்' சொல்ற மாதிரி ஏதாவது பண்ணுவீங்க. பார்ட்டி, ஜாலின்னு இந்த வாரம் மஜாதான். அதுக்காக 'பர்ஸ்' காலியாகும். ஜாக்கிரதையா செலவழிங்க. இடையில சின்ன சின்ன தொந்தரவுகள் வந்து இம்சை பண்ணும். வீண் அலைச்சலைத் தவிர்த்திடுங்க. பேச்சுல நிதானம் அவசியம். பண நடமாட்டத்துக்குப் பஞ்சமில்லை.




மிதுனம் : (மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர் பூசம் 3-ம் பாதம் வரை)

இதுவரை டென்ஷனாக்கிக் கொண்டிருந்த உங்களோட எண்ணங்கள் இப்ப நிறைவேறப் போகுது. எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்களுக்கெல்லாம் இது நல்ல நேரம்! பண நடமாட்டத்துக்குப் பஞ்சமில்லை. பல வழிகள்ல வரும். நீங்களே ஆச்சரியப்படும்படி உங்க பேச்சுல நிதானமும் சாமர்த்தியமும் வெளிப்படும். எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர் துறைகளைச் சேர்ந்தவங்களுக்கெல்லாம் இது யோக வாரம். சின்ன சின்னப் பிரச்னைகள் வந்து இம்சை பண்ணும். பதற்றப்படாம செயல்பட்டா சமாளிச்சுடலாம்.



கடகம் : (புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)

எந்த காரியத்தையும் தலைகீழ நின்னாவது முடிச்சிடுவீங்க. புதுசா பொருட்கள் ஏதும் வாங்குவீங்க. கொடுக்கல் வாங்கல்ல லாபம் கிடைக்கும். இருந்தாலும் முன்ன பின்னத் தெரியாதவங்ககிட்ட எச்சரிக்கையா இருங்க. வெளியூர் போனீங்கன்னா எச்சரிக்கை அவசியம். 'பிக்பாக்கெட்'டுக்குச் சான்ஸ் இருக்கு. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு இது சோதனை மேல் சோதனையான காலம். எதுக்கும் வாயைக் கட்டிகிட்டு இருக்கிறது நல்லது.




சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)

உங்க நிர்வாகத் திறமையைப் பார்த்து எல்லோரும் அசரப் போறாங்க. எழுத்து, பத்திரிகைத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்குச் செழிப்பான பலன் இருக்கு. பணம் பல வழிகள்ல இருந்து வந்து பையை நிரப்பும். திறமையும், உழைப்பும் வீணாகாது. வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வரும். மனசுல சின்ன சின்னக் குழப்பங்கள் வந்து தொந்தரவு பண்ணும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ், பாராட்டு உண்டு. சீரடி சாய்பாபா அருள் உங்களை நோக்கி இருக்கறதால பிரச்னைகள் நெருங்காதுங்கோ.



கன்னி : (உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)

உங்களோட கிரக சஞ்சாரம் அனுகூலமா இருக்கறதால திறமை வெளியில தெரியும். புகழ், செல்வாக்கு உச்சத்துக்குப் போகப் போகுது. மனசுக்கு மகிழ்ச்சி தர்ற மாதிரியான சம்பவங்கள் நடக்கும். வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வந்து கதவைத் தட்டும். சிலருக்கு வெளிநாடு போற சான்ஸ் இருக்கு. அலைச்சல் அதிகரிக்கும். எதிலயும் அவசரம் பதற்றம் வேண்டாம். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகள்ல வேலை பார்க்கறவங்க கொஞ்சம் கவனமா செயல்படறது நல்லது.



துலாம் : (சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)


உங்களோட சாமர்த்தியம் இந்த வாரம் எல்லாரும் மெச்சற மாதிரி இருக்கும்.

மத்தவங்களைச் சுண்டி இழுக்கற மாதிரி உங்க பேச்சு இருக்கும். வியாபாரிகள்லாம் லாபத்துல மூழ்கப் போறாங்க. எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர் துறைகளைச் சேர்ந்தவங்க எதிர்பாராத முன்னேற்றத்தை அடைவாங்க. பண நடமாட்டம் திருப்தியா இருக்கும். சிலருக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் அடிக்கப் போகுது. சிலருக்குப் பிரச்னைகள் தலை தூக்கும். கொஞ்சம் அடக்கி வாசிச்சா பிரச்னை இல்லை.




விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

உங்க மனசுல தன்னம்பிக்கையும் துணிச்சலும் ஏற்படற நேரம். எந்தக் காரியத்தையும் வெற்றிகரமா செஞ்சு முடிப்பீங்க. பொறியியல், ராணுவம், சட்டம், காவல் துறைகளைச் சேர்ந்தவங்க கொஞ்சம் கவனமா வேலை பார்க்கறது நல்லது. பிரச்னைகள் வர வாய்ப்பிருக்கு. பார்ட்னர்ஷிப் தொழில் பண்றவங்களுக்கு லாபம் கூடப் போகுது. வெளியூர் போனா கொண்டு போற பொருளைப் பத்திரமா பாத்துக்குங்க. பக்கத்துல ஏதாவது சண்டை நடந்தா பத்தடி தள்ளிப் போறது உங்களுக்கு நல்லதுன்னு கிரகம் சொல்லுது!



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

பிள்ளையாரப்பனோட கருணைப் பார்வை உங்களை நோக்கித் திரும்பி இருக்கறதால வெற்றி மேல் வெற்றி குவியப் போகுது. அதுக்காக ரொம்ப ஆட்டம் போடாதீங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு இது நல்ல நேரம். பார்ட்டி, டூர்னு சுத்தறதுக்கு வாய்ப்பிருக்கு. இரும்பு, தோல் பொருட்கள் பிஸினஸ் பண்றவங்களுக்கு ஆதாயம் கொட்டப் போகுது. எந்த விஷயத்துலயும் எதிர்ப்புகளே இருக்காது. புனிதப் பணிகளுக்காகக் கொஞ்சம் பணம் செலவழியும் உஷார்!



மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*


உங்களோட கிரக சஞ்சாரம் உங்களை எங்கயோ தூக்கிட்டுப் போகப் போகுது. குடும்பத்துல மகிழ்ச்சிகரமான விஷயங்கள் நடக்கும். கலைத் துறையைச் சேர்ந்தவங்க வெற்றிநடை போடுவாங்க. எழுத்து, பத்திரிகை துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு ஆஹான்னு துள்ளிக் குதிக்கிற மாதிரியான மகிழ்ச்சி சம்பவங்கள் நடக்கும். வெளியூர் பயணம் ஆதாயம் தரும். பெண்கள் புதுசா ட்ரெஸ், நகைகள் வாங்க சான்ஸ் இருக்கு! (கணவர்கள் கவனிக்க!). பதவி உயர்வு, டிரான்ஸ்பர்லாம் நீங்க நினைக்கற மாதிரி கிடைக்கும்.





கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

பிஸினஸ் பண்றவங்களுக்கு 'ஓஹோ'ன்னு லாபம் கொட்டப் போகுது. அரசியல்வாதிகளுக்கு நிறைய மேடை கிடைக்கும். பாராட்டு மழைல நனையப் போறீங்க. கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக்ஸ் துறைகள்ல வேலை பார்க்கறவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. சின்ன சின்னப் பிரச்னைகள் வந்து இம்சிக்கும். வீண் அலைச்சலைத் தவிர்த்திடுங்க. உங்க கூடப் பிறந்தவங்களால தொந்தரவு இருக்கும். அதிகமா வாயைத் திறக்காம இருக்கறது நல்லது.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

இதுவரை தட்டிக் கழிச்சுட்டுப் போன திட்டங்கள் இப்ப நிறைவேறிடும். உங்களோட உழைப்பும் திறமையும் வீண் போகாது. பொதுநலப் பணியாளர்களுக்குப் பாராட்டும் மதிப்பும் குவியும். கணவன் மனைவிக்குள்ள சின்ன சின்ன பிரச்னைகள் வர வாய்ப்பிருக்கு. விட்டுக் கொடுத்துப் போறது நல்லது. வெளியூர் பயணத்தைத் தவிர்த்திடுங்க. இப்ப வேண்டாம். அலைச்சல் அதிகரிக்கும். அதைத் தடுக்க முடியாது. எதிலயும் பதற்றப் படாதீங்க. பேச்சுல 'கூல்' இருந்தா நல்லது. கொடுக்கல் வாங்கல்ல எச்சரிக்கையா இருங்க. ஏமாற வாய்ப்பிருக்கு. உஷார்!

ஒரு ஞானோதயம் லேட்டாக வருகிறது!

ஜிம்பாப்வே - இந்தியா ஒரு நாள் போட்டிகளின் முடிவு எதிர்பார்க்கப்பட்டதே. It was destined to be so. அதுவும், கான்பூர் போட்டியில் ஜிம்பாப்வே 40 ஓவருக்குள், 165 ரன்னுக்குள் சுருண்டு மடங்கிய போது இந்தியாவுக்குப் பாதாம் அல்வா தான் என்பது நிச்சயமாகிவிட்டது.

ஆயினும், இந்தியா ஆட ஆரம்பித்து, winning



position -ல் இருந்த சமயம், ஒரு எல்பிடபிள்யூ அப்பீலை அம்பயர் ஏற்க மறுத்ததற்காக ஏன் அப்படியொரு காட்டுக்கத்தல் கத்தினார் கேப்டன் கங்குலி? ஏன் அத்தனை ஆவேசமாக எம்பி எம்பிக் குதித்தார்? ஏன் மைதானத்தில் காறிக் காறித் துப்பினார்? Most unbecoming.

Match referee தண்டனை தந்த பிறகு கங்கூலிக்கு ஞானோதயம் ஏற்பட்டிருக்கும். Common sense always speaks too late.

இந்த ஆண்டின் தலை சிறந்த நடிகர் நடிகைக்கான தேசிய அவார்டு யாருக்குக் கிடைக்கும் என்ற செய்தி இப்போதே leak-out ஆகிவிட்டது. நடிகர்: அனுபம் கெர். நடிகை: மனிஷா கொய்ராலா.

எப்படியெனில், இந்த இரண்டு பேருக்கும் சரிப்பட்டு வரவில்லை என்பதால், ஒப்பந்தம் ரத்தாகிறது என்று 'சவால் தஸ் க்ரோர்பதி கா' நிகழ்ச்சியை நடத்தும் ஜீ டெலிவிஷன் அறிவித்திருக்கிறது. நீ ஒசத்தியா நான் ஒசத்தியா என்ற ஈகோ பிரச்னையாம். அதனால் நிகழ்ச்சியில் இணக்கமோ ஒற்றுமையோ இல்லாமல் போய்விட்டது என்பது ஜீ டி.வியின் குற்றச்சாட்டு.

ஆனால் இந்தச் செய்தி வந்த அதே தினமும் சரி, அதற்கு முந்தின தினங்களும் சரி, ஒருவரையொருவர் பார்த்துக்கொண்ட





சினேகப் பார்வை என்ன! முகத்தில் காட்டிய மலர்ச்சி என்ன! இப்படியொரு காம்பியர் ஜோடியை உலகத்தில் பார்ப்பது அரிது என்றே தோன்றியது.

இத்தனை பிரமாதமாக நடித்திருக்கும் இந்த இருவருக்குத் தேசிய அவார்டு தராமல் வேறு யாருக்கோ கொடுத்தால் It would be a travesty of justice leak-out.

மகாகவியின் நினைவுக்காக நிறையவே நேரம் ஒதுக்கியிருந்த ராஜ் டி.விக்காரர்களே! Bless you!

'காலத்தை வென்ற கவிக்குயில்' கலந்துரையாடலில், எழுத்தாளர் வல்லிக்கண்ணன், சில பேர் தங்களுக்கும் புரியாமல் படிப்பவர்களுக்கும் புரியாமல் எழுதுகிறார்கள் என்று குட்டு வைத்தார். கவிஞர் இன்குலாப், எழுத்தால் பாரதி சாதித்ததை இயக்கத்தால் பெரியார் சாதித்தார் என்றார். அன்னை தெரசா பல்கலைக்கழக விரிவுரையாளரான நீலமலர் செந்தில் குமார், 'அன்று நிலவே, பூவே என்று பெண்களை வர்ணித்தார்கள். இன்று செல்ஃபோனே, டெலிபோன் மணியே என்கிறார்கள். பெண்கள் எப்போதும் அஃறிணைதான்' என்று பாடலாசிரியர்களைச் சாடினார்.

பேச்சாகவே ஒரு மணி நேரம் போச்சு. ஆனால் போரடிக்கவில்லை. காரணம், கவிஞனின் சக்தி. The bards sublime whose distant footsteps echo through the corridors of Time.

நாட்டுப் பாடல்கள் சேகரிப்பவரா, நாவலாசிரியரா, நாட்டிய குருவா, கவிஞரா, சங்கீத விமரிசகரா என்று எந்த வட்டத்துக்குள்ளும் கட்டம் போட முடியாத versatile personality சுஜாதா விஜயராகவன். 'பொதிகை' பேட்டியின்போது, சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வற்புறுத்திக் கூறி, தனக்கு இன்னொரு பரிமாணமும் உண்டென்று காட்டினார்.

நாட்டியக் கலையில் பல பரிசோதனைகளைச் செய்திருப்பவர், ஹைகூவைக்கூட நடனக் கலைக்குப் பயன்படுத்தியதாகத் தெரிவித்தார். எனவே

எதையும் பிலியனில்
ஏற்றலாம் என்பதால்
ஹைக்கூ ஒரு
பைக்கூ.


'சிநேகிதியே' வெளி வந்து வெகு நாள் கழித்து ஸன்னில் திரை விமர்சனம் வருகிறதே என்று கொஞ்சம் ஆச்சரியமாக இருந்தாலும் படத்தின் குறைநிறைகளைக் கரெக்டாகவே குறிப்பிட்டார் ரத்னா. இடையிடையே காட்டப்பட்ட காட்சிகளில் ஒன்று –

'அந்தக் கொலையை நான் செய்யலே! நான் செய்யலே!' என்று ஷர்பானி shreiks out in fright. இரண்டு கட்டிலுக்கு நடுவே தரையில் விழுந்து புரண்டு அலறும் அவரைத் தைரியக்காரியான தோழி ஜோதிகா நிமிர்த்தி உட்கார்த்தி வைத்து, இரண்டு தோளையும் அழுத்தி உலுக்கி, அதட்டல் போட்டுக் கூச்சலை நிறுத்துகிறார். நடிப்பு, காமெரா, ஒளி, வசனம் எல்லாம் கை கோத்துக் கொள்ளும் இந்தக் கட்டம் –

Keeps you glued to the seat.

நிற்க. 'ஹிட்ச்காக் கதை மாதிரி இருக்கிறது' என்று ரத்னா சொன்னது உதாரணமாகவா, உள்ளர்த்தத்துடனா?

ஜாதிக் கலவரத்துக்குக் காரணம் திராவிடக் கட்சிகளே!



தியாகம் புரிய வேண்டும் என்று அரசியலுக்கு வந்தவர்கள் 1940–50ம் கால கட்டத்தைச் சேர்ந்தவர்கள். பின்னர், குறைந்த பட்சம் மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் பலர் அரசியலுக்கு வந்தனர். '70க்கு பின்னர் அரசியலை வியாபாரமாக நினைத்து பலர் வந்தனர். பணம் கொடுத்து, அரசியல் கட்சிகளில் ஸீட் வாங்கி, ஏகமாக செலவழித்து வெற்றி பெறுவது; பின்னர் காண்ட்ராக்ட், லஞ்சம் என்று கொழிப்பது, இந்த நிலையும் இப்போது மாறிவிட்டது. இப்போது அரசியல் என்பது 'கொள்ளையடிப்பது' என்றாகி விட்டது. நமக்குப் பிறகு சுதந்திரம் வாங்கிய நாடுகள் கூட முன்னேற்றப் பாதையில் எங்கோ சென்று விட்டன. நமது நாடு மட்டும் இப்படி இருக்க என்ன காரணம்? ஏழை மக்களை நாம் என்றும் குறை சொல்ல முடியாது.

மோசமானவர்கள் அரசியலுக்கு வந்ததால் மட்டும் அல்ல; நல்லவர்கள் செயலற்று இருப்பதும் முக்கியமான காரணம். அரசியலுக்கு நல்லவர்கள் வரவேண்டும்; தியாகம் செய்பவர்கள் வர வேண்டும். அந்த நிலையை உருவாக்கத்தான் மூவேந்தர் முன்னேற்றக் கழகம் பாடுபடும்.

மூன்று முக்கியமான கொள்கை முடிவுகளை நாங்கள் எடுத்திருக்கிறோம். பொதுப் பிரச்னைகளுக்காகப் போராடும் போது பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுவது போல நடந்து கொள்ள மாட்டோம். பொருளாதாரத்தைப் பாதிக்கக் கூடிய பந்த், சாலை மறியல் நடத்த மாட்டோம். ஜாதிக் கலவரங்களுக்குக் காரணமாக இருக்க மாட்டோம். கட்சி துவங்கிய சில மாதங்களிலேயே 3500 கிளைக் கழகங்கள் அமைக்கப்பட்டு விட்டன. எங்கள் இயக்கத்தில் பெரும்பாலும் முக்குலத்தோர் இனத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தாலும் தாழ்த்தப்பட்டவர் உட்பட பல்வேறு சமூகத்தினர் இருக்கிறார்கள். எங்களை ஜாதிக் கட்சி என்று குற்றம் சாட்டும் சிலரைக் கேட்கிறேன். தி.மு.கவும் அ.தி.மு.கவும் ஜாதி அரசியல் செய்வதில்லையா?

முக்குலத்தோருக்கு எதிராக தலித் மக்களைத் தூண்டிவிட்டு குளிர்காய நினைக்கிறது தி.மு.க. ஜாதிக் கலவரங்களுக்குக் காரணம் திராவிட இயக்கங்களே! தேவர் குருபூஜை விழாவில் கலந்து கொள்வதும், ரம்ஜான் நோம்பு கஞ்சி குடிப்பதும் தங்களுக்கு வோட்டு

டாக்டர் என். சேதுராமன்
நிறுவனர், தலைவர்:
மூவேந்தர் முன்னேற்றக் கழகம்

வாங்கி கொடுத்துவிடும் என்ற மாயையில் அரசியல் தலைவர்கள் இருக்கிறார்கள்.

நாங்கள் ஏதோ தி.மு.க.வுக்கு எதிர்ப்பாக இருப்பதால், அ.இ.அ.தி.மு.க. எங்கள் வோட்டுக்களை ஹைஜாக் செய்யப் பார்க்கிறது; அது நடக்காது. தேவர் சிலை உடைக்கப்படும் போதெல்லாம் ஜெயலலிதா கண்டன அறிக்கை கூட விடுவதில்லை. ஆனால் அவருடன் கூட்டணி காண்பதுதான் இயல்பான நிலையாக இருக்கும் என்று கருதுகிறோம்.

இந்த நான்கரை வருட காலத்தில் கலைஞர் அரசு இன்னமும் செய்திருக்கலாம். விஞ்ஞானபூர்வமான அணுகுமுறை இல்லை. உழவர் சந்தை போன்றவை வோட்டுகளின் மேல் குறிவைத்துப் போடப்பட்டுள்ள திட்டம். தொழில்வளர்ச்சி-குறிப்பாக தென் மாவட்டங்களில் கிடையாது. அதிக வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் ஜாதிக் கலவரங்களைக் குறைக்க முடியும். தொழில் வளர்ச்சிப் பெருக வேண்டுமென்றால் அடிப்படை கட்டுமான வசதிகளை உருவாக்க வேண்டும். மின்உற்பத்தி, போக்குவரத்து போன்றவற்றை முழுக்க, முழுக்க தனியாரிடம் கொடுக்கலாம். தனியார்கள் யூனிட் இரண்டு ரூபாய்க்கு மின் உற்பத்தி செய்ய முடியும். வடக்கில் ஓடும் நதிகளைத் தென்னக நதிகளுடன் இணைக்க வேண்டும். இதன் மூலம் இந்தியாவில் பசுமை கொஞ்சும், பஞ்சம் ஓட்டமெடுக்கும். ஜாதி ரீதியிலான கணக்கெடுப்புத் தேவை. தனியார் நிறுவனங்களிலும் சமூக நீதி வேண்டி குரல் கொடுப்போம். எந்த சூழ்நிலையிலும் ஜாதிக் கலவரங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வோம். தேர்தல் கமிஷனில் முறைப்படி அரசியல் கட்சியாகப் பதிவு செய்துள்ள நாங்கள், வரும் சட்டமன்றத் தேர்தலில் எங்களின் கருத்துக்களை மக்கள் முன் வைப்போம். இனி மத்தியிலும் சரி, மாநிலத்திலும் சரி, ஒரு தனிக்கட்சி ஆட்சி கிடையாது. கூட்டணி ஆட்சிதான். அந்த நிலையில் எதிர்கால அரசியலில் எங்களுக்குள்ள பங்கு காத்திருப்பதாக உறுதியாக நம்புகிறோம்.

படம்: ராஜன்

ஆலிங்கன ஆஞ்சனேயர்

ராமபிரானும் பக்தனான ஹனுமானும் ஆலிங்கனம் செய்து கொள்ளும் கோலத்தை, கீழ்க்கண்ட இரு இடங்களில் நான் கண்டிருக்கிறேன்.

1) பெங்களூர் ஹனுமந்த நகரில் மலை மேல் இக் கோலத்தில் ராமனும் ராம பக்த ஹனுமானும் ஆரத் தழுவி நிற்கின்றனர்.

2) திருப்பதி மலையடிவாரத்துக்கு அருகில் இக்கோலத்தை திருமலை யாத்திரை செல்பவர்கள் நிச்சயம் கண்டிருப்பார்கள்.

ஸ்ரீராமபக்த ஹனுமான்

வந்த கோபத்தில் ராவணனுக்குக் கண்கள் சிவந்து உடலெல்லாம் நடுங்குகிறது! உச்சகட்ட கோபம்! "இந்தக் குரங்கை உடனே கொன்று விடுங்கள்!" என்று உத்தரவிடுகிறான்.

வேறு யாரேனும் இருந்திருந்தால் அந்தக் கோபத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே, அந்தச் சொல்லைக் கேட்ட கணத்திலேயே உயிர் போயிருக்கும்! ஆனால் ஹனுமானுக்கு மட்டும் பயமே ஏற்படவில்லையாம்! ஏன்...?

ஸ்ரீ ராமனை உள்ளக்கோவிலிலே வைத்து அனவரதமும் தியானம் செய்கிற ஒருவருக்கு எங்கேனும் பயம் ஏற்படுமா? அவன் நிலத்தில் யார்க்கும் அஞ்சா நெறியுடையவனாகவல்லவா இருப்பான்? ராமனை மனத்தில் இருத்தியவன் புடம் போட்ட நேர்மையாளனாகத்தான் இருக்கலாகும். அந்த நேர்மை தரும் அஞ்சா நெறியும் வைராக்கியமும் ஹனுமானை இயக்கி ராவணனுக்கே ஹிதோபதேசம் - இதமான வார்த்தைகள் - கூற வைக்கின்றன.

"உன் குலம் தழைக்க, நீ உயிருடன் வாழ ஒரே வழி, சீதையை ராமனிடம் ஒப்படைப்பதுதான்!" என்று ஹனுமான் ராவணனிடம் சொன்னதாக வால்மீகி எழுதியிருக்கிறார் அல்லவா...?

துளஸிதாஸர் கூறுகையில் ஆஞ்சனேயன் சற்றுக் கடுமையாகப் பேசியதாகவே காட்டுகிறார். "மோகத்தையும் கர்வத்தையும் விட்டு ராமனைச் சரணடைவாயாக" என்றானாம் ராவணனிடம்.

கம்பர் மிதமான மொழியில்தான் இந்த ஹிதோபதேசத்தை விவரிக்கிறார்:

ஆதலால் தன் அரும்பெறல் செல்வமும்
இது பல்கிளையுள் உயிரும் பெறச்
சீதையைத் தருகென்றெனச் செப்பினான்
சோதியான் மகன் நிற்கு எனச்
சொல்லினான்.

அருணாசலக் கவிராயர் தான் அடித்துப் பேச வைக்கிறார் ஹனுமானை! அடா!

அடா! என்று ஒரே அதட்டல் மயம்!
பிழைக்க என்றால் வாடா - தான்
சொன்ன
இதமான பேச்சைக் கேளடா மூடா -

....

பழிக்கெல்லாம் நீதானே ஆளா
படைத்துக் கொண்டாயே சண்டாளா
தப்பிப் (பிழைக்க)

'வாடா!', 'மூடா!' 'சண்டாளா!' - என்ன மனவலிமை இது!

சிரச்சேத உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னும் சிரித்தமுகத்துடன் இருக்கிறான் ஹனுமான். அங்கேயிருந்து விபீஷணன் வந்து இடைமறிக்கிறான்.

"அண்ணா! தூது வந்தவனைக் கொல்வது ராஜ்ய தர்மம் ஆகாது. ஆதலால் ஹனு

கல்யாணபுரம் ஆராவமுதன்



21

மானைக் கொல்ல வேண்டாம். இவனுக்குத் தகுந்த வேறு தண்டனை விதிக்கலாமே யன்றி கொல்வது சரியல்ல. சாட்டையடி கொடுக்கலாம்; தலையை மொட்டையடித்து அனுப்பி வைக்கலாம்; அங்கங்களை விகாரப்படுத்தலாம்... ஆனால் உயிரைப் பறிக்கக் கூடாது..." என்று சொல்கிறான்.

இதைக் கேட்ட ராவணன், "நன்று சொன்னாய் விபீஷணா!" என்றானாம்.

"குரங்குகளுக்கு வால்தான் ப்ரிய மான ஆபரணம் போன்றது. அதனால் ஹனுமானின் வாலைக் கொளுத்தி விட லாம்" என்று உத்தரவிட்டான்.

சணல் கயிறு கொண்டு வரப்பட்டது. கிழிந்த துணிகளால் ஹனுமானின் வாலைச் சுற்றத் தொடங்கினார்கள். சுற்றினால், சுற்றச் சுற்ற நீண்டுகொண்டே போகிறது அந்த அழகான வால்! விடேன் தொடேன் என்று சுற்றி முடித்து, களைத்து அமர்கிறார்கள் அசுரர்கள். இலங்கையிலுள்ள துணியெல் லாம் தீர்கிற வரை சுற்றுகிறார்கள்! அதன் பின்னர் அதன் மேலே எண்ணெய் ஊற்றி, நெருப்பைக் கொளுத்தி விடுகின்றனர்.

இந்த சமயத்தில் ஹனுமான் உதிக்கின்ற சூரியன் போல ஜொலித்தான் என்கிறார் வால்மீகி! - **பால சூர்யா ஸமானன:**

ஏந்து நெடுவால் கிழி சுற்றி,
முற்றும் தோய்ந்தார் இழுது
எண்ணெய்
காந்து கருந்தீ கொளுத்தினார்
ஆர்த்தார் அண்டம் கதிகலங்க
- இது கம்பர்!

ராவணன் மனத்தில் மகிழ்ச்சியோடு நினைத்துக்கொண்டானாம். 'இந்தக் குரங்கு வாலில்லாமல் அங்கே போய் நிற்கிறபோது நமது பராக்கிரமம் என்ன என்பது அங் குள்ளவர்களுக்குத் தெரியும்' என்று!

ஹனுமான் பார்த்தார். இந்த வாலில் இருக்கும் நெருப்பும் இலங்கையைச் சேர்ந்தது. அதை இங்கேயே விட்டு விட்டுப் போவதுதான் நியாயம். இலங்கை நகரின் எல்லா மாளிகைகளையும் தனது வாலி லிருந்த நெருப்பால் பற்ற வைத்தபடியே பறந்தான் ஹனுமான்!

விபீஷணன் இல்லம் மட்டும் இந்த விபரீதத்திலிருந்து தப்பியது.

இலங்கை முழுவதுமே ஒரு பெரிய நெருப்புக் கோளம்போல் எரிகிறது! ஹனுமானைக் கண்டு அரக்கர்கள் அலறிக் கொண்டு ஓடுகிறார்கள்.

அருள்வாக்கு

எல்லா வஸதியும் படைத்த ஒருவர் இருக்கிறார். அவருக்கு நல்ல தேஹா ரோக்யமிருப்பதற்காக 'எக்ஸெர்ஸைஸ்' செய்ய வேண்டியிருக்கிறது. இதைச் செய்வதில் இரண்டு விதங்கள் இருக் கின்றன. ஒன்று, அவர் தேஹாப்யாஸம் என்று சொல்லப்படும் எக்ஸெர்ஸைஸ்கள் பண்ணலாம் - தண்டால் எடுக்கலாம், ஸர்வாங்காஸனம் போடலாம். அல்லது ஸகல அவயவங்களுக்கும் நன்றாக வேலை கொடுக்கும் விதத்தில் ஓடி ஆடி, வெட்டி கொத்தி ஏதாவது பண்ணலாம். இப்படி இரண்டாவது விதத்தில் அவர் ஓடி ஆடிப் பண்ணுகிறாரென்றால், அப்போது மற்ற வர்களுக்கு ப்ரயோஜனமாகப் பழத் தோட்டம் போடுவது, அதற்காக வெட் டுவது கொத்துவது, ஜலம் இழுத்துவந்து கொட்டுவது என்று பண்ணுவதே ச்லாக்யமாகும். இவருக்குப் பண வஸதி,

வாலைப் பிடித்து நெருப்பு வைத் தால் ஏற்படக்கூடிய கோபம் ஆஞ்சனே யனுக்கும் ஏற்படத்தான் செய்தது. அதன் விளைவுதான் லங்காதகனம். ஆனால் இலங்கை பற்றி எரிகிற காட்சியைக் கண்டதும் ஆஞ்சனேயரின் மனத் தில் திடீரென்று ஓர் எண்ணம் எழுந்ததாம்:

'ஐயோ! நம் மனத்திலே இப்படியொரு கோபம் பொங்கி எழுந்ததே! கோபத்தை வென்றவர்கள் அல்லவா சிறந்தவர்கள்! ஏனெனில் கோபம் வரும்போது அனேகம் பாபங்களை அறிந்தும் அறியாமலும் செய் கிறோமே. நம்மை மறந்து மூத்தவர்களைக் கூட அழிவுக்குள்ளாக்குகிறோம். குருநாத ரைக் கூட நிந்திக்கிறோம். இப்படியொரு கோபம் நமக்கு வரலாகுமா?'

அடுத்த கட்டத்துக்கு நகர்கிறது அவன் சிந்தனை!

'இந்த இலங்கையிலேயேதானே சீதை இருக்கிறாள். நான் வைத்த தீயால் சீதைக்கு மட்டும் ஏதேனும் ஆபத்து நேர்ந்திருக்கு மானால் நான் வந்த காரியமே அல்லவா கெட்டுப் போயிருக்கும்! சீதைக்கு ஏதேனும் துளி தீங்கு வந்தாலும் ராமனோ மற்றவர் களோ உயிர் வாழ்வார்களா!'

அந்த சமயத்தில் வானவீதியிலே ஓர் அதிசயம் நிகழ்ந்தது. சாரணர்கள் கூடி இலங்கை எரிவதைப் பார்த்துவிட்டு ஹனு மானின் அரிய செயலை வாழ்த்துகிறார்கள். 'அத்தனையும் எரிந்தபோதும் சீதை



ஆள் வஸதி எல்லா வஸதியும் இருக்கிறது; அதனால் இவரே உழைத்துத் தோட்டம் போட்டுப் பயிர் பண்ண வேண்டுமென்றில்லை. இவருக்குப் பழமும் வேண்டுமென்றில்லை. இருந்த போதிலும் இவருக்கு மட்டும் ப்ரயோஜனப் படும்படி தண்டால் போடுவதைவிட, அல்லது எங்கேயோ நிர்மாநுஷ்யமான காட்டிலே மேட்டிலே போய் எதையோ வெட்டி, கொத்தி, முறித்துக் கொண்டிருப்பதைவிட, நாலு ஜனங்களுக்கு உதவும்படியான பரோபகாரமாகத் 'தோட்டப் பணி செய்வது தானே ச்லாக்யம்? பழம் என்ற பலன் இவருக்கு வேண்டாம். ஆனால் தேஹாரோக்யம் வேண்டும். அதற்காக இவர் செய்வதே பழம் வேண்டிய வேறு யாருக்கோ உதவி பண்ணுகிறது.

இந்தமாதிரிதான் கர்மாவைக் கழித்துக் கொண்டு பரமாத்மாவிடம் சேர விரும்புகிறவர்களுக்கு சாஸ்த்ர கர்மா உள்பட அதனால் ஏற்படுகிற பலனும் வேண்டியதில்லை. ஆனாலும், பரமாத்மாவிடம் சேருவதற்குண்டான பக்வத்தைப் பெறுவதற்காக மனஸை நாலா திசையிலும் ஓடாமல் சுத்தி செய்வதற்கு, ஆரம்ப திசையில் ஏதாவது கார்யத்தில் ஈடுபட்டால் தான் முடியுமென்றிருக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

இருக்கின்ற இடம் மட்டும் பாதுகாப்பாக இருக்கிறதே. சீதைக்கு எந்தவித தீங்கும் நேரவில்லையே' என்று ஆச்சர்யத்தில் மூழ்கிப் போகிறார்கள்.

இதைக் கண்ட ஹனுமானின் உள்ளம் பூரிக்கிறது. சீதை பத்திரமாக இருக்கிறாள் என்கிற எண்ணமே அவனை அமைதிப் படுத்தி, கோபம் தணித்துவிடுகிறது.

சீதையின் பாதுகாப்பு உறுதியானதும் தான் ஆஞ்சனேயனுக்குத் தன்னைப் பற்றிய ஞாபகம் வருகிறது. அவன் எண்ணிக் கொள்கிறான்.

'இது என்ன ஆச்சர்யம்! இத்தனை இடங்களில் தீயைப் பரப்பிய என் வால் எனது உடம்பை மட்டும் தீண்டவில்லையே! இது எப்படி சாத்தியமாயிற்று? சீதையின் கற்பு நெறியினாலா? ராமனின் அருளினாலா? அல்லது எனது தந்தை வாயுபகவானின் கருணையாலா? அல்லது அனைத்தினாலுமா...?

சீதையை மீண்டும் கண்டு விடை பெற வேண்டும் என்று தோன்றிவிடுகிறது ஸ்ரீராம பக்த ஹனுமானுக்கு!

அதேசமயத்தில் சீதாபிராட்டியின் செவிகளுக்கு அந்தச் செய்தி எட்டி விடுகிறது- ஹனுமானின் வாலில் ராவணேசுவரன் நெருப்பு வைத்து விட்டான்!

துயரில் தோய்ந்தாள் பிராட்டி. தனக்கு உதவி செய்ய வந்த ஹனுமானுக்கு இப்படி ஒரு சோதனையா?

உடனே அக்னி தேவனை வேண்டிக் கொண்டாள் - 'ஹே அக்னியே! என் கணவனான ஸ்ரீ ராமனையன்றி வேறொருவரை நான் மனத்தாலும் நினையாதவள் என்பது உண்மையானால், ஹனுமான் இடத்திலே நீ குளிர்ந்து இரு!

இந்தப் பிரார்த்தனையின் பயனோ, ஹனுமானின் அசஞ்சல பக்தியின் விளைவோ அல்லது எல்லாமோ... துளி தீங்கு ஏற்படாமல் அசோகவனிகைக்கு மீண்டும் வந்து சேர்ந்தான் ஹனுமான். அவன் வேண்டிக் கொண்டதைப் போலவே சீதையை நெருங்காமல் நீங்கி நின்றது நெருப்பு.

மீண்டுமொருமுறை பிராட்டியை வணங்கி வலம் வந்தான் ஹனுமான்.

"தாயே! ராமபிரான் வானரசேனைகளுடன் இங்கு வந்து உங்களை மீட்டுப் போவார். கவலையை விடுங்கள். எனக்கு விடை கொடுங்கள்" என்றான்.

பற்றி எரிந்த நெருப்பு எங்கும் தகிக்க, அந்த இரண்டு பேர் உள்ளங்கள் மட்டும் தண்ணென்று குளிர்ந்திருந்தது.

சீதாபிராட்டி மகிழ்வுடன் விடை கொடுக்க, ஹனுமான் குதித்துக்கொண்டு புறப்பட்டான்.

(வளரும்)

வீரப்பனைப் பிடிக்க விமானம் மூலம் தேடுதல் வேட்டை, மத்திய அரசு உதவி – செய்தி

விமானத்தைப் பயன்படுத்த எண்ணியது சரிதான் – கடல் கடந்து பல நாடுகள் தேட வேண்டி வருமே!

நகை கொள்ளை போனதாக நாடகமாடி போலீஸில் பொய் புகார் கொடுத்த ரிசர்வ் வங்கி குமாஸ்தாவின் மனைவி கைது செய்யப்பட்டார் – செ.

இருப்பதைப் பிடிப்பதே பெரும் காரியம், இதில் இல்லாததை எங்கிருந்து பிடிப்பது? இந்த அம்மாவிற்கு மனோஜ் பிரபாகர் தேவலை, குற்றவாளிகளைக் காட்டிக் கொடுத்த கையோடு தானும் அதே குற்றத்திற்காக மாட்டிக் கொண்டிருக்கிறாரே!

போரிஸ் பெக்கர் மனைவியைப் பிரிகிறார் – சப்ரீனா என்ற இந்தியப் பாடகிதான் பிரிவுக்குக் காரணம் – செ.

*Love one –ன்னா ஓ.கே,
Love all – ன்னா, Becker, Beggar
ஆகாம இருக்கணும்!*

பெங்களூர் வந்த மும்பை விமானத்தின் டயர் வெடித்தது. 122 பயணிகள் உயிர் தப்பினர் – செ.

விமானங்கள் எல்லாம் இனி வானத்தில் பறந்தால் மானம்தான் விமானம் ஏறிவிடும் என்று இனி தரைவழி போக்குவரத்துக்காகவாவது விமானங்களை உபயோகிக்கலாம் என்றால், இப்படி டயர் பஞ்சராகி, அதற்கும் வழியில்லாமல் செய்து விட்டார்களே!

செருப்பில் கஞ்சா கடத்தல், சென்னையில் சிறைக் கைதிகளுக்கு பலத்த கண்காணிப்பு – செ.

எதற்'கஞ்சா' நெஞ்சர்கள்!

'கையால் தயாராகும் தீப்பெட்டிகளை ரேஷனில் விற்க வேண்டும் – போராட்டம்! – செ.

ரேஷன் கடையில் தீப்பெட்டி கூட கிடைக்கவில்லை' என்றால் மக்களுக்கு இன்னும் எரியுமே? அப்படியே கிடைத்தாலும் குச்சிகளை எண்ணி வாங்க வேண்டும்!





கிண்டல்ல்ல்ல்ல்ஸ்!

பஞ்சாப் ரயில் விபத்து, மம்தா பானர்ஜி ராஜினாமா, பிரதமர் ஏற்க மறுப்பு- செ.

பல மந்திரிகள் மந்திரிகளாக இருப்பதே விபத்தாக இருக்கிறது. பிராடுகேஜ் வண்டிகள் மீட்டர்கேஜ் வண்டிகள் எல்லாம் சேர்ந்து சென்டிமீட்டர் கேஜில் ஓடுவது போல ஆட்சி இருந்தால், நாள்தோறும் விபத்துதான்!

சென்னை பல்கலைக் கழக பட்டப் படிப்பு சான்றிதழ்களை போலியாகத் தயாரித்து ரூ. 1000க்கு, ரூ.2000க்கு விற்றதாக 4 ஆசாமிகள் கைது! – செ.

பிடித்தவர்களாவது உண்மையான போலீஸா, இல்லை, அவர்களும் போலியா?

''தாத்தாவை எமன் அழைத்துப் போகக் காத்திருப்பான். Dont call me தாத்தா, Call me Nanaji!'' - வாஜ்பாய் - செ.

தாத்தாஜியோ நானாஜியோ, அது எப்படியோ போட்டும். ஆனால் வாஜ்பாய்ஜி – 'வாய்' பார்த்து ஜி!

பிறந்த நாள் காணும் ரஜினி தனது அடுத்த படம், அரசியல் குறித்து தொடர்ந்து மௌனம் – செ.

''என் வழி தனி வழி'' என்பார், இப்ப ''என் மொழி தனி மொழி''ன்னு மௌனமாயிருக்கிறார். Calm before storm – ஆ, இல்லை ராவ் போல Calm before calm – ஆ?

மாப்பிள்ளை வீட்டார் சொன்னபடி பவுன் கொண்டு வராததால் பெண் வீட்டார் திருமணத்தை நிறுத்தி, திருமணத்திற்கு வந்த பெயிண்ட் தொழிலாளியை மாப்பிள்ளையாக்கி விட்டார்கள் – செ.

Painter–ஐ வைத்துக்கொண்டு பழைய மாப்பிள்ளை முகத்தில் கறுப்பு பூசி விட்டார்களா? வெரிகுட்! இந்தப் புரட்சி ஒரு நல்ல pointerதான்!

● எம். பிச்சைக்கனி, நெமிலி.

? 'விடுதலை கேட்டு நடத்துகிற புனிதப் போரில் சாவுகள் சகஜம். ஓரிரு சம்பவங்களின் அடிப்படையில் ஓர் அமைப்பைத் தடைசெய்வது சரியில்லை. எனவே விடுதலைப் புலிகள் மீதான தடையை மத்திய அரசு நீக்கவேண்டும்' என்று வைகோ சொல்கிறாரே?

! அண்ணல் காந்தி பிறந்த நாட்டில் பிறந்த ஒருவர், விடுதலைப் புலிகளின் போரைப் புனிதப் போர் என்று வர்ணிப்பது வெட்கக்கேடு. விடுதலைப் புலிகளுக்குத் தடை விதித்த அரசு, இதுபோன்ற பேச்சுக்களுக்குத் தடை விதிக்காதது அதிசயம்.

● பென்னிக்குக் செபாஸ்டியன், தேக்கடி.

? இந்தியாவின் சோதனை, சாதனை?

! சோதனை: மக்கள் தொகை; சாதனை திறம்படப் பயன்படுத்திக் கொள்வது. அதற்குமட்டும் இனிமேல் தான் யாராவது பிறந்து வரவேண்டும்.

● க.ரா. இராஜேஸ்வரன்,
மொரட்டுப்பாளையம்

? கூத்துப்பட்டறை ந. முத்துசாமிக்கு சங்கீத நாடக அகாடமி விருது கிடைத்துள்ளது பற்றி...?

! காலம் தாழ்ந்த கௌரவம் என்றாலும் காலம் தாழ்த்தாமல் பாராட்டிவிடுவோம்.

● அவ்வை கே. சஞ்சீவிபாரதி, கோபி

? ஜனதா தளத்தை உடைத்த ராம்விலாஸ் பாஸ்வான், அதற்கான பலனை அனுபவிப்பார் என்கிறாரே தேவேகௌடா..?

! சுயத்தைப் பார்த்து இளித்ததாம் பித்தளை!

● பா. அச்சுதன், சேத்துப்பட்டு

? எது சகிப்புத்தன்மை?

! வாஜ்பாயின் போர் நிறுத்த அறிவிப்பும் அதற்கு ஹீரியத் தலைவர் அப்துல் கனி லோன், பல முஸ்லிம் அமைப்புகளின் எதிர்ப்பை மீறி தெரிவிக்கும் ஆதரவும்.

● டி.. சுப்ரமணி, மணலி

? மனிதனை சக்தியுள்ளவனாக்குவது பணமா? பலமா?

! இரண்டுமில்லை; எண்ணங்கள்-தான் என்பது என் அபிப்பிராயம். டாக்டர் வால்டர் ஸ்டேபிள்ஸ் எழுதிய 'திங்க் லைக் எ வின்னர்' புத்தகம் படித்த பிறகு, எண்ணங்களால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை எனப் புரிந்தது.

● சந்திரமோகன், சென்னை - 24

? அஞ்சல்துறையையும் தனியாரிடம் விட்டுவிட்டால் என்ன குடிமூழ்கியா போய்விடும்?

! கடிதங்கள் இறக்கைகள் கட்டிக்கொள்ளும். கூடவே கட்டணங்களும். டில்லிக்கும் பெங்களூருக்கும் இரு அவசரக் கடிதங்கள் அனுப்பினேன். ஆறு ரூபாயில் முடிய வேண்டியதற்கு செலவு 75 ரூபாய்!

● இரா. முருகன், அபிவிருத்தீஸ்வரம்

? நியாயத்தை எடுத்துச்சொன்ன புதுவை அமைச்சர் கண்ணன் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருப்பதை தராசால் எடைபோட முடியுமா?

! தனிப்பட்ட மனத்தாங்கல் இருப்பதால் கண்ணனின் தட்டு கொஞ்சம் உயர்ந்திருந்தது. ஆனால், ஜெயகுமாரை விசாரிப்பதில் காட்டாத அவசரத்தை கண்ணனை நீக்குவதில் சண்முகம் காட்டப்போக, கண்ணன் பக்கம் வலு கூடுகிறது.

● பரம-ஸ்டாலின், தஞ்சை - 6

? 'வாயால் கெட்ட வாஜ்பாய்' என்று பிரதமருக்குப் பட்டம் தந்தால் எப்படியிருக்கும்?

! சங்கீத சீசனுக்குப் பொருத்தமாக இருக்கும்.

● ஆ. ரமேஷ், வள்ளியூர் ❐

? எதிர்முகாமைச் சேர்ந்த பாலயோகி சபாநாயகராக இருப்பது பி.ஜே.பிக்கு பலமா? பலவீனமா?

! நமது பலமோ பலவீனமோ இன்னொருவரிடமிருந்து பெறப்படுவதில்லை. நமது நடத்தையின் அடிப்படையில் அமைவது. பி.ஜே.பி. விதிவிலக்கல்ல.

● அருள்தாஸ், மன்னார்குடி

? ஜே.எச். பட்டேல்?

! கர்நாடக அரசியலின் ஜனதாதள சூப்பர் ஸ்டார்! குடும்பத்தினர் பலர் ஒரு சேர ஒரு

ரஜினிக்கு 51 வயது ஆகி

விபத்தில் மாண்டதால் சில மாதங்களாக மன மொடிந்து போயிருந்தவர் மருத்துவ மனையில் காலமானார்.

> ❑ ரூ. 50 பரிசு பெறுபவர்:
> அ. ரமேஷ்,
> D1/15, தெற்கு சிவன் கோவில் தெரு,
> புலியூர் வீட்டு வசதிவாரியம்,
> கோடம்பாக்கம், சென்னை –24.

> ✱ ரூ. 25 பரிசு பெறுபவர்:
> கே. பிரகாஷ்,
> 37, அவ்வைநகர் எக்ஸ்டன்ஷன்,
> தருமபுரி – 5

● கே.வி. சீனிவாசன், சென்னை - 7

? பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபடுவதையடுத்து அவையை ஒத்தி வைப்பதால் மக்கள் வரிப்பணம் இழப்பு தானே...?

! இழந்த பணத்தைக்கூட திரும்பச் சம்பாதித்துவிடலாம். இழந்த நேரத்தை யாரால் ஈடுகட்ட முடியும்?

● டி.ஜே. ரமணி, சென்னை - 5

? அரசியல் ஆதாயத்துக்காக மட்டுமே இஃப்தார் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் அரசியல் தலைவர்கள் பற்றி...?

! ஆரம்பத்தில் அந்த ஆதாயம் இருந்தது. இப்போது மக்கள் (ஹிந்துக்கள்-முஸ்லிம்கள்) புரிந்து கொண்டுவிட்டார்கள். இன்று சடங்கு மட்டுமே உள்ளது.

● அமீத் கனி, சென்னை – 2

? 'மனிதம்' என்பது என்னங்க?

! பக்கத்து வீட்டுக்காரனுக்கு காலில் முள் தைக்கும்போது உங்க மனசு வலிச்சா அதுதாங்க மனிதம்.

● பரேக்குமார், சென்னை – 4

? ரஜினிக்கு 51வயது ஆகிப்போச்சே?

! இன்னும் நாலு வருடங்களுக்கு அவருடைய ரசிகர்கள் அவர் வயதை ரிவர்ஸில் படிப்பார்கள்!

● ஆர். தங்கராஜ், திருப்பூர்

? உங்களுக்குப் பிடித்தது வீட்டுச் சாப்பாடா? ஹோட்டல் சாப்பாடா..?

! வீட்டுச் சாப்பாட்டைக் கட்டிக் கொண்டுபோய் காடு, கழனி, குளத்தங்கரையில், மரத்து நிழலில் சாப்பிடுவது தான்!

● கே.பிரகாஷ், தர்மபுரி - 5 ✱

? இறைவன் மனிதனிடம் வெறுப்படைந்துவிட்டானா...?

! புதிதாய்ப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும், பொழியும் ஒவ்வொரு மழைத்துளியும் இறைவன் மனிதனிடம் கொண்டுள்ள கருணையைத்தான் காட்டுகிறது. ⬤

...போச்சே?

நீங்கள் கேட்டவை - (வாசகர்களிடம் தொலைபேசியில் கேட்டுப் பெற்றவை) - தராசு



• ரிவர்ஸ் வயது! • நட்சத்திர அந்தஸ்து! • கூடும் எடை! • சகிப்புத்... ...தன்மை! • வாயம் தாழ்த்தாமல்... • வெட்கக்கேடு!



KALKI SADASIVAM MEMORIAL AWARD

Today's advertising world is a rich combination of professionalism, innovation and keen competition, all highly evolved and institutionalised.

Way back in the 1930's Kalki T.Sadasivam, founder and managing director of the Kalki organisation, combined his skills of creativity, enterprise and management to operate as a one man advertising agency! He not only procured advertisements for his magazine, but also helped advertisers to create them.

Sri T. Sadasivam was also a film-maker who produced two outstanding films 'Shakuntala' and 'Bhakta Meera' both of which made history. His wife Smt. M.S. Subbulakshmi acted in lead roles in both these films. Sri Sadasivam was also a great connoisseur of music and it is he who moulded Smt. M.S. Subbulakshmi into an artiste of supreme greatness.

Sri. T. Sadasivam was an ardent admirer and follower of Rajaji. In Rajaji's own words : "Sadasivam is to me, what Lakshmana was to Rama."

In fond memory of Sri. T. Sadasivam, who passed away in November 1997, the Kalki Sadasivam Memorial Trust has been created in 1999 with an initial corpus donation of Rs. one lakh by Sri Shankar Ramachandran (USA).

One of the objectives of the Trust is to confer awards on outstanding advertisements. Each Kalki Sadasivam Award carries a cash prize of Rs.10,000 and a citation. The first award under this scheme was given in February 2000 to an outstanding advertisement that appeared in 1999.

For the year 2000, we invite entries from among advertisements published in newspapers and magazines (both Tamil and English) during the period 1 Jan. 2000 to 31 Dec. 2000.

The criteria for the selection of the award will be creativity, aesthetic and social consciousness combined with marketing strategy.

A panel of judges will select the best advertisements from the entries received.

Nominations / entries should reach the Trust office before 31 January 2001, in the form of a letter, with the appropriate clipping or artwork enclosed.

The award will be given at a function to be held sometime in February or March 2001.

The activities of the Trust are expected to expand and in the years to come, awards will be given to TV spots and other forms of advertising.

Address :
Kalki Sadasivam Memorial Trust
1, Fifth Street, Lake Area,
Nungambakkam, Chennai - 600 034.

K. Rajendran
Managing Trustee
Kalki Sadasivam Memorial Trust

• யசோதா



சாராயம் ~~சமூகம்~~ காக்கும் போலீஸ்!



• மேரி

கோஷங்கள் விண்ணைப் பிளந்தன. "சமூகம் காக்கப் போலீஸா சாராயம் காக்கப் போலீஸா?''; ''கைதுசெய் கைதுசெய், கொலையாளிகளைக் கைது செய்!"

திருவள்ளூரிலிருந்து பீமன்தோப்பு செல்லும் சாலையில் விரைந்து கொண் டிருந்த் நமது ஆட்டோவைத் தடுத்து நிறுத்தியது ஒரு போலீஸ் ஜீப். "ஊர்வலம் வருது, ஓரம்கட்டுங்க!"

அடுத்த சில நிமிஷங்களில், பத்து, இருபது என்று தெரியத் தொடங்கிய தலைகள் பலநூறாய்ப் பெருகி, கிட்டத்தட்ட ஒரு கிலோமீட்டர் நீளத்திற்குத் தெரிந்தன.

அத்தனையும் பெண்கள். 'பெண்கள் இணைப்புக்குழு'வைச் சேர்ந்தவர்கள். ஒவ்வொருத்தர் முகத்திலும் ஆவேசம் கொப்பளிக்க, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கிப் போய்க் கொண்டு இருந்தது ஊர்வலம்.

ஊர்வலத்தைக் கடந்து பயணத் தைத் தொடர்கிறோம். ஊருக்குள் நுழைவதற்கு முன் சற்று ஒதுக்குப் புறமாக இருக்கும் சுடுகாடு கண்ணில் படுகிறது. எரிக்கப்பட்ட இரண்டு சிதை களிலிருந்து இன் னும் வெளி யேறிக் கொண்

டிருந்த புகை காற்றுக்குக் கட்டுப்பட்டு மேற்கு நோக்கிப் போய்க் கொண்டிருக்க, நம் இதயம் கனத்து விடுகிறது. இந்த ஊருக்குச் சுடுகாடு வேண்டும் என்று போராடிய பெண்களில் இந்திராணி, ரத்தினம்மாள் இருவர். போராடிப் பெற்ற அதே மயானத்தில்தான் அவர்கள் உடல் எரிந்து அடங்கிக் கொண்டிருந்தது.

என்ன கோரமான முடிவைச் சந்தித்திருக்கிறார்கள் இந்த இருவரும்? நாள் முழுக்க உழைத்தால் கிடைக்கும் அறுபது ரூபாய் அற்பக் கூலியை அப்படியே அபகரித்துக் கொள்ளும் கள்ளச்சாராயக் கும்பலைத் தட்டிக் கேட்ட குற்றத்திற்காக பெண்கள் என்ற அனுதாபம் கூட இல்லாமல் அடித்துப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்!

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இந்த இருவரையும் பறி கொடுத்துவிட்டு தவித்துக் கொண்டிருக்கிறார் ஒரு பெண். இவர், இந்தக் கிராமத்தில் கடந்த பத்தாண்டுகளாகச் செயல்பட்டு வரும் கிராமச் சங்கத்தின் தலைவி யசோதா. படுகொலை செய்யப்பட்ட அறுபது வயது ரத்தினம்மாள் இவரின் சகோதரி. இருபது வயது இந்திராணி, ஒரே மகள்.

உறவினர்களும் காவல்துறையினரும் சூழ்ந்திருக்க மண் தரையில் துவண்டு படுத்திருந்த அவரைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. பத்திரிகை என்றதும் "அய்யா இந்த அநியாயத்தை நீங்க எல்லாரும் தட்டிக் கேளுங்கய்யா சாமி..." என்று மார்பில் அடித்துக் கொண்டு கதற ஆரம்பித்தார்.

"இந்தக் கிராமத்திலே இருக்கிற இருநூறு குடும்பங்களும் விவசாயக் கூலிங்கதான். யாருக்கும் ஒரு பொட்டு நிலம் கிடையாது. தினசரி வேலை செஞ்சாத்தான் சாப்பாடு. இந்த நிலைமையில்தான் சுயநிதி உதவிக் குழு அமைச்சோம். ஒவ்வொருத்தராக சேமிப்பை எடுத்து உதவிக்கிட்டோம்... ஆனா என்ன பிரயோஜனம்? வாங்குகிற கூலியில் அம்பது ரூபாய்க்குச் சாராயம் குடிச்சிட்டு வந்து பத்தையோ இருவதையோ வீட்ல கொடுத்தா வீட்ல இருக்கிற பொம்பளை எப்படி சோறு ஆக்குவா? அப்பத்தான் முடிவு செஞ்சோம்... சுயநிதி உதவிக் குழு இருந்தா மட்டும் போதாது கள்ளச் சாராயத்தை முதலில் ஒழிக்கணும்னு. அதுக்காக எவ்வளவோ போராடினோம். பஸ் வசதி, சாலை வசதி, சுடுகாடு வசதி இப்படிப் பல விஷயங்களில் வெற்றி பெற்ற எங்கள் போராட்டம் கள்ளச் சாராய விஷயத்தில் மட்டும் சாமானியமாக வெற்றி பெறலை. ஆனா ஒரு வழியா பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் ஊர்க் கட்டுப்பாடு போட்டு பீமன் தோப்பில் சாராயம் இல்லாம ஆக்கிட்டோம். எங்களைப் பார்த்திட்டு சுத்துபட்டுல இருந்த பல கிராமங்கள் எங்க மாதிரியே போராடி கட்டுப்பாடு போட வெச்சாங்க... ஆனா பக்கத்தில இருக்கிற குரங்குதண்டலம் கிராமத்தில் கட்டுப்பாடு போட முடியலை, ஏன்னா அங்கு பல பேரு இதை குடிசைத் தொழிலாட்டம் செஞ்சுகிட்டு இருந்தாங்க. எங்க ஊர்க் கட்டுப்பாட்டை மீறி உள்ள வரவும் முடியாம எங்க ஊர் எல்லையிலே வெச்சு சாராயத்தை விற்க ஆரம்பிச்சாங்க. இதனால எங்க நிலைமை 'பழைய குருடி கதவைத் திறடி'ன்னு ஆயிடிச்சு. எல்லாரும் பழையபடி குடிச்சிட்டு வர ஆரம்பிச்சாங்க. ஊர் பொம்பளைங்க எல்லாம் என் கிட்ட வந்து 'நீ என்ன தலைவி'ன்னு கோவிச்சுக்கிட்டாங்க. எல்லாரோட கோபமும் என்னை உசுப்பேத்தி விட்டுடிச்சு. நானே நேரில் போய் சாராயம் விக்கிற இடத்தில் சத்தம் போட்டிட்டு வந்தேன். ஒரு தடவை இல்லை... மூணு தடவை. ஒரு பிரயோஜனமும் இல்லை. இவங்களை ரெண்டுல ஒண்ணு பார்த்துப்புடுவோம்னு முடிவு செஞ்சேன்.

ஏழாம் தேதி சாயங்காலம் ஆறரைமணிக்குச் சாராயம் விக்கிற இடத்துக்குப் போனேன். கோபம் தாங்க முடியலை. சாராயக் கேனை கீழே தள்ளிவிட்

'பெண்கள் இணைப்புக்குழு' ஃபெசிலிடேடர் ஷீலாவிடம் பேசினோம்...

'பெண்கள் இணைப்புக்குழு' என்றால் என்ன?

இது ஒரு அரசைச் சாராத சேவை அமைப்பு. கிராமப்புற பெண்களுக்கிடையே சுயநிதி உதவிக் குழுக்களை உருவாக்கிக் கொடுத்த தத்தம் உரிமைகளுக்காகப் போராடக் கற்றுக் கொடுக்கிறது இந்த அமைப்பு.

போராட்டத்தில் இரண்டு உயிர்கள் பலியாகிவிட்டதே...

உயிர்கள் பலியாகிவிட்டது உண்மை. ஆனால் அதற்குக் காரணம் போராட்டம் அல்ல. காவல்துறையின் அலட்சியமும், ஊழலும் தீயசக்திகளுக்குத் துணைப்போவது தான்!

டேன். அவ்வளவுதான். என் தலையிலே ஒரே அடி, இரும்பு பைப்பாலே. மயங்கி விழுந்திட்டேன். நினைவு போயிடுச்சி. திரும்ப நினைவு வந்தப்போ என் மகளையும் அக்காவையும் பிணமாகக் கொண்டு வந்து போட் டிருந்தாங்க. ஊர்காரங்களோடு சேர்ந்து என்னைத் தேடி வந்த ரெண்டு பேரையும் ஒரு பெரிய கும்பல் மறைஞ்சிருந்து வீச்சரி வாளால் வெட்டியிருக்கு! என் கண்மணிக்கு வர்ற வருஷம் கல்யாணம் பண்ணிப் பார்க் கணும்னு ஆசைப்பட்டேனே, ஐயோ... இப்ப எல்லாமே முடிஞ்சு போச்சே" என்று கதறும் யசோதாவைத் தேற்ற முடியாமல் திணறினோம்.

கடந்த ஜூன் மாதம் வழுதிகைமேடு கிராமத்தில் கள்ளச்சாராய வியாபாரிகளால் சொக்கம்மா என்ற பெண்மணி தாக்கப்பட்டபோது அதைக் கண்டித்து பொது கூட்டத்தில் பேசியிருக்கிறார் யசோதா. "ஆனால் என் வீட்டிலேயே இதே மாதிரி ரெண்டு பேரை பலி கொடுப்போம்னு கனவுலேயும் நினைக்கலே" என்று புலம்புகிறார்.

யசோதா கணவனை இழந்தவர். கடந்த பதினைந்து ஆண்டுகளாகத் தனியொரு மனுஷியாக ஊருக்கு உழைத்துக் கொண்டு இருக்கிறார். "இதுக்கெல்லாம் நான் அசந்திடப் போறதில்லை... என் உயிர் இருக்கும் வரை போராடிக் கிட்டுத் தான் இருப்பேன்!" என்று அவர் கண்ணீரைத் துடைத்துக் கொண்ட போது நமது கண்கள் கலங்கின.

* விஜூ



யசோதா தாக்கப்பட்டதை நேரில் பார்த்திருக்கிறார், அங்கு ஆடு மேய்ந்து கொண்டிருந்த கங்கையன் என்ற இளைஞர். "இந்த ஊரு விவசாயிங்களுக்குத்தான் காலம் காலமா உழைக்கறோம்... பலபேரு கிட்ட டிராக்டர் இருக்கு... குத்துயிரும் குலை உயிருமா கிடக்கிறவங்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக டிராக்டர் கேட்டா தர முடியாதுன்னு சொல்லிட்டாங்க அத்தனைபேரும்!" என்று ஆவேசப்படுகிறார் கங்கையன்.

"அம்மா கொண்டுவந்து கொடுக்குற கூலியிலே இரண்டு வேளை வயிறாறச் சாப்பிட்டுக்கிட்டு இருந்தோம்... நாங்க பட்டினி கிடக்கக் கூடாதேன்னு அறுபது வயசிலேயும் அம்மா கஷ்டப்பட்டிச்சு... இனிமேல் யாரை அம்மான்னு கூப்பிடுவேன்?" என்று கதறுகிறார் பலியான ரத்தினம் மாளின் மகள் மேரி.

சாராயம் காய்ச்சி விற்பவரைப் பற்றி புகார் எழுதிக் கொடுத்தால், நடவடிக்கை எடுப்பதற்கு பதில், அந்தப் புகாரின் நகலை சாராய வியாபாரிகளிடம் காட்டி, பேரம் பேசி, மாமூலை உயர்த்திக் கொள்ளும் உத்தியாகவே புகார்களைப் பயன்படுத்தி வந்திருக் கிறார்கள் அங்குள்ள மது ஒழிப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு போலீஸார். மேற்கொண்டு, புகார் கொடுத்த வர்களை வியாபாரிகளிடம் காட்டிக் கொடுத்து விரோதத்தை வளர்த்து வந்திருக்கிறார்கள்.

ராமபுரத்தைச் சேர்ந்த பாப்பா என்ற பெண்மணி சொல்கிறார் – "ஒரு தடவை நானும் என் ஊரில் இருக்கும் பத்து பெண்களும் சேர்ந்து சாராயம் காய்ச்சுவதற்காகக் கொண்டு வரப்பட்ட பதினான்கு மூட்டை வெல்லம், மூன்று மூட்டை சல்ஃபேட் ஆகிய வற்றைப் பிடித்துக் கொடுத்தோம், அதை அப்படியே மறைத்துவிட்டார்கள் போலீஸார்!"

பீமன்தோப்பில் இப்போது குவிந்து கிடக்கிறார்கள் போலீஸார். ஏழையின் கண்ணீரில் தெரிகிற 'மாமூல்'ஐ எண்ணிக் கொண்டிருப்பவர்களைப் பார்க்க பார்க்க எரிச்சலாக வந்தது.

சுட்டு

படங்கள் : **வெங்கடேஷ்**

என் நண்பர் ராமானுஜத்தைப் பார்க்க திருவல்லிக்கேணி சென்றிருந்தேன்.

நான் போன சமயம் அவர் சாய்வு நாற்காலியில் 'முக்கால்-படு' போஸில் படுத்தபடி கடம் வாசித்துக் கொண்டிருந்தார். ஆடிட்டர் ஜெனரல் ஆபீஸிலிருந்து ரிட்டயர் ஆனவர். பொழுதுபோக்காக கடம் வாசிப்பார்.

ஆபீஸில் 'கடங்கார ஆபீசர்' என்று பெயர்.

எப்போதாவது அவர் கடம் வாசிக்கப் போவதுண்டு.

'கடமும் கற்று மற' என்றுகூட ஒரு பொன்மொழி இருக்கிறதல்லவா? அதுமாதிரி அவர் அந்த வித்தையை மறந்து நீண்ட நாளாயிற்று.

ஆனாலும் இப்போது கடத்தை - அதுவும் ஈஸி சேரில் படுத்த நிலையில் தடவிக் கொண்டிருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டவனாக அவர் அருகில் போய் உட்கார்ந்தவுடன்தான் தெரிந்தது - அவர் தடவிக் கொண்டிருப்பது அவரது சொந்த வயிற்றை என்று.

அவரது மனைவி உள்ளேயிருந்து காப்பியோ எதுவோ அவருக்குக் கொண்டு வந்து கொண்டிருந்தாள்.

என்னைப் பார்த்ததும் சாதாரணமாக 'இரண்டு வாங்கோ' வரவேற்பு தருவது வழக்கம்.

அன்றைக்கு ஒற்றை 'வாங்கோ' தான். மாமி உற்சாகமில்லாமலிருந்தாள்.

"மாமாவுக்கு இரண்டு நாளாக ஒரே வயித்தெரிச்சல்" என்றாள் மாமி.

"ஓ! அதான் படுத்துண்டிருக்காரா? என்ன பண்றது?" என்றேன்.

"முந்தா நாள் மிளகாய் பஜ்ஜி போடச் சொன்னார். நன்னாயிருந்ததுன்னு ஏழெட்டுகூடவே சாப்பிட்டுட்டேர்" என்றாள்.

' கூடச் சாப்பிட்டது ஏழெட்டு என்றால், மாமூலாகச் சாப்பிடுவது எத்தனையோ' என்று நினைத்துக் கொண்டேன்.

"ஓ! மிளகா பஜ்ஜியா? ராமுவுக்கு எப்பவும் ரொம்பப் பிடிக்குமே," என்றேன்.

"இத்தனை வருஷமா சாப்பிட்டிருக்கேன். ஒண்ணும் ஆகலையே" என்றார் ராமு.


'எல்லாத்துக்கும் காலம் கனிந்து வரணுமில்லையா' என்று நினைத்துக்கொண்டேன்.

"உங்க டாக்டர் என்ன சொல்றான்?"

"என்னத்தைச் சொல்றான். 'டேய்! வயித்தை எரியறது. உடனே வாடா கழுதே"ன்னு காத்தாலே சொன்னா மத்தியானம் மூணு மணிக்கு வரான் - பீத்தக் காரைப் போட்டுண்டு."

அவருடைய மைத்துனன் டாக்டராக இருக்கிறான். ஒரு சராசரி எம்.பி.பி.எஸ். அவரிடம் ரொம்ப மரியாதை. ஆனால் வில்லிவாக்கத்திலிருந்ததால் சற்று முன்னே பின்னே

பச்சை மிள



தான் விஸிட் இருக்கும்.

அப்படியே வந்தாலும் வியாதியைத் தவிர மற்ற எல்லா விஷயங்களையும் ரெண்டு மூணு ரவுண்டு பேசிவிட்டு தான் போகிற சமயம் சுருக்கமாக இரண்டு நிமிஷம் விசாரித்துவிட்டு அவனுக்குத் தெரிந்த மருந்தை எழுதிக் கொடுத்துவிட்டுக் கையைக் குலுக்கிவிட்டு 'உங்களுக்கு ஒண்ணும் இல்லை' என்று சொல்லிவிட்டுப் புறப்படுவான். பாசம் வேறு, திறமை வேறு அல்லவா?

'குடும்ப டாக்டர்' என்றால் அசல் குடும்ப டாக்டர்.

அதில் நன்மைகளும் உண்டு. விசிட்டிங் ஃபீஸ் கிடையாது. வரும்போது ஞாபமாக பப்பாளி, ஏழெட்டு முருங்கைக் காய், கார்த்திகை பொங்கல் போன்ற நாட்களில் அக்காவுக்கு சீர் இதெல்லாமும் கொண்டு வருவான்.

வேறு எந்த டாக்டர் இப்படியெல்லாம் உழவர் சந்தைப் பொருளைக் கொண்டு வந்து தருவார். அதுவும் பாசத்தோடு.

பும் கேஸைத்தான் ஸ்பெஷலிஸ்டுகள் முகர்ந்து பார்ப்பார்கள்.

இல்லாவிட்டால் அவர்களுக்கு ஸ்பெஷலிஸ்ட் என்ற பெயர் எதற்கு? அத்தனை ஃபீஸ் ஏன்?

"உங்க மைத்துனனை எழுதித் தரச் சொல்லுங்க. டாக்டர் கொண்டல் ராமன்தான் ஸிடியிலே இப்போ பேர்போன காஸ்ட்ரோ என்ட்ராலஜிஸ்ட். நர்ஸிங் ஹோமே இருக்கு. மகா சௌகரியமாம்."

காய் பஜ்ஜி

பாக்கியம் ராமசாமி



அக்காள் விம்மிய குரலில் டாக்டர் தம்பியிடம் "ஏதானும் கெட்டிக்கார டாக்டர் இருந்தா நீதான் கூட்டிண்டு போயேன். என்னமோ கைனகாலிஜிஸ்ட் ஜைனகாலஜிஸ்ட் அப்படீங்கறாங்களே," என்றாள்.

நண்பர் பல்லைக் கடித்துக்கொண்டு "அது கேஸ்ட்ரோ என்ட்ராலஜிஸ்ட்! பீடையே. கைனகாலஜிஸ்ட் இல்லே. அதெல்லாம் பொம்மனாட்டி சமாசாரம்" என்றார் கோபமாக.

"மூக்கைப் பிடிக்க மிளகாயைத் தின்னுட்டு மனுஷாள் மேலே எரிஞ்சு விழறது. நீங்க எந்த மாஜிஸ்திரேட்கிட்டே போனா எனக்கென்ன? காப்பி டம்ளரை வெடுக்கென்று வைத்து விட்டு உள்ளே போய்விட்டாள்.

அல்சராலே கோபம் வருதா, கோபத்தாலே வயித்துக்கு அல்சர் வருதா என்கிறது முட்டையிலிருந்து கோழியா, கோழியிலிருந்து முட்டையா என்கிற சர்ச்சை மாதிரி.

நண்பரின் மனைவி வாயை விட்டு உதவி கேட்டு விட்டதால் நான் குடல் மருத்துவ சம்பந்தமான இரண்டொரு டாக்டர்களைப் பற்றி யோசித்தேன்.

யாராவது டாக்டர் சிபாரிசு செய்து அனுப்

உள்ளேயிருந்து நண்பரின் மனைவி அவசரமாக வந்தாள். "நர்ஸிங் ஹோமெல்லாம் வேணாம். கொட்டிக் கொடுக்கறதுக்கு யார் இங்கே சேர்த்து வெச்சிருக்கா. ஆபரேஷன் ஒபரேஷன்னு .வந்த கேஸை அவாள் விடமாட்டா."

வயிற்றைத் தடவிக்கொண்டே (எரிச்சல் சற்றுத் தேவலாம் போலிருக்கிறது.) நண்பர் "இவள் சொல்றது நியாயம்தான்" என்றார்.

நண்பர் நெருக்கமானாலும் அவர் வீட்டுப் பொருளாதாரக் கொள்கையில் நான் தலையிடுவது சரியில்லை என்று நினைத்துக் கொண்டேன். "கொஞ்சம் அப்பப்போ ஐஸ்வாட்டர் சாப்பிட்டுண்டிரு. வொர்ரி பண்ணிக்காதே" என்று சொல்லிவிட்டுக் கழன்று கொண்டேன்.

நண்பரின் மனைவிக்கும் நான் புறப்பட்டது ரொம்ப ரிலீஃப் ஆக இருந்திருக்கும் போலும். இழந்த களை மீண்டிருந்தது.

பத்து நாள் கழித்து நான் மெரீனாவுக்குப் போயிருந்த சமயம், நண்பரை எட்டிப் பார்ப்போம் என்று கனகரங்கம் தெருவிலுள்ள அவர் வீட்டுக்குப் போனால் பச்சைக் கம்பிக் கதவில் பூட்டு தொங்கிக் கொண்டிருந்தது.

அடுத்தாற்போலிருந்த லாண்டரிக் கடையில் விசாரித்ததில், "ஆடிட்டரு, அவுங்க சம்சாரம் எல்லாருமா ஒட்டு மொத்தமா ஓரனூர் பொறப்பட்டுப் பூட்டாங்களே. ஐயாவுக்கு ஏதோ வவுத்து ட்ரபிளாமே."

"ஓரனூரா?"

"இன்னாவோ இயற்கை வைத்தியமாமே. அங்கே ஆஷ்ரமம் இருக்குதாம். மாமி வெலாவாரியா சொல்லி, வூட்டை ஒரு கண் பாத்துக்கோன்னுட்டுப் போனாங்க."

விவரம் சொல்லக்கூடிய பையனாக இருக்கிறானே என்ற திருப்தியுடன் கிளம்பினேன்.


வீட்டுக்குப் போன கொஞ்ச நேரத்தில் ஒரு ட்ரங்க் கால்.

• • • • • • • • • • • • • • • • • • •

"வானவில்லில் எத்தனை கலர் இருக்கு?"

"நான் இன்னும் அந்தப் படம் பார்க்கல சார்."

— பர்வதவர்த்தினி



என் மனைவி பயப்பிராந்தியுடன் "யாரோ, பொம்மனாட்டி பேசறா. அலமேலுவாம்" என்று கையில் பாம்பைப் பிடித்திருந்தவள் போல் போனைச் சட்டென்று என் கையில் கொடுத்து விட்டு சுமார் மூன்றடி தூரம் விலகி நின்று கொண்டாள்.

"அலமேலு யார் தெரியலையா, ராமானுஜத்து ஒய்ஃப் அலமேலுடி" என்று டெலிபோனை வாங்கி வயிற்றில் மிகுந்த கலக்கத்துடன் பேசினேன்.

"மிஸஸ் ராமானுஜமா?"

"ஆமாம். நான்தான் பேசறேன். ஓரனூரிலிருந்து பேசறேன். நீங்க கொஞ்சம் வந்தாப் பரவாயில்லே." மாமியின் குரல் படபடத்தது.

"மாமாவுக்கு எப்படி இருக்கு?"

"அதுக்குத்தான் புறப்பட்டு வரச் சொல்றேன்."

"ஓரனூர்லே எங்கே?"

"ஓரனூர்லே இயற்கை சிகிச்சை ஆசிரமம் இருக்கே."

"ஆமாம்."

"உங்க நண்பர் உங்களைப் புறப்பட்டு வரச் சொல்றோர். அடி கொஞ்சம் எக்காச் சக்கமாப் பட்டிருக்கு. பயப்படறோர்."

"அடியா?"

அடி, நுனி என்று பேசுவதற்குள் டெலிபோன் டிஸ்கனெக்ட் ஆகிவிட்டது.

உடனே புறப்பட்டுச் சென்றேன்.

இயற்கை சிகிச்சை ஆசிரமத்தை ஓரனூரில் கண்டுபிடிப்பது அப்படி ஒன்றும் சிரமமாக இல்லை.

ஊர் பூரா எந்தப் பக்கம் பார்த்தாலும் அம்பு அம்பாகப் போட்டு, ஆசிரமத்துக்குப் போகும் வழி காட்டப்பட்டிருந்தது. 'ஆல் ரோட்ஸ் லீட் டு ஆஸ்ரமம்.

உடம்பு பூராவும் துணி சுற்றப்பட்டு எகிப்திய மம்மி மாதிரி நண்பர் காட்சி அளித்தார்.

கண்கள் திறந்திருந்ததால் நான் பயப்படவில்லை.

நண்பரின் மனைவி அழுதுகொண்டே, "தெய்வம் போல் வந்தீர். வேன் வெச்சு மெட்ராஸ் அழச்சிண்டு போயிடலாம். என்னமோ என் தாலி பாக்கியம் உசிரு பிழைச்சி இருக்கோர்" என்றாள்.

"என்ன ஆச்சு? ஏன் இத்தனை கட்டு?"

நண்பர் கட்டுப் போட்ட கையைத் தூக்கி ஆசீர்வதிப்பதுபோல் மனைவியின் பேச்சை அமர்த்தினார்.

வேன் ஒன்று பேசி மெட்ராசுக்கு நண்பரையும் மனைவியையும் கொண்டு வந்து சேர்த்தேன்.

பத்திரமான இடத்துக்கு வந்தபின் மாமி விவரித்தாள்.

"இயற்கை ஆசிரமத்திலே நல்லாத்தான் வைத்தியம் பண்ணினார்கள். போன ரெண்டாம் நாளே இவரோட தொப்பை குறைஞ்சு போயிட்டுது. அங்கே அடுப்பே கிடையாது."

"பின்னே எப்படி சமையல்."

"எல்லாமே சமைக்காத சாப்பாடுதான். விதம் விதமாப் பச்சைக் காய்கறி. ஊற வெச்ச அவல். அப்புறம் பச்சைக் காய்களை அரைச்சு எலுமிச்சம் பழம் வெல்லம் போட்டு ஜூப்பு தினுசுகள். ஊற வெச்ச பருப்பு. மூணு பேரைத் திருடங்கன்னு நினைக்கணுமாம்."

கட்டுடன் படுத்திருந்த நண்பர் நாலு விரலைக் காட்டினார்.

"ஆமாம். மாமா சொல்றாப்பலே நாலு வெள்ளைத் திருடர்களை உள்ளே விடக்கூடாதாம்."

"வெள்ளைத் திருடர்களா?"

"ஆமாம். அரிசி, சர்க்கரை, பால், உப்பு. இந்த நாலு பொருளும் மருந்துக்குக்கூட சாப்பாட்டிலே இருக்கக்கூடாது. ஆசிரமத்திலே துளியும் இதெல்லாம் கிடையாது.

"அதெல்லாம் சரி. மாமாவுக்கு எப்படி அடிபட்டது?"

"அவர்களைச் சொல்லிக் குத்தமில்லே. வாரம் பூரா ட்ரீட்மெண்ட்டுக்கு, எங்களுக்கு சாப்பாட்டோட சேர்த்து வெறுமே இரு நூறே ரூபா. யார் மாமா இந்தக் காலத்திலே இவ்வளவு சீப்பா சார்ஜ் பண்ணுவா?"

"ஆச்சரியமாயிருக்கு."

"எல்லாம் நன்னாத்தான் நடந்தது. எவ்வளவோ தேவலை ஆயிட்டுது. வயித்திலே துளியூண்டு எரிச்சல்தான் இருந்தது.

ஆனால் தினமும் அடுப்பிலே சமைக்காத சாப்பாடாச் சாப்பிட்டுச் சாப்பிட்டு நாக்கு செத்துப் போச்சு. ஊருக்கு புறப்படலாம்னு இருந்தப்போ 'இன்னும் ஒரு வைத்தியம்' விட்டுப் போச்சு. அதையும் பண்ணிக்கொண்டு போயிடுங்"கோன்னார் அந்த டாக்டர்.

அப்பத்தான் கேட்டார், 'புத்து மண்ணு வைத்தியமா, வாழை இலை வைத்தியமா. எது வேணும்'னு.

'மண்ணு கின்னு எதுக்கு. ஒடம்பு பூரா மண்ணைக் குழைச்சிப் பூசி வெய்யிலிலே நிக்க வெச்சுடுவா'ன்னு தெரிஞ்சது.

"வாழை இலை வைத்தியமே பண்ணிக்கிறேன்னு மாமா சொல்லிட்டேர். நான்தான் சொல்லச் சொன்னேன். எல்லாம் நன்னாத்தான் நடந்தது. ஆனால் போறாத வேளை. யாருக்கும் இப்படி நடந்ததே இல்லே. ரூட்டுலே புதுசா வந்திருக்கான் டிரைவர்."

"அடடே! மாமா மேலே பஸ்கிஸ் ஏறிட்டுதா?"

"ஊஹூம். மாமாவைப் பஸ்ஸிலே ஏத்திட்டான்."

"என்ன சொல்றேள்?"



"ஆறிப்போன இட்லியும் ஊசிப் போன சட்னி சாம்பாரும்தான் ஸார் இருக்கு. பரவாயில்லையா?"

"பரவாயில்லே கொண்டாந்து வைய்யி... மாவாட்ட நினைச்சு வர்றவன் சுடச்சுடவெல்லாம் எதிர்பார்க்க முடியுமா?"

— உ. ராஜாஜி

"அதையெல்லாம் ஏன் சொல்றே?" என்பது மாதிரி நண்பர் கையைக் கையைச் சாடை காட்டினார்.

ஆனால் மாமி சொன்னாள்.

"மாமாவைப் படுக்க வெச்சு உடம்பு பூரா வாழை இலையைச் சுத்தோ சுத்துன்னு சுத்தி வாழை பட்டை நாராலே இறுக்கக் கட்டி வெய்யிலிலே உருட்டி விட்டுட்டாங்க.

"மூணு மணி நேரம் வெய்யிலிலே அப்படியே கிடக்கணும். உள்ளே வியர்த்துக் கொட்டி ஒடம்பிலிருக்கிற கசண்டெல்லாம் வந்துடுமாம்.

"மாமா வெய்யிலிலே வாழை இலைக் கட்டு மாதிரி ரோடுலே காய்ஞ்சிண்டிருந்தோர்.

"நான் சும்மா இருக்கப்படாதா. தலை வெய்யிலிலே காயறதேன்னு ஒரு பச்சைத் துண்டை மாமா தலையிலே கட்டி வெச்சேன். 'அம்மா, நீங்க வந்து ஆகாரம் பண்ணவாமே'ன்னு விடுதிக்காரர் கூப்பிட்டதும் உள்ளே போயிட்டேன்.

"எல்லாம் பத்து நிமிஷத்திலே நடந்து போச்சு.

அந்த பஸ் ரூட்டுலே எந்தக் கட்டால போற புது டிரைவரும், கண்டக்டருமோ பஸ்ஸை ஓட்டிண்டு வந்திருக்காங்க. முன்னாலே போன வாழைப்பாடி ரூட்டுலே, ரோடுலே அங்கங்கே வாழை இலைக் கட்டைப் போட்டு வெச்சிருப்பா. பக்கத்திலேருக்கற சேலம் டவுனுக்கு அதுகளையெல்லாம் கண்டக்டரே எடுத்து டாப்புலே போட்டுண்டு அந்தந்த இடத்திலே டெலிவரி பண்ணிடுவாளாம்.

"வாழை இலைக் கட்டை வெச்சிண்டு, பஸ்ஸு எப்போ வரும்னு காத்திருக்க மாட்டாளாம். ரோடுலே கொண்டு வந்து கடாசிட்டா, பஸ்காராளே டாப்புலே எடுத்துண்டு போய்ச் சேர்த்துடுவா. வாழைக் கட்டிலேயே அடையாளம் வெச்சிருப்பாளாம். கோடவுன் காரர் இன்ன கட்டு இன்ன தோட்டக்காருடையது என்று புரிந்துகொண்டு விடுவாளாம்."

"ஓ!" என்று ஆச்சரியப்பட்டேன்.

"புது கண்டக்டர் என்ன பண்ணியிருக்கான், ரோடுலே வாழை இலைக் கட்டாட்டமிருந்த மாமாவைத் தூக்கி டாப்புலே வீசிண்டு, ரைட் குடுத்துட்டான்.

"மாமா பயந்து நடுங்கி ஆ...ஊ...ன்னு கத்தினாலும் பஸ் போட்ட சத்தத்திலே கண்டக்டர் காதுலேயே விழலை.

"டாப்புலே கடாசப்பட்ட மாமா, துள்ளித் துடிச்சதுலே பஸ் குலுக்கல்லே நகர்ந்து நகர்ந்து டமால்னு கீழே தொப்புனு விழுந்துட்டா.

"உடம்பு பூரா காயம். பஸ்ஸிலே வாழை நார் மாட்டிண்டு தரதரன்னு வேற ரொம்ப தூரம் இழுத்திண்டு போயிருக்கு.

கடைசியா ஏதோ ஸ்டாண்டுலே பஸ் நின்னு, அசல் வாழை இலைக்கட்டு ஒண்ணை ஏத்தறப்பதான் மாமாவைப் பார்த்திருக்கிறான் கண்டக்டர்.

"அப்புறம் பஸ்ஸைத் திருப்பி ஆசிரமத்துக்கே மாமாவைக் கூட்டிண்டு போய் செராய்ப்புக்கெல்லாம் உடம்பு பூரா புத்து மண்ணைத் தடவி... ஐயோ... ஐயோ... எரியறதே எரியறதேன்னு மாமா கத்தி... இந்த க்ஷணமே மெட்ராஸ் போகணும். என் மைத்துனன் வைத்தியமே எனக்குப் போதும். வயித்து எரிச்சலையாவது பொறுத்துக்கலாம். இந்த எரிச்சல தாளலையேன்னு கத்திக் கூப்பாடு போட்டு அப்புறம் தான் உங்களுக்குப் போன் போட்டுப் பேசச் சொன்னார். நீங்களும் தெய்வம் மாதிரி வந்தேள்."

வாசலிலே அவரது டாக்டர் மைத்துனன் கார் வந்து விட்டதற்கான அடையாளமாக பல விசித்திர ஒலிகள் கேட்டன.

"ஹாய்! மாமா! உமா சப்போட்டா குடுத்தனுப்பிச்சிருக்கா. கல்கண்டாட்டம் இருக்கு. சின்ன டிபன் பாக்ஸிலே சேலம் ஊசி மொளகான்னு ஒரு சின்ன சைஸ் பச்சை மொளகாய் குடுத்திருக்கா. காரம் எட்டு ஊருக்கு... ரொம்ப ஸ்பேஷலியா இருக்கு... ஆமாம். என்னாச்சு உங்களுக்கு. உடம்பு பூரா கட்டு?"

மாமாவால்தான் பேச முடியாதே.

மாமி ரீப்ளே மாதிரி நடந்த கதையைச் சொல்லி முடித்தாள்.

"இவ்வளவுதானே. கவலையே பட வேண்டாம்" என்று ஒரு துண்டுச் சீட்டில் பரபரவென்று ஒரு ஆயிண்ட்மெண்ட் பெயரை எழுதித் தந்தான். "பெரிய சைஸ் டியூபா ஏழெட்டு வாங்கிடுங்கோ. உடம்பு பூரா தாராளமாப் பூசிவிடுங்க."

கார் கிளம்பிப் போய்விட்டது.

நானும் "உடம்பைப் பாத்துக்கோ, மிளகாய் பஜ்ஜி இனிமேல் வேணாம்" என்று சொல்லி விட்டுக் கிளம்பினேன்.

"பத்துத் தடவை சொல்லி விட்டுப் போங்கோ!" என்றாள் மாமி.

அவள் சொன்ன மரியாதைக்காக ஒரு இரண்டு தடவை, 'மிளகாய் பஜ்ஜியே வேணாம். மிளகாய் பஜ்ஜியே வேணாம்' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டேன். ●



சித்த மருத்துவத்தில் மூலிகைகள் கொண்டு செய்யப்படும் எந்த இயற்கையான மருந்துக்கும் பக்கவிளைவுகள் ஏற்படுவதில்லை என்பது உலகம் அறிந்த உண்மை. மூலிகைகளைக் கொண்டு தேயிலைகளில் மூலிகைகளைக் கலந்து நோய்களைத் தீர்க்கக்கூடிய வகையில் நான்கு விதமான டீகளை இப்போது நமது நாட்டில் அறிமுகப்படுத்தி உள்ளோம்.

ஹெல்த்தி தரும் ஹெர்பல் டீ



சன் டயா ஹெர்பல் டீ இது முதலில் ரத்தத்தை சுத்தம் செய்கிறது. ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை குறைக்கிறது. சர்க்கரை வியாதியால் ஏற்படும் கண் எரிச்சல், கால்வலி, தொண்டை வலி ஆகியவைகளைப் போக்குகிறது. இது தொடர்ந்து குறைந்த பட்சம் மூன்று மாதங்கள் உபயோகித்த பின்பு தான் படிப்படியாக ரத்தத்தில் சர்க்கரை அளவை குறைக்கும். ஒரு வருடத்தில் சர்க்கரை அளவை நார்மல் அளவுக்கு கொண்டு வந்து விடுகிறது. மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்படுவதால் எவ்வித பக்கவிளைவுகளையும் ஏற்படுத்தாது என்று உறுதியாகக் கூறுகிறோம். ஜீரண சக்தியை உண்டாக்கி நீண்ட காலத்திற்கு பாதுகாப்பு அளிக்கிறது. இதை எலுமிச்சை பழச்சாறு கலந்து எப்பொழுது வேண்டுமானாலும் குடிக்கலாம்.

சன் பாடி லைன் ஹெர்பல் டீ முதலில் உடலில் அதிகமான கொழுப்பை, ஊளைச்சதையை குறைத்து, சிறிது உடற்பயிற்சியுடன் உட்கொண்டு வந்தால் தசைகளை இறுக்கி உடலுக்கு ஆரோக்கியத்தை அளிக்கும். மூட்டுவலி, உடல் வலியை போக்குகிறது. உடலின் அளவை குறைப்பதுடன் இதை அருந்துவதால் எவ்வித பக்கவிளைவுகளும் ஏற்படாது.

சன் கப்புள் கேர் ஹெர்பல் டீ நமது உடலிலுள்ள விந்து அணுக்களை பாதுகாத்து இயற்கையான உணர்ச்சியை தூண்டும். உடலை பாதுகாப்பது மட்டுமல்லாமல் தாம்பத்ய வாழ்க்கைக்கும் நீண்ட உறவுக்கும், உடல் சூட்டை தணித்து இளகிய நிலையிலுள்ள விந்துவை இறுகிய நிலைக்கு மாற்றி உயிருள்ள உயிரணுக்களை உருவாக்கி குழந்தை பேறுக்கும் வழிவகுக்கும். இதை தொடர்ந்து உபயோகிப்பதால் எவ்வித பக்க விளைவுகளையும் ஏற்படாது.

சன் ப்ரெய்னி பவர் ஹெர்பல் டீ இது நமது உடலிலுள்ள நரம்புகளுக்கு வலிமை அளித்து மூளை வளர்ச்சிக்கும், ஞாபகசக்தி அதிகரிக்கவும் உதவுகிறது. அனைவரும் அருந்தக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு வகையான டீகளை அழகான பெட் ஜார்களில் அறிமுகப்படுத்தி உள்ளோம். உடனடியாக தேவைப்படுபவர்கள் எங்கள் முகவரியை தொடர்பு கொண்டால் எங்கள் செலவிலேயே விபிபி மூலம் அனுப்பி வைக்கிறோம் என்கிறார் ரவி ஃபிளான்டேஷன்ஸ் நிர்வாக இயக்குனர் அரிமா. N. ரங்கராஜன், MJF

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

CITY SUPER MARKET
1985, Trichy Road, Singanallur, Coimbatore - 641 005.
Phone : 0422 - 318564, 315740 E-mail : r-r-assoc@usa.com

SUN TEA GOLD
111-B, Hill Haven, Reillys Compound, COONOOR - 643 101
Phone : 0423 - 31205 Fax : 0423 - 32373 E-mail : sunteagold@usa.net

வியாபார விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன.

JBR

சென்னையில் சங்கீதம் வளர்ந்திருக்கும் அளவுக்கு சவுண்ட் சிஸ்டம் அமைக்கும் கலை வளரவில்லை. எத்தனையோ நல்ல கச்சேரிகள் மோசமான ஒலியமைப்பால் கெட்டுப் போகின்றன. ஒலிபெருக்கி அமைக்கும் வல்லுனர்கள் என்ன சொல்கிறார்கள் இது குறித்து...?


“இசைக் கலைஞர்களைக் கேட்டால் எங்களைக் குறை சொல்வார்கள். எங்களைக் கேட்டால் அவர்களின் போக்குக் குறித்து ஆதங்கப்படுவோம். அதேசமயம் இரு தரப்பினருக்குமே மற்றவரது ஒத்துழைப்பும், ஆதரவும் தேவை" என்று சுட்டிக் காட்டினார் சென்னையிலுள்ள பிரபல அரங்கம் ஒன்றில் சவுண்ட் என்ஜினியராகப் பணியாற்றும் ஒருவர்.

மியூசிக் அகடமி, நாரதகானசபா, மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் போன்ற பிரபல அரங்கங்களில் நிரந்தர ஒலியமைப்பாளர்கள் உண்டு. மாதச் சம்பளம் பெறும் ஊழியர்களாகவே இருக்கிறார்கள். இந்தக் காரணத்தினால் வெளிப்படையாக எதையும் பேசத் தயங்குகிறார்கள். அவர்களது ரசமான அனுபவங்கள் குறித்துக் கேட்டபோது "ஒவ்வொரு அரங்கிற்கென்றும் தனித்தனி சவுண்ட் சிஸ்டமும் அதை இயக்கும் நபர்களும் இருப்பதுதான் வழக்கம். இதை முதலில் மாற்றியவர் ஜேசுதாஸ். தன்னுடைய சொந்த சவுண்ட் சிஸ்டத்தைத்தான் தன் கச்சேரிகளுக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதை நிபந்தனையாகவே விதிக்கத் தொடங்கினார். எதற்காக அப்படிச் செய்தார் என்பது அவருக்குத்தான் தெரியும்! என்று கூறத் தொடங்கிய ஒரு சவுண்ட் என்ஜினியர் கூட டக்கென்று பேசுவதை நிறுத்திக்கொண்டு, 'தம் பெயரோ, புகைப்படமோ வெளியிட வேண்டாமே' என்றார்.

ஃப்ரீலான்ஸாக இசை நிகழ்ச்சிகளுக்கு மைக் செட் வைப்பவர்களைச் சந்தித்தோம்.

"பொதுவாக வயலினுக்கு மட்டுமே அதிக வால்யூம் தேவைப்படும். மற்ற வாத்தியங்களுக்குக் குறைவான வால்யூமே போதுமானது. என்றாலும் பல இசைக் கலைஞர்களும் தங்கள் கைவரிசை 'பலமாக' ரசிகர்களை அடைய வேண்டும் என்று ஆசைப்பட்டு தங்கள் மைக்கின் வால்யூம் பெரிதாக இருக்க வேண்டுமென்று கூறுவார்கள். கச்சேரியின் இடையே வால்யூமை அதிகரிக்கச் சொல்லி ஜாடை காட்டிக் கொண்டே இருப்பார்கள்.

"பல அரங்குகளில் எதிரொலி மிக பலமாகக் கேட்கிறது. 'பின் வரிசைகளுக்குக் கேட்க வேண்டுமே' என்று சிலர் மேடைக்கு அருகே நிறைய ஸ்பீக்கர்களை வைத்து விடுவார்கள். இதனால் முன் வரிசைகளில் உட்கார்ந்திருப்பவர்களுக்குக் காது கிழியும்! இதைச் சரிக்கட்டவும், எதிரொலியைத் தவிர்க்கும் விதமாகவும் அரங்கின் பின் வரிசைக்கருகே இரண்டு ஸ்பீக்கர்களை வைப்பது எங்கள் வழக்கம். இப்



• கோபி


• கண்ணன்

சவுண்ட் சிஸ்டம்: செப்பிடு வித்தை!



போது 'ஈக்வலைஸர் சிஸ்டம்' வந்து விட்டதால் இந்தப் பிரச்னை இல்லை.

"ஒரு கச்சேரி என்றால் அதற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்பே நாங்கள் அங்கு போய் விடுவோம். ஒலி அமைப்பை சரியாகத் தயார் செய்வதற்கு எங்களுக்கு ஒரு மணி நேரம் ஆகிவிடும். அரங்கில் குறைவான நபர்கள் உட்கார்ந்திருந்தால் எதிரொலி அதிகமாக இருக்கும். எனவே ரசிகர்கள் அதிக அளவில் வந்து சேர சேரத்தான் வால்யூமை அதிகமாக்குவோம். இதையெல்லாம் புரிந்து கொள்ளாது, சொன்னாலும் ஏற்காத, இசைக்கலைஞர்கள் அமையும் போதுதான் சிக்கல் உண்டாகிறது. எல்லாவற்றையும்விட முக்கியமாக, பாடகர்கள் அடி நெஞ்சிலிருந்து நல்ல மூடோடு பாடினால்தான் கச்சேரி எடுபடும். இல்லையென்றால் எங்கள் பங்கு எவ்வளவு சிறப்பாக இருந்தாலும் கச்சேரி பரிமளிக்காது" என்றார் ரமேஷ். பல முன்னணி இசைக் கலைஞர்களின் நிகழ்ச்சிகளுக்கு மைக் ஏற்பாடு செய்திருப்பவர்.



"**ப**ழைய பாடகர்கள் எங்களைப் பொதுவாகக் குறை சொல்ல மாட்டார்கள். எம்.எஸ். அம்மாவுக்குக் கூட பல கச்சேரிகளுக்கு மைக் செட் அமைத்திருக்கிறேன். 'சௌகரியமாக இருந்தது' என்று சொல்லி விட்டுப் போனார். நிறைவாக இருக்கும். எம்.எல்.வி., பாலமுரளி கிருஷ்ணா ஆகியோரெல்லாம் கூட ஒரு வார்த்தை என்னைத் தவறாகக் கூறியதில்லை. ஆனால் சமீபத்தில் மியூசிக் அகடமியில் ஒரு பிரபல வாத்திய இசைக் கலைஞரின் நிகழ்ச்சி. கச்சேரி முடிந்ததும் என்னிடம் வந்து "என்னை சாவடிச்சுட்டீங்களே. மூச்சை விட்டே மாரை வலிக்குது. இனிமே உங்க சங்காத்தமே வேணாம்" என்றார். "சந்தோஷம்" என்றேன்."– இப்படிச் சொல்பவர் கோபி.

"கலைஞர்களோ ஒலியளவு அதிகம் வேண்டும் என்று கேட்கிறார்கள். ரசிகர்களின் கோணத்திலிருந்துப் பார்த்தால் சற்றே கம்மி வால்யூம்தான் நல்லது. இந்தப் பிரச்னையிலிருந்து விடுபட நான் செய்வது இதுதான்: என்னைப் பாடகர்கள் ஏற்பாடு செய்தால் அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ற மாதிரியும், சபாக்காரர்கள் ஏற்பாடு செய்தால் ரசிகர்களுக்கு ஏற்ற மாதிரியும் மைக்கை அட்ஜஸ்ட் செய்து விடுவேன்!

"சில வித்வான்களுக்கிடையே ஈகோ மோதல்கள் உண்டு. இதனாலேயே எங்கே மைக் வைப்பது, யாருக்கு அதிகம் வால்யூம் வைப்பது என்பதில் சிக்கல் தொடங்கும். ஒரு பிரபல வயலின் வித்வான் சில பாடகர்களுக்குப் பக்க வாத்தியம் வாசிக்கும்போது, பாடகருக்கு இடதுபுறத்தில் பக்கவாட்டில் உட்கார மாட்டார். அப்படி மைக் வைத்தால் கோபித்துக் கொள்வார். பாடகரோடு அவரும் சமமான வரிசையில்தான் உட்காருவார்.

"இந்தத் துறையில் வேறு சவால்களும் உண்டு. ராதாவுக்குக் கொஞ்சம் 'பேஸ் வாய்ஸ்.' ஜெயலட்சுமிக்குக் குரல் ஷார்ப். சகோதரிகள் இணைந்து பாடும்போது தங்கள் குரல்கள் ஒரே லெவலில் இருக்க வேண்டும் என்று பிரியப்படுவார்கள். 'பாஸ் ட்ரிபின்' மூலம் இந்தக் காரியத்தைச் சிரமப்பட்டு நிறைவேற்றுவேன். இப்போது இதற்கெல்லாம் நவீன கருவிகள் வந்துவிட்டன" என்கிறார் இந்தத் துறையில் நீண்ட அனுபவம் உள்ள கோபி.

— ஜி.எஸ்.எஸ்.

மாவுக்க

ஆர். சுசீலா

எங்களுக்குத் திருமணமாகி பத்து வருடங்கள் ஆகிறது. குழந்தைகள் இல்லை. நாட்டு வைத்தியத்திலிருந்து, அக்யுபிரஷர் வரை எல்லா மருத்துவங்களையும், தெருக் கோயில் பிள்ளையார் உம்மாச்சியிலிருந்து மெக்கா மெதினா வரை A to Z தெய்வங்களையும் ஐஸ் வைத்துப் பார்த்தாயிற்று... பலன் பூஜ்யம்!

இந்தச் சமயத்தில், ஒரு ஞாயிற்றுக்கிழமை அன்று என் தாயார் ஃபோன் செய்து, நெமிலியில் உள்ள கிருஷ்ணன் கோயிலுக்குப் போய், தொட்டில் கட்டினால் குழந்தை வரம் கிடைக்கும் என்று நம்பிக்கை தந்து உடனே புறப்பட்டு வரச் சொன்னார்கள்.

என் கணவரும் சம்மதித்தார். உடனே புறப்பட்டோம். அம்மா வீட்டுக்குப் போகும் ஐடியா இல்லாததால் டிபனுக்கு இட்லி மாவு அரைத்து வைத்திருந்தேன். அது இங்கே இருந்தால் வீணாகிவிடுமே, அங்கே எடுத்துப் போனால் அம்மாவுக்கு உதவியாக இருக்குமே என்று நினைத்து, மாவை ஒரு பெரிய எவர்சில்வர் தூக்கில் போட்டுக் கொண்டு கிளம்பினேன்.

ஸ்கூட்டரின் முன் பகுதியில், கால்களுக்கு இடையே என் கணவர் வைத்துக் கொண்டார்.

ஆதம்பாக்கத்திலிருந்து அரும்பாக்கம் பயணம். அதுவும் கொளுத்தும் வெயிலில்!

ரிங் ரோட்டில் போய்க் கொண்டு இருக்கும்போது 'டமார்' என்று சத்தம். நான் முதலில் 'டயர்' வெடித்து விட்டது என்றுதான் நினைத்தேன். ஆனால் வண்டி தட்டுத் தடுமாறி சாய, சரளைக் கற்கள் குவிக்கப்பட்டிருந்த மேட்டில் விழுந்தோம். எனக்குக் காலில் அடி...

சமாளித்துக் கொண்டு எழுந்து பார்த்தால்... ஓ! என்று பயத்தில் அலறிவிட்டேன். என் கணவரின் கை, சட்டை, முகம், தலை எல்லாம் மாவாபிஷேகம்! வெண்ணெய்



திருமஞ்சனம் செய்யப்பட்ட ஆஞ்சனேயர் போல நின்று கொண்டிருந்தார்.

விஷயம் இதுதான்! ஏற்கெனவே புளித்து, பொங்கியிருந்த இட்லி மாவு, வண்டி சூடு, வெயில் தாங்காமல் மேலும் பொங்கியிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட வெப்பம் உருவானதும், தூக்குக்குள் ப்ரஷர் ஏற்பட்டு மாவு மூடியைத் தூக்கிக் கடாசிவிட்டு, வெளியே சிதற.. விபத்து!

அதோடு போயிருந்தால் பரவாயில்லையே!

வண்டி கை மேல் வேகமாக சாய்ந்ததில் அவருக்கு மணிக்கட்டில் இலேசான ஃபிராக்சர் வேறு! என் கணவரின் கை புசுபுசுவென வீங்கிவிட, உடனே டாக்டரிடம் போய் மாவுக்கட்டுப் போட்டுக் கொண்டு அம்மா வீட்டுக்குப் போனோம்.

"சுவாமிக்குத் தொட்டில் கட்டச்


...டுத் தொட்டில்

கல்கி – ரமணி Vs ரமணி இணைந்து வழங்கும் 'தம்பதி தமாஷ்' தீபாவளிப் பரிசுப் போட்டியில் ரூ. 2000 மதிப்புள்ள பட்டுப் புடைவையை ஆறுதல் பரிசாகப் பெறும் கட்டுரை!



சொன்னா, மாப்பிள்ளையே கையிலே தொட்டில் கட்டிண்டு வந்துட்டாரே!" என்று வருத்தம் கலந்த பரிகாசம் செய்தார்கள் என் பெற்றோர்கள்.

இப்போதெல்லாம் அம்மாவுக்கு ஏதாவது எடுத்துக் கொண்டு கிளம்பினால், மெட்டல் டிடக்டர் வைத்து, பரிசோதனை செய்து விட்டே அனுமதி தருகிறார்...



என்ன தப்புக்காக இந்த பனிஷ்மென்ட்?

சங்கீதக்காரங்க தொல்லை டூ மச் ஆகிட்டு வருது! போன வாரம் என்னை கல்கி லேருந்தே ஓரங்கட்டினது போதாதுன்னு ஹிண்டு 'ஃபோலியோ'ல ஆர்டிகல்ஸ் வேற எழுதிருக்காங்க- பாம்பே ஜெய்ஸ்ரீ, டி.எம். கிருஷ்ணா, சஞ்சய் சுப்ரமண்யன்! இப்படிப் போட்டிக்கு வந்தா அப்புறம் நான் கச்சேரி பண்ண வேண்டியிருக்கும்னு சிவியரா வார்ன் பண்றேன். யார் உனக்கு சான்ஸ் குடுப்பாங் கன்னு கேட்கமாட்டீங்க- பிகாஸ் என்னைவிட மோசமா பாடறவங்ககூட கச்சேரி பண்ணிட் டிருக்காங்க.

பட் ஜோக்ஸ் அபார்ட், இந்த மூணு பேரும் நல்ல ஃப்ளோவோட ரொம்ப அழகா எழுதி ருக்காங்க- 'தி ஸ்மெல் அஃப் பேகலை'ன்னு சஞ்சய் யூஸ் பண்ணியிருக்கற ஒரு ஃப்ரேஸை ரொம்ப ரசிச்சேன்.

கச்சேரி கலாட்டாக்கு நடுவுல கிறிஸ்மஸ் காரல் கோஷ்டி கானமும் மெட்ராஸ்ல உண்டு. தூங்கிட்டேயிருக்கும் போது ரொம்ப ஜென்டி லான குரல்ல 'சைலன்ட் நைட்' பாடக்கேட்டு ராத்திரி ஒன் ஓ கிளாக் எழுந்ததுண்டா நீங்க...? அழகான எக்ஸ்பீரியன்ஸ் அது.

சுமி சூப்பர் மார்க்கெட்

பாடற குரூப் பாடிட்டுக் கடந்து போனப்பறம் ரொம்ப நேரம் தூக்கம் வராது. முக்கால்வாசிப்பேர் டீ.வியை ஆன் பண்ணிட்டு உட் கார்ந்துடுவாங்க. சில பேர் டீப்பா திங்க் பண்ண ஆரம் பிச்சுடுவாங்க-

வீரப்பன் காட்டுல இருந் தப்போ ராஜ்குமார் அதைத் தான் பண்ணிருக்கார். காட்டு ரொடீன் இதுதான்:

நாலு மணிக்குத் திருப் பள்ளியெழுச்சி! இரண்டு மணி நேரம் யோகா. அப்புறம் பிஸ்கட், பால் பிரேக்ஃபஸ்ட், அரசு தூதர்கள் கொண்டு தர்ற ரிலிஜியஸ் புஸ்தகம் படிக்கறது. மத்தியானம் லஞ்சுக்கு அப் புறம்தான் ரொம்ப போர் அடிக்குமாம். தியானம் பண்ண டிரை பண்ணுவாராம். ஈவினிங் அஞ்சு மணிக்கு சின்ன வாக். ஏழு மணிக்குச் சாப்பாடு; எட்டு மணிக்கு வீரப்பன் கூட்டாளிகள் தூங்கிடு வாங்களாம். அப்புறம்தான் கன்னட சூப்பர் ஸ்டார் யோசிப்பாராம்... 'இது ஏன் நடந்தது? எனக்கு மட்டும் ஏன் நடந்தது? என்ன தப்பு பண்ணினதுக்காக இந்த பனிஷ் மெண்ட்?' இப்படி நைட்டெல்லாம் யோசிச்சு யோசிச்சு கடைசில தன்னைத் தானே இன்னும் நல்லா புரிஞ்சுக்கிட்ட தாச் சொல்றார்.

'உனக்கெப்படி தெரியும்? பெங்களூர் போயிருந்தியா? ராஜ்குமார் பத்தி ஏதாவது தொடர் எழுதப் போறியான்னெல்லாம் கேட்பீங்களே... அண்ணன் ராஜ்குமாரே இதை யெல்லாத்தையும் ஒரு பேட்டில சொல்லிருக் கார். நியூஸ்வீக்ல (டிசம்பர் முதல் வாரம்) லாஸ்ட் பேஜ்ல பேட்டி வந்திருக்கு!

போஸ்டல் ஸ்டிரைக்கைப் பொருட் படுத்தாம கொரியர்ல கவிதை அனுப்பி யிருக்கார் ஆர். ரத்தினசாமி:

சமயத்தில்
என் சின்னமகள் சுவாதியுடன் சேர்ந்து
என்னையும்
ஏமாற்றிவிடுகிறது
தொலைக்காட்சித் தொடரில் வரும்
தொலைபேசி அழைப்பு!

கியூட்! ஆனா அடுத்த லெட்டர்ஹெட்ல போட்டுக்கலாமான்னு கேட்டு ஒரு கவிதை அனுப்பியிருக்காரு பாருங்க...!

மிஸ்டர் ரத்தினசாமி! லெட்டர்ஹெட்ல அட்ரஸ்தான் அச்சடிக்கணும்!

— **சுமி**

அழைக்கிறது அமெரிக்கா!

கல்கி - டயானா வொர்ல்ட் டிராவல் இணைந்து வழங்கும்

குவிஸ் போட்டி – 7

"இவ்வளவு ஈஸியா கேள்விகள்லாம் இருக்கே" என்று சந்தோஷபட்டிருப்பீர்கள். யெஸ். உங்கள் சந்தோஷமே முக்கியம். முந்தைய வாரங்களில் செய்ததைப் போல விடைகளை கூப்பனில் எழுதி மற்ற கூப்பன்களோடு பூட்டி வையுங்கள். இருபத்தி ஆறு வார இறுதியில் எல்லா கூப்பன்களையும் எங்களுக்கு அனுப்புங்கள். இதில் மிக அதிகமான கேள்விகளுக்குச் சரியான விடை எழுதும் ஒரு நபருக்கு

அமெரிக்கப் பயணம் பரிசு!

இரண்டாவது பரிசு **ஐரோப்பா பயணம்**

மூன்றாவது பரிசு **மலேஷியா–சிங்கப்பூர் பயணம்**

இந்த மூன்று நிலைகளிலும் ஒருவருக்கு மேல் சரியான பதிலை எழுதியிருந்தால் இருக்கவே இருக்கிறது குலுக்கல் முறை! பயணப்பரிசு பெறாதவர்களுக்கு அமரர் கல்கியின் நூல்கள் உண்டு.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி! ஓ.கே. ரெடி ஸ்டார்ட்!

குவிஸ் கூப்பன் – 7

1) சுதந்திர இந்தியாவின் இரண்டாவது பிரதம மந்திரி யார்?

2) சந்திரனில் காலடி வைத்த இரண்டாவது மனிதனின் பெயர் என்ன?

3) ராணி இரண்டாம் எலிசபெத்தின் கணவரின் பெயர் என்ன?

4) 'சயாம் இரட்டையர்கள்' வெகுபிரபலம். அவர்கள் பிறந்த நாட்டின் தற்போதைய பெயர் என்ன?

5) நோபல் பரிசு பெற்ற இரண்டாவது இந்தியர் யார்?

6) எவரெஸ்ட் சிகரத்தை முதலில் ஏறிய டென்சிங்கோடு கூடச் சென்று அந்த சாதனையைப் புரிந்தவர் யார்?

விடைகள்:

1)..

2)..

3)..

4)..

5)..

6)..

பொங்கலோ பொங்கல்!
இளமையோ இளமை!

பொங்கல் ஸீஸனு வருதாங்காட்டியும், 14-1-2001
கல்கி பொஸ்தகத்தை 'இளமை ஸ்பெசல்' ஆ
போடலான்னு ஐடியா பண்ணிகீறோம் இன்னா,
ஐடியா ஒ.கே.வா?



இப்போ விசயத்துக்கு 'ஸ்ட்ரைய்ட்' ஆ
வர்றேன். உங்க வீட்டு இளங்கன்னுங்க
ஏதாவது கலாட்டா பண்ணி தூள் கிளப்பி
இருக்குதா, எப்பனாச்சும்? ஆங்... அந்த
கலாட்டாவைப் பத்தி எழுதி டிசம்பர்
30ந் தேதிக்குள்ளாற 'இளமை
கலாட்டா'ன்னு போட்டு அனுப்பிச்சுடுங்க. ஜோரா
கீற கட்டுரை எல்லாம் கல்கி பொஸ்தகத்தில வரும்
ரைட்டா நய்னா?

கல்கி ஸ்போக்ஸ்மேன் கபாலி

போஸ்டல் ஆளுங்க பேஜார் பண்ணா, இருக்கவே இருக்குது
ஏதோ பூச்சி பேரில ஒரு மெயில்... இன்னாது... ஆங் ஈ.மெயில்.
அட்ரஸ் : kalki weekly@ vsnl.com அதில் அனுப்சிடுங்க!

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

Our Latest Releases.



Album Title:
Legends
Lalgudi G. Jayaraman

CD Coupling Nos:
CDNF 147947 - 51

Cassette Coupling Nos:
STC 857149 - 53



Album Title:
Thillanas of
Lalgudi G.Jayaraman.
by Lalgudi G. J. R.Krishnan &
Lalgudi Vijayalakshmi

Cassette Coupling No:
STHVS 857168

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka